களத்தில்

தமிழர் தாயகத்தின் புவியியல் தனித்துவத்தையும் ஒருமைப்பாட்டையும் சீர் குலைத்து, தமிழின் தேசிய வாழ்வைச் சிதறடிப்பதில் சந்திரிகா அரசு புரிய வரலாற்றுச் சாதனைகளைப் புரிந்து வருகிறது. சமாதானத்திற்கான போர் என்றும், தமிழரை விடுதலை செய்யும் படையெடுப்பு என்றும் உலகத்தின் கண்களில் மண்தூவிவிட்டு எமது வரலாற்றுத் தாயகத்தை ஆக்கிரமித்து வருகிறது. சந்திரிகா அரசின் தீர்வுத் திட்டமும் தமிழர் தாயகத்தின் புவியியல் கட்டமைப்பை மாற்றியமைப்பதையே அடிப்படை அம்சமாகக்கொண்டது.

தமிழீழத் தேசியத் தலைவர்
வேதநாயகம் பிரபாகரன் அவர்கள்

(29.07.1999) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள் (191) அன்பளிப்பு : 60 p

சுதந்திரம் கேட்டால் சோறில்லையா?

- தமிழீழமெங்கும் மக்கள் எழுச்சி -

1919ஆம் ஆண்டு பாரிஸில் இடம்பெற்ற சர்வதேச நாடுகளின் சமாதான மகாநாட்டில் போர்க்குற்றங்கள் பற்றிய பட்டியல் தயாரிக்கப்பட்டது. அதில் திட்டமிடப்பட்ட பட்டினியை மக்களுக்கு ஏற்படுத்துவது போர்க்குற்றம் என பிரகடனப் படுத்தப்பட்டது. 1949 ஜெனிவா உடன்பாட்டின் முன்றாம் பிரிவின் கீழ் பட்டினியை நேரிடையாகவோ திட்டமிட்ட வழி முறைகள் ஊடாகவோ ஏற்படுத்துவது குற்றம் என வரையறை செய்யப்பட்டது. இங்கே குற்றம் எனக்கூறுவது போர்க் குற்றமே என அமெரிக்க சட்டநிபுணர் பேராசிரியர் ஜோர்டன் ஜே.பஸ்ட் கூறுகின்றார்.

சிங்கள அரசு கடந்த பல வருடங்களாக அமுல்படுத்திவந்த திட்டமிடப்பட்ட உணவு மற்றும் மருத்துவ விநியோகத் தடை, அதன் கர்மையான வடிவத்தை வன்னியில் எடுத்துள்ளது. வன்னியின் பட்டினி நிலவரம் பற்றியும் மருத்துவ அவசியம் பற்றியும் அப் பிராந்திய அரச அதிபர்களும் சர்வதேச நிறுவனங்களும் மதத் தலைவர்களும் பகிரங்கமாகக் கூறிவருகின்றனர்.

ஜூன் 26ஆம் திகதிக்கு பிற்பாடு வன்னிப் பிராந்தியத்திற்கான உணவு, மருத்துவ விநியோகத்தை சிங்களப்படைகள் தடை செய்துவிட்டன. பாப்பாமடு ஊடாக இடம்பெற்ற போக்குவரத்துக்களை இராணுவக் காரணங்களுக்காக இழுத்து மூடிய சிங்களப்படைகள், கடந்த ஒருமாத காலமாக திட்டமிட்ட பரப்புரை உத்திகளின் மறைவில் ஒரு போர்க்குற்றத்தை நடாத்திவிட முயல்கின்றன.

இத் தடை நடவடிக்கையினால் இதுவரை 11 நோயாளர்கள் மரணித்துவிட்டனர் எனவும், உணவுக் கையிருப்புக்கள் முடிவடைந்துள்ளன எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. பட்டினி நிலவரம் அவதானிக்கப்படுவதாக கிளிநொச்சி அரச அதிபர் இராச நாயகம் அறிவித்துள்ளார். தேவன்பிட்டி பகுதிகளில் உள்ள மரநிழல்களிலும் வவுனியாக்களிலும் வாழும் சுமார் 4000 இடம்பெயர்ந்த தமிழ்மக்கள் பட்டினி நிலவரத்தில் உள்ளன் என மன்னார் ஆயர் பீற்றர் இராயப்பு ஜோசப் அறிவித்துள்ளார். கடந்த ஐந்து மாத காலமாக திட்டமிட்ட முறையில் சிங்கள இராணுவம் மேற்கொண்ட தடை நடவடிக்கைகளினால் 1266 பொதிகள் கொண்டவைகள் உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்கள் வன்னிக்கு செல்லாது தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதை வன்னியா அரச அதிபரும், வன்னிக்கான அத்தியாவசிய உணவுப் பொருட்கள் விநியோகத்தை ஒன்றிணைப்பதற்கான அதிகாரியுமான கே.கணேஸ் உறுதிப்படுத்தியுள்ளார். அவரது கணிப்பீடு வன்னியில் வாழும் மக்களின் எண்ணிக்கை 3,73, 365 என்ற தரவின் அடிப்படையில் அமைந்தது. ஆயினும் வன்னியின் மக்கள் தொகை 5,00, 000 மேற்பட்டது என்பதும், மக்கள் எண்ணிக்கையைக் குறைத்துக் காட்டுவதன் மூலம் அனுமதிக்கப்படும் உணவு மற்றும் மருத்துவப் பொருட்களின் பற்றாக்குறைக்கு புத்திசாலித்தனமான விளக்கமளிக்கும் முயற்சிதான் என்பதும் அவதானிக்கத்தக்கது.

தொடர்ச்சி 8ம் பக்கம்

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

நாம் பிறந்த மண்- எம்மினிய தாயகம்- நாம் வாழ்த்த மண்- எம்முயிர்த் தமிழீழம் உலக அங்கீகாரத்தை நாடி நிற்கும் நேரம் இது. கோடி சூரியர் கூடி வரினும் எங்கள் மாவீர் தியாக தீபத்தின் பிரபைக்கு முன்னர் ஒளிபிழம்பர் எனப் பாவாரம் பாடி நிற்கும் தமிழீழா, அந்த மாவீர் கனவு நனவாக மாறி வரும் இவ்வேளையில் எம் தாய் மண்ணின், தமிழீழத் திருநாட்டின் விடுதலையின் விரைவுக்கு எம் பணி உடன் தேவையான காலம் இது. விழித்தெழுவோம். விரைந் தெழுவோம். தாயகம் காக்கும் பணி எம் புலம்பெயர் வாழ்வி லும் எமக்கு உண்டு என்பதை மறந்து விடாது- மறுக்காது பணி செய்யப் புறப்படுவோம். எம் தமிழீழ உடன் பிறப்புக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேசப் பணிமனைகளூடன் இணைந்து ஆற்றிவரும் தேசப்பணியில் நாமும் உடன் பங் காளிகளாகுவோம்.

கூடுவோம் கொடுப்போம் தாயகம் காப்போம்

எம் பணிக்கென இரு பெரும் தளங்கள் உண்டு. முதலா வது தாயக மீட்புப் போருக்கு உதவுவது. அடுத்தது எங்கள் தாயக விடுதலைக்கு உலக அங்கீகாரத்தை கோரி பெற்றுக் கொடுப்பது. இவை இரண்டையும் எய்துவதற்கான செயற்திட் டங்கள்- பல்வேறு வழிகளில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேசப் பணிமனைகளால் முன்னெடுத்து செல்லப்பட்டுக் கொண்டிருக்கிறது.

தாயக மீட்புப் போருக்கு உதவுவது என்பதில் மூன்று உட் தளங்கள் உண்டு. ஒன்று, விடுவிக்கப்பட்ட நிலையிலும், விடு விக்கப்படும் நிலையிலும் உள்ள தமிழீழத் தேசத்தின் தேசிய பாதுகாப்புக்கு உதவுவது. அடுத்தது சிறீலங்கா ஆக்கிரமிப்பு அரசாங்கத்தின் அரசியல் திட்டங்களான- தமிழ் இனஅழிப்பு- தமிழர் தாயக உட்கட்டுமான அழிப்பு- தமிழர் நாளாந்த வாழ் வுக்கு அத்தியாவசியமானவற்றை தடைசெய்தல்-போன்ற பல செயற்பாடுகளால் சாவின் விளிம்பில் தத்தளிக்கும் தமிழீழ மக்களின் புனர்வாழ்வு- புனர்நிர்மாணம் என்பவற்றுக்கு உதவு வது. எங்கள் தமிழீழத் தாயகத்தின் உட்கட்டுமான வளர்ச் சிக்கு உதவுவது. இவை அனைத்துக்குமே மறியும் நிதியும் தேவை. 'மனம் உண்டானால் இடமுண்டு' என்று பழமொழி பேசிய நம் மனம் நாம் பேசிய பழமொழியின் அர்த்தத்தை உலகிற்கு உணர்த்த வேண்டிய நேரம் இது. அதிலும் குறிப் பாக வான் படை கொண்டு சிங்கள அரசாங்கம் தமிழ் மக்க ளுக்கு நிதம் நிதம் செய்யும் கொடுமைகளை தடுப்பதற்கு நாம் நமது தமிழீழ வானினை பாதுகாக்கும் வலிமையை எம் கரம் கொண்டு வேகப்படுத்த வேண்டிய பொறுப்பினை கமந்த வர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அல்லாமே எம் மக்களுக்கு உரிமையுடன் உதவி கோர எம்மைத் தவிர வேறு யாரும் இல்லை. ஆதலால் அவர்கள் துயர்துடைப்பதிலும் முழுப்உடன் பங்கேற்க வேண்டிய கடமையுள்ளவர்களாகவும் நாம் இருக்கின்றோம். இதனால் கொடுத்தல் என்ற உயர் பண் பின் மூலம் எம் இனத்தை, தாயகத்தை பாதுகாக்க வேண்டிய உரிமையும் கடமையும் உள்ளவர்களாக காலம் எம்மை மாற்றி நிற்கிறது. கொடுத்தல் என்பது இன்றைய காலகட்டத் தில் எம் கிட்டிய குடும்ப உறுப்பினர்கள் உற்றார் உறவினர் கள் நண்பர்கள் பழகியிரித்த எங்கள் அயல்வர்கள் தமிழீழ மண்ணில் சிறீலங்காவின் இனஅழிப்பில் இருந்து இனத்துள் புறத்தலில் இருந்து உயிர் தப்பி உடல் பிழைத்து வாழவதற்கு இன்றியமையாத தேவையாக மாறி உள்ளது. ஆகவே இன் றைய கால கட்டத்தில் ஆயிரம் கோயில்கள் கட்டி தேடும் புண் ணியத்தை விட பல்லாயிரம் மடங்கான புண்ணியத்தை தமி ழீழ தாயக மீட்புக்கு அள்ளிக் கொடுத்தலால் தேடும் நிலை தோன்றியுள்ளது. இந்த யதார்த்தத்தை உணர்ந்தவர்களாக புலம்பெயர் வாழ்வின் பல்வேறு துன்பங்கள் இன்னல்களுக்கு மத்தியிலும் கொடுத்தல் மூலம் தாயகம் காக்கும் புனிதப் பணியில்- தாயக மீட்புப் பேரில்- நாம் உலகின் எந்த மூலை யில் வாழ்ந்தாலும் பங்கேற்போமாக. இதற்காக காலத்துக்கு காலம் செயற்படுத்தப்படும் செயற்திட்டங்களில் நாமும் இயன்ற அளவில் இணைவோமாக. தற்பொழுது வான் பாதுகாப்பு- துயர் துடைப்பு- சர்வதேச சிறுவர் அபிவிருத்தி ஆண்டு ஆகிய மூன்று அதிமுக்கிய செயற்பாடுகள் எம் தமிழீழ மக்களின் பாதுகாப்பையும் நல்வாழ்வையும் வளப்படுத்த அவசியமான திட்டங்கள் செற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இத்திட்டங் களை கொடுத்தல் மூலம் வெற்றியேற வைக்க வேண்டியது நம் கடமை.

புலம்பெயர் தமிழர்களாகிய நமது இரண்டாவது பெரும் பணித்தளம் நமது தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு சர்வ தேச அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுப்பது. இதிலும் மூன்று உட்தளங்கள் உண்டு. முதலாவது நாம் சுயநிர்ணய உரிமை யுள்ளவர்களாகத் திகழ்கின்றோம் என்பதை எமது சொல்லா லும் செயல்லும் உலகிற்கு உறுதிப்படுத்தல். இரண்டாவது தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தின் தேவையினை அவசியத்தினை உண்மைநிலையினை உலகிற்கு வெளிப் படுத்துவது. மூன்றாவது ஆக்கிரமிப்பு சிறீலங்கா அரசாங்கம் தனது தமிழின அழிப்பு நடவடிக்கைகளை நியாயப்படுத்தவும் அதற்கு உதவிகளை உறுதிப்படுத்தவும் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு எதிராகவும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும் பரப்புரை செய்து தமிழீழ மக்களின் மேல் தான் நடாத்தி வரும் மனிதாயத்திற்கு எதிரான குற்றங் களையும் தமிழீழ மண் மேல் தான் நடாத்தி வரும் அட்டூட் மான ஆக்கிரமிப்பையும் மறைக்க எடுத்து வரும் அனைத்து முயற்சிகளையும் முறியடப்பது.

இதில் முதலாவது, நாம் சுயநிர்ணய உரிமையுள்ளவர்கள் என்பதை எமது சொல்லாலும் செயலாலும் வெளிப்படுத்து வது. ஆம்! சுயநிர்ணய உரிமை என்பது நமது அரசியல் எதிர் காலத்தை நாமே நிர்ணயிக்கும் உரிமை. இந்த உரிமையைக் கொண்டு தமிழீழ மக்களாகிய நாம் 1977 தேர்தல் குடியெப் பத்தின் மூலம் எமது அரசியல் எதிர்காலத்தை நிர்ணயித்து விட்டோம். நமது தமிழீழத் தாயகத்தை மீளவும் அமைத்தல் என்பதே எமது பாதுகாப்பான அமைதியான வாழ்வுக்கான ஒரே வழி என்பதே அந்த தெளிவான முடிவு. அந்த உறுதியான மக் களானைக்கு ஏற்ப இன்று தமிழீழத் தாயகம் மீட்கப்பட்ட நிலையிலும் அந்த மீட்பு வேலையை நிறைவு செய்யவிடாது சிறீலங்கா தடுத்து ஆக்கிரமித்த நிலையிலும் காணப்படுகிறது. இதுதான் உண்மை நிலை. தமிழீழம் அங்கே இயங்கிக் கொண்டிருக்கிறது. இனித்தான் அதை நிறுவவேண்டும் என சர்வதேச மக்களிடை உள்ள தப்பபிப்பிராயத்தை மாற்றி தமி ழீழ மக்கள் தமிழீழத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அதனை சிறீலங்கா சர்வதேச சட்டங்களுக்கு எதிரான வகை யில் ஆயுதபடைபலம் கொண்டு ஆக்கிரமித்து நடுத்து வரு வதே இன்றைய பிரச்சினை என்பதை உலகிற்கு உறுதியுடன் எடுத்து விளக்க வேண்டிய அதிமுக்கிய பொறுப்புள்ளவர் களாக நாம் உள்ளோம். இதற்கு நாம் அதிக அளவில் ஒன்று திரண்டு எமது குரலின் தெளிவை உலகிற்கு உறுதி செய்ய வேண்டும்.

இரண்டாவதாக இயங்கிக் கொண்டிருக்கும் தமிழீழத்தை உலகின் கண்களில் இருந்து மறைக்க அதனையும் சிறீலங்கா வின் ஒரு பகுதியாக கூறி எமது மண்ணின் மேலும் மக்கள் மேலும் சிறீலங்கா நிகழ்த்து வரும் யுத்தமே தமிழீழ மக்களை தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தின் மூலம் நம்மை யும் நம் தேசத்தையும் பாதுகாக்கவேண்டிய நிலைக்குத் தள் ளியுள்ளது. இது சர்வதேச சட்டங்களுக்கு முற்றிலும் இசை வான இயற்கைச் செயற்பாடு. ஒரு மனித குலம் தன் சொந்த தாயகத்தில் பாதுகாப்பான அமைதியுடன் வாழ எடுக்கும் இந்த நடவடிக்கையை அங்கீகரிக்க உலக நாடுகள் காட்டும் கால தாமதம் தான் சிறீலங்காவுக்கு தமிழின அழிப்பின் மூலம் இந்த நடவ டிக்கையை மாற்றியமைக்கலாம் என்ற கால அவகாசத்தையும் உற்சாகத்தை யும் கொடுக்கிறது சிறீலங்காவுக்கு உதவி வழங்கல் என்பது தமிழீழ மக்களின் கழுத்தைத் திருகுவதற்கு ஆதரவு அளித் தல் என்பதாகவே அமைகிறது. சிறீ லங்காவுக்கு ஆயுத இராணுவ உதவி கள் வழங்கல்-விற்றல் என்பன ஐக்கிய நாடுகள் சபையின் சட்டங்களுக்கு எதி ராக இன அழிப்புக்கு ஆதரவு கொடுத் தல் பங்கேற்றல் என்ற சர்வதேச சுற் றச் செயலாக உள்ளது. இந்த உண் மையை புலம்பெயர் தமிழர்களாகிய நாம்தான் உலகிற்கு கட்டிக்காட்ட வேண்டும். இதற்கு தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் தேவையினை நாம் எந்த அளவுக்கு வலியுறுத்துகின்றோமோ அந்த அளவுக்குத்தான் உலகு சிறீலங்காவுக்கு தான் செய்யும் உதவிகள் இனஅழிப்பு ஒன்றுக்கான ஆதரவு என்ற நிலையை ஏற்கும்.

மூன்றாவதாக தமிழீழ மக்களை தினம் தினம் சுவிர்க் மின்றி இனக்கொலை இனத்துன்றுத்தல் செய்துவரும் சிறீ லங்கா அதனை மூடிமறைத்து நியாயப்படுத்தும் நடவடிக்கை யாக சமாதானத்திற்கான யுத்தம் என்ற பித்தலாட்டங்களை யும் தமிழீழ மக்களின் உயிர் அர்ப்பணிப்புகளாலும் தியாகங் களினாலும் வளர்ந்து நிற்கும் அவர்களின் தேசிய பாதுகாப்பு அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை பயங் கரவாதிகள் எனவும் சர்வதேச பரப்புரைகளை பலமல கொண்டு செய்து வருகிறது. இது சிறீலங்காவின் இராணுவ நடவடிக்கையின் சர்வதேச பரிமாணம். இதனை சிறீலங்காவின் பரப்புரை என்பதைவிட, சிறீலங்காவின் தமிழீழ மக்களுக்கு எதிரான யுத்த தந்திரோபாயமாகவே கருதவேண்டும். இந்த யுத்த தந்திரோபாயத்தை உடைத்தெறிய புலம்பெயர் தமிழர் களாகிய நாம் பெரும் அளவில் ஒன்று திரண்டு சர்வதேச மக்களுக்கு எமது எதிர் எமது மக்களுக்கு செய்துவரும் கொடுமைகளை எடுத்தியம்பவேண்டும். செம்மணி மனிதப் புதைகுழிகளின் உண்மைகள் சத்திரிகளை மிரளவைப்பத் தின் ஹிட்லர் என்ற மகுடத்தை அவர் தலையில் சூடும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை. ஆனால் செம்மணி மனிதப் புதைகுழிகள் சத்திரிகை செய்துள்ள - செய்து வரும் கொடுமைகளின் ஒரு துளி என்பதை உலகிற்கு நாம் எடுத்து கூறும் வேளத்தில்தான் சிங்கள பௌத்த இனவெறி சிறீலங்கா அரசுகள் தமிழீழ மக்களுக்கு இழைத்துள்ள உலக வரலாறு காணாத கொடுமைகளை உலக மக்கள் கண்முன்னாற்று தமி ழீழ மக்களின் பாதுகாப்புக்கும் அமைதிக்கும் அவர்கள் தங் கள் தமிழீழத் தேசத்தை மீள அமைத்துள்ளமையை சிறீ லங்கா தடுக்காது அதனது ஆக்கிரமிப்பு படைகளை தமிழீழ மண்ணில் இருந்து விலகுமாறு குரல் எழுப்பவர்.

இவைகளை நாம் உலகிற்கு தெளிவாக்க பெரும் அளவில் ஒன்றுகூட வேண்டும். சர்வதேச பணிமனைகளால் ஒழுங்கு செய்யப்படும் நிகழ்ச்சிகளில் எல்லாம் பெரும் அளவில் கலந்து கொள்ள வேண்டும். இங்கையில் ஆவணி 9தும் (09.08.1999) ஜெனிவாவில், நுக்கிய நாடுகள் சபை முன்றலில் நடைபெற உள்ள தமிழீழ மக்களின் ஒன்றுகூடல் புலம்பெயர் தமிழீழ மக்களுக்கு மீண்டும் தம் தேசியத்தை சுயநிர்ணய உரிமையை தாயகப்பற்றை சகோதரவாஞ்சையை உலகிற்கு வெளிப்படுத்த கூடிய அமைத்துக் கொடுக்கிறது. அங்கு பெரும் அளவில் ஒன்று திரண்டு தமிழீழ மக்களின் துயரவாழ் வையும் அது மாறுவதற்கு தமிழீழத் தேசத்திற்கு உலகு அங் கீகாரம் அளிக்க வேண்டிய தேவையையும் எடுத்துரைத்தல் ஒவ்வொரு தமிழீழப் புலம்பெயர் மக்களதும் கடமையாக உள்ளது.

கூடுவோம். கொடுப்போம். இயங்குகின்ற தமிழீழத்தில் வாழும் தமிழீழ மக்களின் சாதாரண வாழ்வுக்கு பாதை விடு சிங்கள சிறீலங்காவின் ஆக்கிரமிப்பு படைகளை விலக்க உத வுவாறு உலகை கோருவோம். எம் மக்கள் உயிர் தாங்க நாமே உதவவேண்டும். எம் தேசம் விடுதலை பெற நாமே எம் தமிழீழ விடுதலைப் புலிகளின் பலத்தை அதிகரிக்க வேண்டும். இவை காலம் எமக்கு இடும் கட்டளை. அதனை ஏற்று, கொடுப்போம், கொடுப்போம் விடுதலை மலியவில் ஒன்று கூடுவோம்.

AUSTRALIA
TCC
P O Box 375,
Preston,
Victoria 3072.

CANADA
WTM
64 Eaton Avenue,
Toronto,
Ontario M4J 2Z5.

DENMARK
LTTE
P.O.Box 47,
7400 Herning.

FRANCE
TCC
341 Rue Des
Pyrenees,
75020 Paris.

GERMANY
TCG
Postfach 340251,
51624 Gummersbach.

ITALY
TCC
Via Vittorio Di Pavia No14,
90138 Palermo.

NETHERLANDS
TCC
Hertoginnelaan-106,
2517 EL Den Hagg.

NORWAY
TCC
P.O.BOX 1699 Vika,
0110 Oslo.

SWITZERLAND
WTTC
Josee Str - 110,
8005 Zurich.

SWEDEN
TCC
Glomminga Grand-25,
3rd Floor,
16362 Spanga.

UNITED KINGDOM
UTO
Eelam House,
202 Long Lane,
London SE1 4QB.

U.S.A
WTCC
170-10 Cedarcroft Road
Suite 1-L, Jamaica
New York 11432.

அகதிகளாக அலைவது தமிழரின் வாழ்வாகியது

இலங்கை சுதந்திரம் அடைந்த காலம்தொட்டு தமிழர் தேசியத்தை சிதைத்துவிடும் வகையிலான நடவடிக்கைகளை காலத்துக்கு காலம் சிங்கள ஆட்சியாளர்கள் மேற்கொண்டு வந்துள்ளனர். தமிழரின் பாரம்பரிய பிரதேசங்களில் இருந்து அவர்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றி அப்பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களை அமைத்தல் மற்றும் கல்வியில் தமிழர்கள் புறக்கணிப்பு வேலைவாய்ப்புகளில் புறக்கணிப்பு என இவை அமைந்திருந்தன. தமிழரினுடைய போராட்டம் எழுபதுகளின் முற்பகுதியில் ஆயுதப்போராட்டமாக பரிணாமம் பெற்ற போது நேரடியான இராணுவ அழுத்தங்கள் பிரயோகிக்கப்படலாயின. அவ்வப்போது இனப்படுகொலைகளும் ஏனைய இராணுவ வன்முறைகளும் கட்டவிழ்த்துவிடப்பட்டன. ஆனால் சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் தான் தமிழ் மக்களின் மீது மிகப்பெரிய அளவில் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளன. மக்களின் சமூக பொருளாதார நிலை என்றுமில்லாத வகையில் சிதைக்கப்பட்டுள்ளன- சீரழிக்கப்பட்டுள்ளன.

சந்திரிகாவைப் பொறுத்தமட்டில் தமிழ் மக்களினுடைய தேசியத்தை சிதைக்கும் நோக்குடன் அவர்களை தொடர்ச்சியாக இடம் பெயர வைத்து சமூக வாழ்வை சீரழித்து ஒரு நாடோடிக் கூட்டமாக மாற்றும் முயற்சியில் இரு வேறு வகையிலான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். அதாவது இராணுவ ரீதியிலான அழுத்தங்களையும், பொருளாதார ரீதியிலான அழுத்தங்களையும் பிரயோகித்து வருகின்றார். இவற்றிற்கு கடந்த நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக ஒரு நீண்ட காலப்பகுதியில் செயல்வடிவம் கொடுக்கப்பட்டும் வருகின்றன. இவற்றினால் தமிழ் மக்கள் மீது நேரடியான பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ள அதேவேளை மறைமுகமான தாக்கங்களையும் விளைவித்திருக்கின்றமையால் மக்களின் வாழ்வு நிலை இன்று பெரும் நெருக்கடிக்குரியதொன்றாய் மாற்றப்பட்டுள்ளது.

இராணுவ ரீதியிலான அழுத்தங்கள் என்று பார்க்கின்றவிடத்து, தமிழ் மக்களின் முக்கிய பொருளாதார மையங்களையும், சமூக பண்பாட்டு வாழிடங்களையும் அழித்து சிதைத்து விடுவதான இலக்காகக் கொண்டே இராணுவ நகர்வுகள் நடத்தப்பட்டுள்ளன. பெரும்படை பலத்தைப் பிரயோகித்து நடத்தப்பட்டு வருகின்ற இந்த நகர்வுகளினால் மக்கள் ஏதுமற்றவர்களாக ஆக்கப்பட்டுள்ளனர் - ஆக்கப்பட்டும் வருகின்றனர். முன்னைய சிறீலங்காவின் ஆட்சியாளர்கள் செய்த இராணுவ ஆக்கிரமிப்புகளிலும் பார்க்க சந்திரிகாவின் நடவடிக்கைகள் முற்றிலும் மாறுபட்டவைகளாகவே இருந்துள்ளன. அவரின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் அதி தீவிரம் மிக்கவையாகவும் அறிவிப்புக்கள் ஏதுமின்றி திடீரென ஒரு பகுதியினூடோ அன்றி பல பகுதிகளினூடோ செய்யப்படுகின்ற ஆக்கிரமிப்புக்களாகவுமே இருந்துள்ளன. இதனால் காலகாலமாகத்தேடிய சொத்துக்கள் அனைத்தையும் கைவிட்டுவிட்டு வெறுங்கையுடன் தமிழ்மக்கள் வெளியேற வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றனர். அவரது ஒவ்வொரு ஆக்கிரமிப்பு முயற்சிகளின் போதும் இவையே நன்கு வெளிப்பட்டு நிற்கின்றன. இதுதவிர இராணுவ ஆக்கிரமிப்பிற்குள் இருக்கின்ற பகுதிகளைவிட அதற்கு வெளியேயும் பல மைல்கள் நீளமான பெரும் நிலப்பரப்புக்கள் மக்கள் எவரும் இல்லாத சூனியப்பிரதேசங்களாக திட்டமிட்டு மாற்றப்பட்டுள்ளன. இந்த வெளிப் பகுதிகளை நோக்கி சரமாரியான ஆட்லறி எறிகணை தாக்குதல்களை மேற்கொண்டும் விமான குண்டு வீச்சுக்களை கண்மூடித்தனமாக நடத்தியும் மக்கள் விரட்டியடிக்கப்பட்டுள்ளனர்.

இராணுவ ஆக்கிரமிப்பு பகுதிகளைவிட அவர்களின் ஆக்கிரமிப்பு பகுதிகளுக்கு வெளியேயுள்ள சூனியப் பிரதேசங்களே பன்மடங்கு அதிகமாகவுள்ளன. இதுவொரு வெளிப்படையான உண்மையாகும்.

— அனிக்கிலஸ் —

சந்திரிகா அரசு மேற்கொண்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கையால் இன்று எட்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ்மக்கள் இடம்பெயர செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் வாழ்வு நிலை திட்டமிட்ட ரீதியில் சீரழிக்கப்பட்டுள்ளது சிதைக்கப்பட்டுள்ளது. அத்தோடு சில இலட்சம் மக்கள் மீண்டும் மீண்டும் இடம்பெயர வைக்கப்பட்டுள்ளனர். ஒரே நேரத்தில் இலட்சக்கணக்கான மக்கள் பெரும் பிரதேசங்களைவிட்டு ஏதிலிகளாக விரட்டியடிக்கப்படும் சம்பவங்களே இன்று இடம் பெற்றுக்கொண்டு இருக்கின்றன. தமிழர்களின் முக்கிய சமூக, பொருளாதார வைமான யாழ். குடாநாட்டின் மீது சந்திரிகா முதல்கட்ட இராணுவ ஆக்கிரமிப்பைச் செய்தபோது ஐந்து இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் ஏதிலிகளாக்கப்பட்டிருந்தனர். குடாநாட்டை பிடிப்பதற்கான இராணுவ நடவடிக்கையின்போது முப்பதினாயிரம் மக்கள் பலியாவார்கள் என ஏற்கனவே மதிப்பிடப்பட்டிருந்தும் இந்த விடயத்தைக் கருத்தில் எடுக்காது எந்தவிதமான அக்கறையும் காட்டாது தனது ஆக்கிரமிப்பை மேற்கொண்டமையானது ஆரம்பத்தில் இருந்து சந்திரிகா தமிழ்மக்கள் விடயத்தில் எத்தகைய மனப்பாங்கை கொண்டு செயற்பட்டு வந்தார் என்பதை வெளிப்படுத்தப் போதுமானதாகும்.

அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட கிளிநொச்சி நகர் வரையான பெரும் நகர்வு நடவடிக்கையினால் தமிழர்களின் மற்றுமொரு நகரம் திட்டமிட்டு சிதைக்கப்பட்டது. கிளிநொச்சி நகரை ஆக்கிரமித்தமையால் அதனை அண்டிய பாரியளவிலான நிலப்பரப்புகளில் இருந்து மக்கள் விரட்டியடிக்கப்பட்டனர். இதனால் பெருமளவு விளை நிலங்கள் பயன்படுத்த முடியாதவையாகின. இதன் பின்னான சந்திரிகாவின் இராணுவ நகர்வு முயற்சிகளும், சந்திரிகா இத்தகைய நோக்கங்களைக் கொண்டிருந்தமையையே வெளிப்படுத்தி நிற்கின்றன. அதாவது வவுனியா-மன்னார் பிரதான பாதையை நோக்கி நடத்தப்பட்ட எடிபலவிலும் சரி, யாழ். குடாநாட்டிற்கான தரைவழிப்பாதை திறப்பென்று கூறிக்கொண்டு யாழ்பிரதான வீதியூடாகவும் அதற்கு பக்கவாட்டான பகுதிகளை நோக்கியும் நடத்தப்பட்ட ஜெயசிக்குறு நடவடிக்கை மற்றும் ஒட்டுசுட்டானை ஆக்கிரமித்த நிலை பல நடவடிக்கையிலும் சரி தமிழ் மக்களின் பெருமளவான விளை நிலங்கள் பயன்படுத்த முடியாதபொளதுடன் அவர்களது வாழிடங்கள் அழிந்தும், சிதைந்தும் போயின.

இது தவிர தென் தமிழீழப் பகுதிகளிலும் வேறுவகையிலான இராணுவ அழுத்தங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் என்ற பெயரில் தமிழ் மக்கள் வாழ்வியலை சிதைத்துவிடும் கொடூர நோக்குடன் அவ்வப்போது நகர்வுகள் இடம்பெற்று வந்துள்ளன. தென்தமிழீழப் பிரதேசங்கள் தெற் செய்கைக்கான வன மிக்க பகுதிகளாகும். மக்கள் தமது சக்திக்கு அப்பாற்பட்ட நிலையில் விளை நிலங்களில் பயிர்செய்து தென் அறுவடை காலங்களின் போது திட்டமிட்டு அவற்றை அழித்து சிதைத்துவிடும் நோக்கில் பல இராணுவ நடவடிக்கைகள் இங்கு நடத்தப்பட்டுள்ளனுடன் சிங்கள குடியேற்ற வாசிகளை தமிழர் விளை நிலங்களுக்குள் இராணுவ பாதுகாப்புடன் அழைத்துச் சென்று அவற்றை சூறையாடும் நடவடிக்கைகளும் பல இடம்பெற்றுள்ளமை வெளிப்படையான உண்மையாகும். இதன் காரணத்தால் அறுவடை செய்த விளை பொருட்களையே கைவிட்டு ஏதிலிகளாக வீதி ஓரங்களிலும், மரங்களின் கீழும், கடைகளிலும் உணவுக்கு வழியற்ற நிலையில் வாழுகின்ற அவல நிலைக்கும் தமிழ்மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

தமிழ் மக்களின் மற்றொரு வாழ்வாதாரத்தை தீர்மானிக்கும் காரணியாக கடல் தொழில் விளங்கியிருந்தது. இந்த தொழில் துறையினையும் முடக்கியிடும் வகையிலான நடவடிக்கைகளையே சந்திரிகா மேற்கொண்டார். பாதுகாப்பு காரணங்கள் என்று கூறிக்கொண்டு பலமைல் தீரமான கடல்பகுதிகள் மீன்பிடிதொழிலை மேற்கொள்ள முடியாதவாறு அரசினால் தடைசெய்யப்பட்டுள்ளன. கடல் வலயத்தடைச்சட்டத்தை இறுக்கமாக அமுல் நடத்தி தமிழரின் ஒட்டுமொத்த மீன்பிடித்தொழிலையும் முடக்கி விட்டுள்ளார். இந்தச் சட்டத்தின் மூலம் இதனையே நம்பி வாழ்ந்த ஆயிரக்கணக்கான குடும்பங்கள் நிர்க்கதி நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இவற்றோடு அவ்வப்போது மேற்கொள்ளப்படும் கட்டுப்பாடுகள், விமானப்படையினரின் கண்மூடித்தனமான தாக்குதலால் மீன்பிடிவள்ளங்கள், மீன்பிடி உபகரணங்களை இழந்து இம்மக்கள் பெரும் துன்பத்திற்கும் ஆளாகியுள்ளனர். இத்தனைக்கும் மீன்பிடி உபகரணங்கள் எவற்றையும் புதிதாக கொள்வனவு செய்ய முடியாத வகையில் தடைகளும் விதிக்கப்பட்டுள்ளன.

பொருளாதார ரீதியான அழுத்தங்கள் என்று பார்க்கின்ற விடத்தில் தமிழ் மக்கள் மீதான பொருளாதார தடைகள் முக்கிய அம்சமாகவுள்ளன. முன்னைய சிறீலங்கா ஆட்சியாளர்கள் காலத்தில் பொருளாதார தடைகள் அமுல் செய்யப்பட்டுத்தான் இருந்தன. இவை ஓரளவு பாதிப்புக்களை மக்கள் மீது ஏற்படுத்தியிருந்தது. ஆனால் சந்திரிகா ஆட்சி பொறுப்பை ஏற்றுள்ளார். இந்த விடயத்திலும் அவர் அதே அக்கறையைக் காட்டத்தவறவில்லை. பொருளாதாரத்தடைகள் சந்திரிகாவின் காலத்தில் மேலும் இறுக்கமடையச் செய்யப்பட்டன. இந்தத்தடைகள் தமிழ் மக்கள் மீது நேரடியாகவும் மறைமுகமாகவும் பலவேறு தாக்கங்களையும் உண்டுபண்ணியுள்ளன.

இராணுவ தலைகளுக்கு பயன்படுத்தப்படுகின்றது என்ற பொய்யான காரணத்தைக் காண்பித்து தமிழ் மக்களின் அன்றாட வாழ்விற்கும், அவர்களின் இதர அத்தியாவசியமான தேவைகளுக்குமான பொருட்கள் மீது தடைகளை விதித்திருப்பது ஒரு பொருளாதார ரீதியான நேரடியான அழுத்தமாகும். இந்தத் தடைகளினால் மக்களுக்கு உடனடியாக ரீதியான பாதிப்புக்களையும் ஏனைய வேறுவகையான பாதிப்புக்களையும் ஏற்படுத்துவது அதன் மறைமுகமான நோக்கமாகும். இந்தப் பொருளாதார அழுத்தம் மக்களின் வாழ்வு நிலையை பெரிதும் பாதித்துள்ளது.

பொருளாதார மையங்கள் விளைநிலங்கள் என்பவற்றை ஆக்கிரமிப்பதன் மூலமும் அழித்து சிதைப்பதன் மூலமும், உணவு, மருந்து பொருட்கள் உட்பட இதர தடை நடவடிக்கைகளின் மூலமும் மக்களை நெருக்கடிக்குள் தள்ளி அரசின் நிவாரணத்தை மட்டும் நம்பியாழும் நிலையை ஏற்படுத்த சந்திரிகா அரசாங்கம் முனைகின்றது. இந்த நிலையிலும் நிவாரணத்திலும் பெரும் வெடிமை அவ்வப்போது மேற்கொண்டும், நிவாரணத்துக்காக ஏங்கும் நிலைக்குத் தள்ளப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை முற்றாக வழங்காது இழுத்தடிப்பு மேற்கொண்டும் மக்களை படிவளர் சாவிற்குள் தள்ள சந்திரிகா அரசாங்கம் பகீரத முயற்சி எடுத்து வருகின்றது. அதிலிருந்து தன்னால் அவ்வப்போது திற்கும் மக்களுக்கு உதவி செய்யாது விட்டாலும் கூட இம்மக்களுக்கு வெளியில் இருந்து வருகின்ற மனிதாபிமான நிவிமான உதவிகளைக்கூட கிடைக்கவிடாது தடுத்து வரும் அவலம் செயலானது அவரின் ஆக்கிரமிப்பு நோக்கத்தின் உச்ச வெளிப்பாடாகும்.

ஆனால் இவையெல்லாவற்றையும் மீறி தமிழர் தமது போராட்டத்தை முன்னெடுத்து வருவதுடன், சந்திரிகா அரசாங்கத்தின் நடவடிக்கைகளையும் முறியடித்து வருகின்றனர். இவ்வாறான இன விடுதலைப் போராட்டங்களில் வழமையாக ஆக்கிரமிப்பாளர்கள் மேற்கொண்டு தோல்வியடைந்த நடவடிக்கைகளையே சந்திரிகா அரசாங்கம் இன்று தீவிரமாக மேற்கொண்டு வருகின்றமையும் சந்திரிகாவின் இம் முயற்சியின் தோல்வியைத் தழுவப்போவதும் நிச்சயமாகும்.

காவியமான கரும்புலிகள்

1987ம் ஆண்டு யூலை 5ம் நாள் மில்லர் என்று எவரும் எங்கும் உச்சரிக்கலாயினர். மில்லர், மில்லர் யாரது மில்லர்? கரும்புலித் தாக்குதல் ஒன்றின் மூலம் முதன் முதலாக எதிரியை அழித்த காவியத் தலைவன். கரும்புலி வரலாற்றின் துவக்க நாயகன்.

1987 யூலை 5 முதல், 1999 யூன் வரையில் அதாவது 1987 யூலை 5ம் திகதி நெல்லியடி மகாவித்தியால இராணுவ முகாம்மீது மில்லர் மேற்கொண்ட தாக்குதல் முதல் 1999 மே 29 மட்டக்களப்பு நகரில் தேசத்துரோக கும்பல் ஒன்றின் தலைவன் தேசத் துரோகி ராசிக் மீது அரசப்பன் மேற்கொண்ட தாக்குதல் வரையில் 147 கரும்புலிகள் விடுதலையெனும் உயர்ந்த இலட்சியத்திற்காக தம் உயிர், உடல், ஆவி அனைத்தையும் இழந்து நெஞ்சுக்குள் மட்டும் வாழும் நெடிய கோபுரங்கள் ஆனார்கள். இந்த 147 கரும்புலிகளிலும் ஆண் கரும்புலிகள் - 110, பெண் கரும்புலிகள் - 37, இதில் தரைக்கரும் புலிகள் -55 கடற்கரும்புலிகள் - 92.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இவர்களை நாம் மனனுக்குள் புதைக்கவில்லை. எங்கள் மனங்களுக்குள் மட்டுமே புதைத்துள்ளோம். ஆதலால் நம் ஒவ்வொருவருக்குள்ளும் கரும்புலிகள் வாழ்கின்றார்கள் வாழ்ந்து கொண்டேயிருப்பார்கள்.

அது 1990 நவம்பர் - 23 அன்று இரவு வன்னி மண்ணின் மாங்குளத்தில் தளமிட்டிருந்த எதிரியை இடம்விட்டு ஓட இடி இடித்தது இடி மேகம் ஒன்று. கொடுமைகள் பல புரிந்த எதிரியை விடியமுன் புண்பட்டு பிடுங்கி எறிந்த புயலின் அவதாரம் லெப். கேணல் போர்க்.

மாங்குள மண்ணிலே எதிரியை அழிக்க கப்போய் வைத்த பெரும் வெல் போர்க், போர்க் எனும் புயல் கொடியை என்றுமே மறக்காது எம் மழதாடு. மில்லருக்குப் பிறகு தரையில் எதிரி மீது பட்டுத் தெறித்த மின்னல். நவம்பர் என்றாலே எதிரியவன் அஞ்சும் காலம். அந்த நவம்பர் அச்சத்திற்கு வழி கோலிய முதல் தாக்குதல் தான் மாங்குளம் தாக்குதல் என்பதனால் போர்க்கிற்கு இன்னுமோர் தனிச்சிறப்பும் உண்டு. எதிரியை நவம்பரில் தூங்காமல் விழிக்க வைத்திருக்கும் சிறப்புத்தான் அது.

சொல்லொணாத்துயரம் தந்த எதிரிக்கு வல்வைக்கடலில் வலைவிரித்தார்கள். நம் கரும்வேங்கைகள். பெரும் சோதியாக மறைந்து எதிரியின் கப்பலை எரித்தார்கள். 10.07.90 அன்று மேஜர் காந்தரூபன், லெப்டினன்ட் கேணல், கப்ரன் விமலன் ஆகியோர் சாதனை படைத்து மறைந்தார்கள். அலைகடலிலே முதன் முதலாக கரும்புலித்தாக்குதலினை துவக்கிய வேங்கைகள் இவர்கள் தான்.

19.03.91 அன்று சிலாவத்தையில் சிங்கப் பாசறையை நோக்கி சாவைச் சுமந்து சென்றவர் டாம்போ. சிலாவத்தை ஒரு தரம் அதிர்ந்து குலுங்கியது. அந்தப் பேரதிர்வு என்றுமே டாம்போவை மறக்கச் செய்யாது.

04.05.91 அன்று பருத்தித்துறைக் கடலில் சன்துறை நுழைமுகத்திற்கு செல்லும் வழியில் பகைவருக்கு ஓங்கி அடிகொடுத்தனர் கரும்புலிகள். பகைவன் பேராரா பருத்தித்துறைக் கடலிலே உருத்தெரியாது அழிந்தொழிந்தது. 14 படையினர் எமலோகம் சென்றனர். வெற்றிக்கு வித்தாக கடலரசன், புகழரசன் எனும் இரு கருவேங்கைகள் தம்மைக் கற்பூரமாக்கினார்கள்

11.11.93 அன்று கடற்கரும்புலிகள் மேஜர் கணேஸ் கப்ரன் கோபி ஆகியோர் பூநகரி வெற்றிக்கு தம்மையே தத்தாக்கள். கரும்புலி இவர்கள் கத்தகம் கமழ்தார்கள். ஆனால் இவர் நினைவு அற்றுப்போகவில்லை. இவர்களை யாருமே இம்மண்ணில் நினைக்க மறந்ததில்லை.

11.11.93 அன்று பூநகரி நம்வசம் வீழ்ந்தி. வெற்றிக்கு இவர்கள் விலையாகினர். அவர்கள்தான் இவர்கள். கலையழகன், மதிநிலவன், செங்கண்ணன், வளவன், சிவமோகன், நல்லழகன், சீரான், கண்ணன், செந்தமிழ் நம்பி, நுமான், வீரமணி, சிவஞ்சன். வெற்றிக்கு இவர்களே வழிகோலினர். காற்றெங்கும் பலாலியினுள் புகுந்தனர். விமானத் தளத்தினுள் வெடித்தனர். உடல்வெடிகள், நாம் வென்றி... வேண்டியே தீபமினர்.

02.08.94 அன்று நள்ளிரவு நான்கு கரும்புலி மேஜர் ஜெயந்தன், திலகன், சேரன், கப்ரன்லெப்.டினன்ட் லெப். நீதன் ஆகியோர் யாருமே எண்ணமிழாத வேளையில் பலாலி தளத்தின் வையப்பகுதியில் கடலை துவக்கினர். விமான ஓடுபாதையில் நரித்து நின்ற வான்கலத்தை தகர்த்தனர். பல மணிநேரம் கடுந்சமர் செய்தனர். பலாலியினுள் கரும்புலி என்றதும் சிங்களப்படை பயந்து விழித்து பின்னர் செய்தி அறிந்து விடுத்தனர் தமிழர். இது மட்டுமா? இன்னும் நடக்கும். இனியும் நடக்கும். படையே! வா, நீ என்கு இருந்தாலும் கரும்புலி உன்னை மடக்கும். உன் வொழுக்கு அடங்கும் என்றனர்.

10.08.94 அன்று எங்களின் குரல் எடுத்து கூவிய முதல் பெண் கடற் கரும்புலியாக மாவீராகிய கரும்புலிகள் விசையில் பெண்களுக்குள் எழுது முதலான பெருமாட்டி. ஆம்! நீலக்கடல் மீதினிலே சிங்களப் படையை அழித்து சாதனை காட்டிய முதற் பெண் கடற்கரும்புலி கப்ரன்.அங்கையற் கண்ணி.

19.10.94 அன்று இந்த நாள் உங்களுக்கு நினைவிருக்கின்றதா? அல்லது லெப் கேணல் நாளையினி, மேஜர் மங்கை, கப்ரன் வாமன், கப்ரன் லக்ஷ்மன் இவர்களையாவது நினைவிருக்கின்றதா? உங்களுக்கு நினைவிருக்கின்றதா? சாகராவர்த்தனா கப்பலை சாய்த்தார்களே. அவர்கள் தான் இவர்கள். இந்தக் கடல் அரசனை வித்தார்களே அவர்களே தான். படங்களில் மட்டுமே சிரிக்கும் புனித தெய்வங்களே, வாழ்வில் எம்மோடு வாழுங்கள்.

08.11.94 அன்று நடுநிசி வேளையில் வெற்றிலைக்கேணியில் படையிறங்கிய கப்பலுக்கு என்ன நடந்தது? வீசிய ஆயுதங்கள் இறங்கிட முன்னர் கப்பலுக்கு என்ன நிகழ்ந்தது? பற்றும் தெருப்போடு பாய்ந்தது கரும்புலி. நின்ற பவுதா கப்பல் ஆட்டம் கண்டது. பவுதா வெடித்ததால் எமக்கு கிடைத்தது வெற்றி.

18.04.95 அன்று நள்ளிரவு நான்கு சரியாக 12.30 க்கு திருமலை சீனன்குடா நுழைமுகத்தில் ஆழங்குறைந்ததுமது நீண்டிருந்த நுழைமுக மேடையின் ஒரு புறத்தில் ரணகுடி, குமுதமலர் கட்டப்பட்டிருந்தன. அங்கு அதிர வைக்கும் பெரும் வெடியோசை. அந்த வெடியோசை திருமலை நகரையே ஒரு குலுக்கு குலுக்கியது ரணகுடி, குமுதமலர் தீப்பிடிக்கையில் தமிழ் உயிர்கள் பலவுமல்லவா வெடிக்கின்றன. இரு கப்பல்களும் அப்படியே கரை நுழைகின்ன சாதனை நடத்திய காவிய நாயகர்கள் யார் அவர்கள்? அவர்கள் தான் இவர்கள் கதிரவன், தனிமகிழவன், மதுவரன், சாந்தா. பேச்சுவார்த்தை என ஏமாற்று நினைத்து சிங்கள அரசு முன்னாம் கட்ட கழுகினை நுகர்ந்த தலைவர்களின் தலைவர்களையே விழுத்தது முதலது. இதற்கு விலையாகி விடுதலைக்கு விதையாகினர். கரு வேங்கைகள் தான்.

16.07.95 அன்று காங்கேசன் துறைமுகத்தில் கரும்புலிகள் பகை முகத்தில் அடித்தார்கள். சிங்கள தேசத்து போர்க்கப்பல் சிதைத்தது. எங்களின் கடலிலே சிங்களப் பிசாசுகள் ஏறி நின்று ஆள்வதா? என்று பொங்கின்றதா? சாகராவர்த்தனா கப்பலை சாய்த்தார்களே. அவர்கள் தான் இவர்கள். இந்தக் கடல் அரசனை வித்தார்களே அவர்களே தான். படங்களில் மட்டுமே சிரிக்கும் புனித தெய்வங்களே, வாழ்வில் எம்மோடு வாழுங்கள்.

08.11.94 அன்று நடுநிசி வேளையில் வெற்றிலைக்கேணியில் படையிறங்கிய கப்பலுக்கு என்ன நடந்தது? வீசிய ஆயுதங்கள் இறங்கிட முன்னர் கப்பலுக்கு என்ன நிகழ்ந்தது? பற்றும் தெருப்போடு பாய்ந்தது கரும்புலி. நின்ற பவுதா கப்பல் ஆட்டம் கண்டது. பவுதா வெடித்ததால் எமக்கு கிடைத்தது வெற்றி.

18.04.95 அன்று நள்ளிரவு நான்கு சரியாக 12.30 க்கு திருமலை சீனன்குடா நுழைமுகத்தில் ஆழங்குறைந்ததுமது நீண்டிருந்த நுழைமுக மேடையின் ஒரு புறத்தில் ரணகுடி, குமுதமலர் கட்டப்பட்டிருந்தன. அங்கு அதிர வைக்கும் பெரும் வெடியோசை. அந்த வெடியோசை திருமலை நகரையே ஒரு குலுக்கு குலுக்கியது ரணகுடி, குமுதமலர் தீப்பிடிக்கையில் தமிழ் உயிர்கள் பலவுமல்லவா வெடிக்கின்றன. இரு கப்பல்களும் அப்படியே கரை நுழைகின்ன சாதனை நடத்திய காவிய நாயகர்கள் யார் அவர்கள்? அவர்கள் தான் இவர்கள் கதிரவன், தனிமகிழவன், மதுவரன், சாந்தா. பேச்சுவார்த்தை என ஏமாற்று நினைத்து சிங்கள அரசு முன்னாம் கட்ட கழுகினை நுகர்ந்த தலைவர்களின் தலைவர்களையே விழுத்தது முதலது. இதற்கு விலையாகி விடுதலைக்கு விதையாகினர். கரு வேங்கைகள் தான்.

16.07.95 அன்று காங்கேசன் துறைமுகத்தில் கரும்புலிகள் பகை முகத்தில் அடித்தார்கள். சிங்கள தேசத்து போர்க்கப்பல் சிதைத்தது. எங்களின் கடலிலே சிங்களப் பிசாசுகள் ஏறி நின்று ஆள்வதா? என்று பொங்கும் கப்பலை தலைகுழுங்கடிக்கச் செய்தனர். அங்கையற் கண்ணி நீரடி நீச்சல் பிரிவை சேர்ந்த கரும்புலி அருள்ஜோதி இத் தாக்குதலில் சிறப்பான பணி செய்தார்.

20.09.95 அன்று காங்கேசன் துறைமுகத்தில் லங்காமுடித்தா முடிந்தது. காங்கேசன் துறைமுகத்தில் லங்காமுடித்தா வெடித்த அதிர்வுகளை யார் மறந்திடக்கூடும். கண்ணாளன் சிவா உட்பட தாங்கள் கொண்டு நிகழ்த்திய சாதனையை யார் மறந்திடக் கூடும்.

02.10.95 முல்லைக்கடலில் புலிகளுக்கும் சிங்களக் கடற்படைக்கும் மூண்டது சமர். மோதிய புலிகள் வெற்றுவர் முடியில். பகைவனின் கடற்கலம் நீரினுள் தள்ளப்பட, தெருக்கை நிமிர்த்திய பேராரா அடி வாங்கி, கரு வேங்கைகள் மேஜர் அருமை, கப்டன் தனிகை தம்மையே தியாகம் செய்தனர். இவர்கள் தியாகத்தால் தமிழர் விடுதலை பெருமை.

17.10.95 அன்று எதிரியின் இரும்புக் குகையினுள் கரும்புலி புகுந்தது. தாம் எண்ணிய படியே எல்லாம் முடிந்தது. நாகவி

மில்லர் முதல் ரங்கன் வரை

கூறு அடும் பேராரவை திருமலைத் துறைமுகத்தில் வைத்து துவம்சம் செய்தது. ரூபன், சிவகாமி, சிவஞ்சா விடுத்தது சாதனை கரு வேங்கைகள் ஆனார்கள். கோவிந்தன், வேணுதாஸ், அகத்தி, பிரபாகன், நிலவன், சசிதரன், வேரியன் அனைவரும் மண் சிவந்தது. அக்கணம் நான் எதிர்க்குச் சாவுமணி ஒலித்தது. பலாலி பெரும்தளம் உயிரை பாய்ந்து எதிர்க்குச் சேதம் ஏற்படுத்தப் போவதில்லை. பாதி வழியில் வெடித்து உடல் தீயாகினர். இது நிகழ்ந்தது 1993 அக்டோபர் 29 அன்று விக்கலை.

05.12.95 அன்று தென் தமிழ் எழுவதனில் வெடித்தால் கரும் வேங்கைகள் வன்னையில் தென் தமிழீழத்தில் முதலாவதாக நான் மேஜர் ரங்கன். உடன் உயிர் இம் மண்ணை காத்திடத்தான் உன்னையே ஆயுதமாக்கியே சென்றாய் உன்னை மட்டக்களப்பில் மட்டுமா தெரியும், தமிழ் எழுவதனில் எமக்கு ஒரு அதிகம். மக்களை நாமி வேட்கை மாறுவதில்லை கிழக்கு பகுதி பெற்ற விடுதலை, அதிர்ஷ்டமாகவே மட்டு - பதுங்குகுழியாகு முகாம் மீதான தாக்குதலில் மட்டக்களப்பில் முதல் கரும்புலியாக மேஜர் ரங்கன் சாதனை நிகழ்த்தினான். மட்டக்களப்பு கருவேங்கைகள் வரிசையில் முதலிடம் பிடித்தான்.

03.07.97 முதல் 03.12.98 வரை மிச்சம் எஞ்சியிருந்த உடலைப் பிரசெழிந்து சென்ற தேசத்தில் புலிகள் மில்லர் முதல் ரங்கன் வரை கருவேங்கைகளாக சாதனை நிகழ்த்திய கரும் வேங்கைகளினாலும் அவர்கள் நடாத்திய தாக்குதல் விபரமும் இங்கே தரப்பட்டுள்ளது. இதில் சில தாக்குதல்களில் தம்மையே ஆகுதியாக்கிய கரு வேங்கைகளின் பெயர்கள் குறிப்பிட முடியாமல் போய்விட்டது. அதற்கு வருந்துகின்றோம்.

யுத்தமே சந்திரிகாவின் முதல் இலக்கு சீரழியும் சிறீலங்காவின் பொருளாதாரம்

கட்டுரை

பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைவி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நான்கு வருடங்களுக்கு முன்னர் போட்டிருந்த முகமூடியை அவரது சொந்தமுகமென மக்கள் நம்பினர். இதனால் அவரது வேஷத்தை மக்கள் கண்டுகொள்ள முடியவில்லை. அவரது பொய்ப் பேச்சைக் கேட்டு தமது பொருளாதார அபிலாஷைகளைத் தீர்த்து வைப்பார் என நம்பி அவரை ஆதரித்தனர். சிறீலங்கா அரசாங்கத்தை கொண்டு நடத்தும் அதிகாரத்தை மக்கள் அவரிடம் வழங்கினர். இவ்வேளை நாடு பெரும் பொருளாதாரத் தேவைகளை, தீர்த்துவைக்கப்பட வேண்டிய பொருளாதாரப் பிரச்சினைகள் பலவற்றை கொண்டிருந்தது. அதாவது தொடர்ந்து கொண்டிருக்கும் யுத்தத்தினால் சீரழிந்து கொண்டிருக்கும் பொருளாதாரத்தை நிமிர்த்தி நாளாந்தம் வறுமைக் கோட்டிற்குக் கீழ் தள்ளப்படும் மக்களை பட்டினிச்சாவிலிருந்து காப்பாற்றவேண்டிய தேவையும் பொறுப்பும் இருந்தது.

இந்தத் தேவைகள் நிறைவேற்றப்படுவது தொடர்பாக ஜனாதிபதி மக்களுக்கு பலவித மான வாக்குறுதிகளை வழங்கினார். பல திட்டங்களை அறிவித்தார். இவற்றை செயற்படுத்த அவர் கையாண்ட வழிமுறைகள் மக்களை ஏமாற்றத்திற்குள்ளாக்கியது. அது மட்டுமல்ல, நாட்டின் பொருளாதாரத்தை பாதாளம் நோக்கிச் செலுத்தும் வேகத்தை அதிகரித்துள்ளது. நாளாந்தம் பட்டினிச்சாவை எதிர்நோக்கும் மக்களின் எண்ணிக்கையை அதிகரித்து அதன் வேகத்தை தீவிரப் படுத்தியுள்ளது. அரச சொத்துக்கள் அன்னியரிற்கு விற்பனை செய்யப்பட்டு நாட்டின் பொருளாதாரத்தில் அன்னியரின் ஆதிக்கம் அதிகரித்து, இலாபத்தை முக்கிய நோக்காகக் கொண்ட பொருளாதாரத் தீர்மானங்களில் அன்னியரின் செல்வாக்கு அதிகரித்துள்ளது. இவை அனைத்தினதும் விளைவு இன்று மக்கள் மத்தியில் ஜனாதிபதி மாஸ்றுயிபிச்வழி என்றும், நம்பிக்கைத் துரோகி என்றும், ஜனநாயக விரோதி என்ற நிலையையும் ஏற்படுத்தியுள்ளது.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் ஜனாதிபதி ஆட்சியைக் கைப்பற்ற முயன்றவேளை யுத்தம் தொடர்ந்து கொண்டிருந்த காலகட்டம் நாட்டில் வேலைவில்லைப் பிரச்சினை எல்லை கடந்து போய்க் கொண்டிருந்தது. வருடாவருடம் பெருமளவு இளைஞர் - யுவதிகள் வேலையற்றோர் பட்டியலில் இணைந்து கொண்டிருந்தனர். அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கான தேவையை ஈடுசெய்ய முடியாது மக்கள் பட்டினிச்சாவை எதிர்கொண்டிருந்த நேரம் முதலீடுகள் பாதிப்படைந்து தொழில்துறைகள் முடங்கிக் கொண்டிருந்தன. இவ்வேளையில் ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்ற ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தார். இந்தப் பிரச்சினைகள் அனைத்தையும் விரைவில் தீர்த்துவைத்து மக்களுக்கு சேவை செய்யப் போவதாகக் கூறினார்.

வேலையற்றோருக்கு மாதாந்தம் ஆயிரத்து ஐந்நூறு ரூபா உதவித் தொகை வழங்கப்போகிறேன். வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வழங்கப் போகிறேன். அத்தியாவசியப் பொருட்களுக்கான விலையை வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களும் கொள்வனவு செய்யக் கூடிய வகையில் குறைத்து கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பேன். பாண் ஒரு றாத்தல் 3 ரூபா 50 சதத்திற்குக் கிடைக்கக் கூடிய விதத்தில் கோதுமை மாவிற்கு மானியம் வழங்கப் போகிறேன். மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி நாட்டைத் தொடர்ந்து யுத்த சூழலில் தமது சொந்த லாபத்திற்காக வைத்திருக்கிறது. ஆயுதக் கொள்வனவில் பெரும் ஊழல் மோசடிகளைச் செய்கிறது. இதனால் பெருமளவு பொதுநிதி தேவையற்ற விதத்தில் செலவு செய்யப்படுகிறது. இவற்றை மீதப்படுத்த யுத்தத்தை நிறுத்தி தமிழர் தேசிய இனப் பிரச்சினையை சமாதான வழியில் தீர்த்துவைத்து யுத்தத்திற்காக ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் செலவு செய்த பணத்தை நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு செலவு செய்து, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி நாட்டை அபிவிருத்தி நோக்கி இட்டுச் செல்லப் போகிறேன். இதுவே எனது முக்கிய பணி. இன்று நாட்டிலுள்ள முக்கியமான பிரச்சினையும் இதுவே என நாட்டு மக்கள் நம்பும் வகையில் முழங்கினார்.

ஆட்சியைப் பொறுப்பெடுத்ததும் நான்கு மாதங்களின் பின்னர் ஏறிச்சென்ற ஏணியை எட்டி உதைத்துவிட்டார். வாக்குறுதிகள் அனைத்தையும் காற்றில் பறக்கவிட்டார். பொருளாதாரத் திட்டங்கள் அனைத்தையும் தன்னிலையில் எழுதிய திட்டங்களாக்கினார்.

முக்கியமாக தமிழர் தேசிய இனப்பிரச்சினையைக் கையாளும் விடயத்தில் ஜனாதிபதியின் உண்மையான சிந்தனை வெளிப்பட்டது. யுத்தத்தை நிறுத்தி சமாதானம் மூலம் இனப்பிரச்சினையைத் தீர்க்கப் போகிறேன் எனக் கூறியவர், சமாதானத்திற்கான யுத்தம் என்ற பெயரில் யுத்தத்தை நடத்த தீர்மானித்தார். நீண்டகாலமாக நடைபெறும் யுத்தத்தை குறுகிய காலத்திற்குள் பெருமளவு நிதியினை செலவு செய்து யுத்தத்தினை தீவிரப்படுத்தி நவீன ஆயுதங்களின் எண்ணிக்கையை அதிகரித்து யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரவும் அவர் தீர்மானித்தார். இந்தத் தீர்மானம் அவரை மக்களுக்கு வழங்கிய பொருளாதார வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாதவராக்கியது. பொருளாதாரத்தை விற்றுத்தான் யுத்தத்தை தீவிரப்படுத்த முடியும் என்பது அவருக்குத் தெரியாததல்ல. அவரது சிந்தனையில் யுத்த வெற்றியே செல்வாக்குப் செலுத்தியது.

17 வருட காலம் ஆட்சி செய்துவந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் யுத்தத்தை நீண்டகால நோக்கில் மேற்கொண்டுவந்தது. ஆனால் சந்திரிகா அரசாங்கம் குறுகியகால நோக்கில் யுத்தத்தைக் கையான எண்ணியது. பொருளாதார அபிவிருத்திக்கான ஒதுக்கீடுகளை நிறுத்தி பாதுகாப்பு ஒதுக்கீடுகளை பெருமளவு திடீரென அதிகரித்து யுத்தத்தை குறுகிய காலத்தில் முடிவுக்குக் கொண்டுவந்து அதன் பின்னர் பாதுகாப்புச் செலவீனத்தை பொருளாதார அபிவிருத்தி நோக்கி திருப்பிவிடலாம் என்ற தீர்மானத்தின் அடிப்படையில் இத் திட்டங்களை தீட்டியது. இத் திட்டங்களை காலம் தாழ்த்தாது உடன் செயற்படுத்த நடவடிக்கையில் இறங்கினார் ஜனாதிபதி சந்திரிகா.

இந்த நிலையில்தான் ஐக்கிய தேசியக் கட்சி இறுதியாக ஒதுக்கிய பாதுகாப்புச் செலவீனத்தைப் போன்று குறைநிரப்புப் பிரேரணை மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தொகை உட்பட இருமடங்காக அதிகரித்த பொருளாதாரத்தில் பாரிய முதலீட்டுத் திட்டங்கள் அனைத்தையும் நிறுத்தி யுத்தத்தை நடத்தினார். இராணுவத்தில் புதிய ஆளணிகளையும் அவர்களுக்கான புதியபுதிய ஐக்குவிப்புக்கள், பொருளாதாரச் சலுகைகள், நவீன ரக ஆயுதங்கள், விமானங்கள், கனரக வாகனங்கள் என பெரும் ஆயுதக் கொள்வனவைச் செய்தார். கடிய செலவுடன் கடிய அழுத்தத்தைப் பிரயோகித்ததுடன் யுத்தத்தை விரைவில் முடிப்பதற்காக முழுநம்பிக்கையோடு யுத்தத்தில் அவர் தீவிரம் காட்டினார். யுத்தம் தொடர்ந்து செல்ல செல்ல நாளாந்தம் யுத்தம் தொடர வேண்டிய அவசியத்தையும் களநிலமைகள் ஏற்படுத்தின.

1995-ம் ஆண்டு ஐ.தே.கட்சி அரசாங்கம் யுத்தத்திற்கென 2200 கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்திருந்தது. அடுத்த ஆண்டு சந்திரிகா அரசாங்கம் தனது திட்டத்திற்கிணங்க 4500 கோடி ரூபாய்களை யுத்தத்திற்காக செலவீடு செய்தது. (அந்த ஆண்டு குறைநிரப்பு பிரேரணைகள் மூலம் ஒதுக்கீடு செய்தது உட்பட) இத் தொகை யுத்தம் நீடித்துச் செல்லச் செல்ல 1997ஆம் ஆண்டு 5750 கோடி ரூபாவாகவும், 1998 இல் 6000 கோடி ரூபாவாகவும் உயர்வடைந்தது. தற்போதைய ஆண்டுக்காகவும் 6000 கோடி ரூபாவை செலவு செய்யவுள்ளதாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்த தற்போது கூறியுள்ளார். ஆனால், ஆண்டு முடிவில் இத் தொகை மேலும் அதிகரிக்கும் என உறுதிபடக் கூறமுடியும்.

கடந்த ஆண்டும், இவ்வாண்டும் அரசாங்க வரவு செலவுத்திட்டத்தின் மொத்தச் செலவீனத்தில் சுமார் 20 வீதத்தை யுத்தச் செலவு பிடித்துள்ளது இதுவேயன இல்லாவிடின் வரவு செலவுத்திட்டத்தில் பற்றாக்குறைத் தொகை, அரசின் மொத்த வருமானத்தில் 50 வீதமாகாக இருக்கிறது. இது அரசின் பொருளாதார கீழ்நிலையை வெளிப்படுத்துகிறது. இவ்வாறாக பொருளாதாரம் நலிவடைந்திருந்த போதும் யுத்தத்தைத் தொடர்ந்து நடாத்தினார்.

பொருளாதாரம் சீரழிந்து கொண்டு செல்லும் அதேவேளை யுத்தம் விரிவடைந்து கொண்டு சென்றது காலத்திற்கு காலம் யுத்த வெற்றிக்காக ஜனாதிபதி தவணைகளை போட்டார். யுத்தம் தீவிரமடைந்து செல்லச் செல்ல ஆயுதங்களின் தரத்தையும் எண்ணிக்கையையும் அதிகரித்தார். இதன் மூலம் யுத்தம் முடிவுறுத்தப்படும் என எதிர்பார்த்தார் ஜனாதிபதி. அதன் விளைவு அதற்கு எதிர்மாறாகவே அமைந்தது. யுத்தம் அடுத்த பரிமாணத்திற்கு வளர்ச்சி கண்டது. இந்த தோல்வியின் யுத்தத்தை தாம் கையாளும் வழிமுறைகளின் தவறாகவும் தந்திரோபாய தோல்விகளாகவும் கருதிய ஜனாதிபதி ஒவ்வொரு தோல்விகளின் பின்பும் படைகளின் கட்டமைப்புக்களையும், கட்டளைப் பீடங்களையும் மாற்றம் செய்தார். தற்போது அவரே யுத்தத்தை தமது நேரடிக் கண்காணிப்பின் கீழ் கொண்டு வந்துள்ளார்.

இந்தத் தீர்மானமும் யுத்தத்தை மேலும் தீவிரமாக நடத்துவதற்கான நடவடிக்கையே. இதனால் மேலும் பாதுகாப்புச்செலவு வரப்போகிற ஆண்டுகளிலும் அதிகரிக்கப்படலாகும். இது பொருளாதாரத்தை மேலும் பலவீனமாக்கி மீளமுடியாத வீழ்ச்சிக்கு உண்டு பண்ணப்போகிறது.

மேலும் யுத்த ஒதுக்கீடுகளும் அதற்கான குறைநிரப்புப் பிரேரணைகளும் தான் யுத்த செலவுகள் எனக்கூறமுடியாது. இதைவிடப் பெருந்தொகை ஏனைய அமைச்சுக்களின் ஒதுக்கீடுகளிலிருந்தாக மறைமுகமாக செலவிடுகிறது. ஏனைய அமைச்சுகளிற்கென ஒதுக்கப்படும் நிதியைக் கொண்டு படைவீரர்களான வேலைத் திட்டங்களைச் செய்வதன் மூலமும் பெருந்தொகையான நிதி பாதுகாப்பிற்கு செலவிடப்படுகிறது. உதாரணமாக பெருந்தெருக்கள் நிலைக்களத்தினால் இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதியில் இராணுவத்திற்குத் தேவையான வீதியை செப்பனிடுதல், எரிபொருள் மின்சக்தி அமைச்சினால் இராணுவ முகாம்கள், இராணுவ குடியிருப்புக்களுக்கான மின்சார விநியோகம் மற்றும் மகாவலி அபிவிருத்தி போன்ற அபிவிருத்தித் திட்டங்களுக்காக தருவிக்கப்பட்ட வாகனங்கள், புல்டோசர்கள், லைக்டர்கள் போன்றவற்றை இராணுவ பாவனைக்கு வழங்குதல் மூலமும் மேலதிக பாதுகாப்பு செலவீனங்கள் ஈடு செய்யப்படுகின்றன.

இவை யுத்தச் செலவுகள் என அரசாங்கம் கூறும் கணக்கிற்குள் அடங்காத யுத்தச் செலவுகளாகும். இவ்வாறாக பார்க்கும் போது யுத்தச் செலவென அரசாங்கம் கூறும் நிதியைவிட ஆயிரக் கணக்கான கோடி ரூபா வேறு அமைச்சுகளுக்கான ஒதுக்கீடுகளின் மூலம் வேலைத்திட்டங்களாக யுத்தச் செலவுக்கென திருப்பிவிடப்படுகிறது. இந்த யுத்தச் செலவு வெளியில் தெரிவதில்லை.

இவற்றையெல்லாம் யுத்தம் நடைபெறுவதால் பொருளாதாரத்திற்கு நேரடி மறைமுக தாக்கங்கள், அழிவுகள், இழப்புகள் என பலதரப்பட்ட பாதகமான விளைவுகள் ஏற்படுகின்றன.

யுத்த சூழலினால் வெளிநாட்டு முதலீடுகளின் வரவு பாதிப்படைந்து வேலை வாய்ப்புக்கள் குறைவடைந்து, உள்நாட்டு உற்பத்தி குறைவடைந்து அன்னியச் செலாவணி வருமானம் குறைவடைந்துள்ளது. இது வெளிநாட்டு முதலீடுகள் மீதான வருமானம், விமான சேவை வருமானம், விமான நிலைய வருமானம் போன்றவைகள் பலவீனமடைந்துள்ளன. இந்த யுத்த நிலைமை சுற்றுலாத்துறையையும் பெரிதும் பாதித்துள்ளது. சுற்றுலாப் பயணிகளையும் சிறீலங்காவிற்கு வருவதைத் தடுக்கிறது. இதன் மூலம் பெருந் தொகை வருமான இழப்பு ஏற்பட்டு வருகிறது.

மிருகக்காட்சிச்சாலை, தொழில் பொருட்காட்சிசாலை வருமானங்கள் இழக்கப்படுகிறது. கைவினைப் பொருட்களின் விற்பனை வருமானம் வீழ்ச்சி அடைவதன் மூலம் கைவினைப் பொருட்களின் உற்பத்தி குறைவடைகிறது. வெளிநாட்டு முதலீடுகளின் பாதிப்புக்கள் துறைமுகங்களின் வருமானத்திலும் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறாக யுத்தமானது நாட்டின் முக்கியமான தொழில்துறைகளைப் பாதித்துள்ளது மட்டுமல்ல, அதன்துணை வருமானங்களையும் பாதித்துள்ளது.

பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணங்களினால் சிறீலங்காவின் துறைமுக வருமானங்களும் பெருமளவு வீழ்ச்சி கண்டுள்ளது. துறைமுக கட்டணங்களை அரசாங்கம் நூறு வீதம் அதிகரித்துள்ளதாலும், காப்புறுதிக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டதாலும் கொழும்பு துறைமுகத்தை பொருள் மாற்றலுக்காக பயன்படுத்தும் கப்பல்கள் கொழும்பைத் தவிர்த்து அண்மையிலுள்ள வேறு துறைமுகங்களை பயன்படுத்தத் தொடங்கியுள்ளன. திறந்த பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் நாடென்றின் துறைமுகப் போக்கு வரத்து பாதிக்கப்படுவதானது பாதகமான விளைவுகளை ஏற்படுத்த வல்லதாகும்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக யுத்தம்

தொடர்ச்சி 13ம் பக்கம்

தமிழீழ பெண் நீதியாளர்

கல்வியுடன் நேர்முகம்

கே. தமிழீழத்தில் குற்போது நடைமுறையிலிருக்கும் சட்ட நீதி நிர்வாகத் துறையின் முக்கிய நோக்கமும், அதன் அவசியம் பற்றியும் கூறுவீர்களா?

பதில்: 1993-ம் ஆண்டு காலப் பகுதியில் தமிழீழ சமூக, சூழலுக்கு ஏற்ப தமிழீழத்தில் நடைமுறைப்படுத்தக் கூடிய வகையில் தமிழீழத் தேசியத் தலைவரால் நிர்ணயிக்கப்பட்ட சட்டமாக்கல் பிரிவினரால் இயற்றப்பட்டு தமிழீழத் தேசியத் தலைவரின் அங்கீகாரத்தின் பின் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டவை தமிழீழச் சட்டங்கள் ஆகும். அத்தோடு இச்சட்ட நீதி நிர்வாகத் துறையினை தேசியத் தலைவர் அவர்கள் உருவாக்கியதன் முக்கிய நோக்கமே பாதிக்கப்பட்டு, நீதி கோரி எம்முன் வரும் எமது மக்களுக்கு ஏழை, பணம் படைத்தவர், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற வர்க்க வேறுபாடு இன்றி மத பேதம் இன்றி ஆண் பெண் பால் வேறுபாடின்றி சட்டத்தின் முன் யாவரும் சமன் என்ற கோட்பாட்டுக்கு அமைய சுலபமாகவும், விரைவாகவும் அதிக செலவின்றியும் உண்மையானதும், நேர்மையானதுமான களங்கமற்ற நீதியை மக்களுக்கு வழங்க வேண்டும் என்பதே ஆகும்.

மேலும் அவசியம் என்பதைப் பற்றிக் கூறுவதாக இருந்தால் பொதுவாக ஒரு நாட்டின் பலத்தையும், எதிர்காலத்தையும் தீர்மானிப்பதில் அதிக பங்கு வகிப்பது அந்நாட்டின் சட்டமும், நீதி பரிபாலனமுமே, அந்தவகையில் மிக முக்கியதுறைகளில் ஒன்றாக இந் நீதி பரிபாலனத் துறை அமைகின்றது. அதற்கு அமைவாகவே தமிழீழத்தினை எதிர்காலத்தில் ஓர் ஒழுக்கம் நிறைந்த களங்கம் அற்ற ஆரோக்கியமான நாடாகக் கட்டியெழுப்ப தமிழீழத்தின் சமூக சூழலுக்கு ஏற்ப சட்டமும், நீதித் துறையும் மிக அவசியமானதே. அத்துடன் இன்றைய சூழலைப் பொறுத்தவரை சிங்கள இனவெறியர்களின் மனித உரிமை மீறல்களால் எம்மக்கள் இடம்பெயர்ந்து பல இன்னல்களைத் தாங்கி மிக நெருக்கமாக வாழும் சூழ்நிலையில் பல புதிய பிரச்சினைகள் தோன்றுவதற்கும் நிறையவே சந்தர்ப்பங்கள் உண்டு. அந்த வகையில் சட்டத்தின் அவசியம் நிறையவே உண்டு.

கே. பெண்கள் மீது இழைக்கப்படும் குற்றச் செயல்களை அல்லது குற்றங்களை சட்டம் எவ்வாறு வரையறை செய்கின்றது?

பதில்: பெண்கள் மீதான குற்றங்கள் எனப் பார்க்கும் போது பெண்களுக்குப் பாதிப்பினை ஏற்படுத்தக் கூடிய வகையிலமையும் அடிப்படை உரிமை மீறல்கள், பலாத்காரங்களை பிரயோகித்தல், ஏமாற்றுதல் போன்ற செயற்பாடுகளாகவே உள்ளது. அவ்வாறான குற்றங்களில் சில சட்டத்தின் முன் பாரிய குற்றங்களாகவும் கடும் நடவடிக்கைக்குரிய குற்றங்களாகவும் கணிக்கப்பட்டுள்ளன.

எமது சமூகத்தைப் பொறுத்தவரையில் பெண்கள் மீதான குற்றங்கள் பல வடிவங்களில் தோற்றம் பெறுகின்றன. அதற்கமையவே எமது சட்டம் மேற்படி குற்றச் செயல்களை பாலியல் வல்லுறவு, பாலியல் வல்லுறவு எத்தனிப்பு, பாலியல் வன்முறை, பாலியல் வன்முறை எத்தனிப்பு, திருமண ஏமாற்றம் தொடர்பான பிரச்சினைகள், காதல் பிணக்குகள், காதலித்துக் கைவிடல், வயதடையாதோர் திருமணம், இருதார மணம், இளம் பெண்ணுடன் உடல் உறுவு கொள்ளுதல் போன்றவற்றினுள் அடங்குபவை' பெண்கள் மீதான குற்றங்களாக சட்டம் கணிப்பிட்டுள்ளது.

மேற்படி குற்றங்கள் யாவற்றிலும் பாலியல் வல்லுறவுக் குற்றமானது மிகப் பாரிய குற்றமாகக் கணிக்கப்பட்டு அதற்கான ஆகக் கூடிய தண்டனையாக மரண தண்டனையினையும் எமது சட்டம் வரையறை செய்துள்ளது. மேற்படி' குற்றச் செயல்களின் விளக்கமானது. 'ஒரு பெண்ணின் இசைவைப் பெறாது அப் பெண்ணின் விருப்பத்திற்கு மாறாக அல்லது அப் பெண்ணை துன்புறுத்தி அல்லது தானே சட்டப்படியான கணவன் என நம்பவைத்து அல்லது சட்டத்தில் வரையறைசெய்யப்பட்ட வயதடையாத அல்லது அவ்வயதிற்குட்பட்ட பெண்ணுடன் சம்மதம் பெற்றோ அல்லது பெறாமலோ செய்யப்படும் உடல்உறவு, உடல் புணர்ச்சி, பாலியல் வல்லுறவு எனச் சட்டம் வரையறை செய்துள்ளது.

அத்தோடு பாலியல் வல்லுறவு எத்தனிப்பு என்ற குற்றச் செயலானது பாலியல் வல்லுறவு குற்றத்தினைப் புரிவதற்காகச் செயல்படும்போது ஏதேனும் சூழ்நிலைப் பிசகால் உடல் உறவு செயற்பாடு நிகழாவிடின் அது பாலியல் வல்லுறவு எத்தனிப்புக் குற்றம் என சட்டத்தில் வரையறை செய்துள்ளது. அத்துடன் பாலியல் வல்லுறவுக் குற்றத்திற்கு உடந்தையாகும் எவரும் செயலின் தன்மையைப் பொறுத்து கடும் தண்டனைக்குரியவராக சட்டம் கணித்துள்ளது.

மேலும் பாலியல் வன்முறை என்ற விடயத்தைப் பார்ப்போமாக இருந்தால், ஒரு பெண்ணுடன் பாலியல் வல்லுறவு நோக்கின்றி அவரது விருப்பத்திற்கு மாறாக பாலியல் உணர்வுடன் அல்லது இழிவுபடுத்தும் நோக்குடன் அவரது பாலியல் உறுப்புக்களில் தீண்டுதல் பாலியல் வன்முறை எனவும் இவ்வாறான செயலுக்கான முயற்சியை பாலியல் வன்முறை முயற்சி எனவும் சட்டம் வரையறை செய்துள்ளது.

கே. பெண்கள் மீதான குற்றச் செயல்களில் எவ்வகையான குற்றச் செயல்கள் அதிகம் இடம்பெறுகின்றன? அக் குற்றச் செயல்களை நிரூபணமாக்க சட்டம் எவ்வளவிற்கு ஆதாரங்களை எதிர்பார்க்கிறது?

பதில்: பொதுவாக எமது நீதிமன்றங்களைப் பொறுத்தவரை வரும் சாதாரண, பாரிய குற்றச் செயல்களிலும் பார்க்க பெண்கள் மீதான பாரிய, சாதாரண குற்றச் செயல்களே அதிகமாக இடம்பெறுவதை காணக்கூடியதாக உள்ளது. அவற்றிலும் திருமண ஏமாற்றத்துடன் தொடர்புடைய பிணக்குகளே மிக அதிகமாக உள்ளது. அதற்குள்ளும் காதல் பிணக்குகள் குறிப்பிடக்கூடியளவு வருகின்றன. இக் காதல் பிணக்குகள் மூன்று நிலையாகப் பிரித்தே விசாரணைகள் தொடரப்படுகின்றன. அதாவது ஒன்று - காதலித்து கைவிடல், இரண்டு - காதலித்து உடலுறவு கொண்டு கைவிடல், மூன்று - காதலித்து உடலுறவு கொண்டு தாய்மை அடையச் செய்து கைவிடல் என்பன. இவற்றில் குற்றச் செயல்களுக் கேற்ப தன்மையையும் தாக்கத்தினையும் ஆராயும் நிலையில் தண்டனையும் இழப்பீடும் வித்தியாசப்படுகின்றது. மேலும் இம் மூன்று விடயங்களிலும் காதலித்து தாய்மை அடையச் செய்து கைவிடல் என்ற பிணக்கானது மிக நுணுக்கமாகவும் அவதானமாகவும் ஆராயப்படுகின்றது. காரணம் தந்தை பெயரற்ற அல்லது தெரியாமல் எந்தக் குழந்தையும் இந்த மண்ணில் இருக்கக் கூடாது. அத்துடன் தந்தையில்லாத ஒரு நபர் மீது ஒரு குழந்தையின் தந்தைச் சுமையை சுமத்தவும் கூடாது. எனவே பிள்ளையின் எதிர்காலத்தை கவனத்தில் எடுத்தே இவ்விடயம் ஆராயப்படுகின்றது.

சட்டத்தைப் பொறுத்தவரையில் எந்தவொரு பிணக்காக இருந்தாலும் வலுவான சாட்சிகளை சட்டம் எதிர்பார்க்கிறது. ஆனால் பெண்கள் மீதான குற்றச் செயல்களுக்கு அனேகமாக ஆதாரங்களோ சாட்சிகளோ மிகக்குறைவு. இக் குற்றங்களில் அனேகமான குற்றச் செயல்கள் பாலியல் தொடர்பான குற்றச் செயல்களாக இருப்பதால் யாரும் அச் செயல்களிற்கு சாட்சிவைத்துச் செய்வதில்லை. ஏன் காதல் பிணக்குகளில்கூட பெரும் பான்மையான பெண்கள் பலமான ஆதாரங்களைக்கூட அழித்துவிட்டு ஆதாரம் இன்றி வந்து நிற்பார்கள். அதாவது தமது காதலன் மீதுள்ள அதீத நம்பிக்கையாலும் தமது அன்பிற்கு ஆதாரம் தேவையில்லை என்று நினைப்பதாலும், தமது காதல் விடயம் வீட்டிற்குத் தெரிந்துவிடும் என்ற அச்சத்தினாலும், ஆதாரங்களை அழித்துவிடும் பெண்களும், ஆரம்பத்திலிருந்தே ஏமாற்றம் நோக்கத்துடன் ஆதாரமோ சாட்சியமோ உருவாகாது அவதானத்துடன் காதல் புரியும் ஆணினால் ஏமாற்றப்பட்டவர்களும் எனப் பலவிதமாக சாட்சிகளற்ற பிணக்குகளால் பெண்கள் பாதிக்கப்படும் தன்மை உண்டாகின்றது.

ஆனால் சட்டத்திற்கு முன்னால் வரும் ஒவ்வொரு பிணக்கிற்கும் அதன் உண்மையை நிரூபணமாக்க அதற்கான சாட்சிகள் தேவையாகின்றன. பொதுவிதிப்படி ஒரு நபர் மீது சாட்டப்படும் குற்றச் செயல் நியாயமான, சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட முறையில் நிரூபிக்கப்பட வேண்டும். எனவே ஒரு விடயம் தொடர்பாக நேரடிச்சாட்சியாக இருந்தால் என்ன சந்தர்ப்ப சூழ்நிலைச் சாட்சியாக இருந்தால் என்ன அல்லது ஆவணச் சாட்சியாக இருந்தால் என்ன, சாட்சியம் என்பது அவசியம். 'ஒரு சுற்றவாளி தண்டிக்கப்படக் கூடாது என்பதுடன் ஒரு குற்றவாளி தண்டனையிலிருந்து தப்பிக்கவும் கூடாது' என்ற கோட்பாட்டுக்கு ஏற்ப எமது

சந்திரிகா

கே. பெண்கள் சம்பந்தமான பிணக்குகள் தொடர்பான விசாரணைகள் அனைத்தையும் பகிரங்கமாகவே மேற்கொள்வீர்களா?

பதில்: எமது நீதிமன்றங்களைப் பொறுத்தவரை பிணக்கின் தன்மைக் கேற்ப விசாரணையால் சாட்சியினருக்கு அல்லது பாதிக்கப்பட்டவருக்கு மேலும் பாதிப்பு ஏற்படும் என்கிற பட்சத்தில் பாதிக்கப்பட்டவர் நலன்கருதி தனிப்பட்ட அறையிலோ அல்லது பார்வையாளர்கள் முற்றாக அகற்றப்பட்டு அந்தரங்கமான முறையிலோ 'விசாரணை அல்லது விளக்கம் செய்யப்படும். இவற்றில் பாலியல் பலாத்காரம் தொடர்பான பிணக்குகள் அனைத்துமே அந்தரங்கமான முறையிலேயே விளக்கம் அல்லது விசாரணை செய்யப்படுகின்றன. திருமண ஏமாற்றம், காதல் தொடர்பான பிணக்குகளில் தேவை கருதி அந்தரங்கமான முறையிலும், பகிரங்கமான முறையிலும் மேற்கொள்ளப்படுகின்றன.

கே. வேறு நாடுகளுடன் ஒப்பிடும்போது மிகக்குறைவாக இருந்தாலும் தமிழீழத்திலும் பெண்கள் மீதான குற்றச் செயல்கள் நடைபெறவே செய்கின்றன. போர் நெருக்கடியான சூழலில் பெண்கள் மீதான பாலியல்

தொடர்ச்சி 7ம் பக்கம்



மறக்க முடியவில்லை

உடலை நடுங்கவைக்கும் மார்கழிமாதப் பனித் துளிகள் அந்த அடர்ந்த பெரிய காட்டின் மரத்தின் இலையில் இருந்து வழிந்து சிந்திக் கொண்டிருந்தது. பறவைகளின் சத்தமும் குயில்களின் பாடலும் காற்றின் சிறிய அசைவும் இவற்றுக்கு நடுவில் மெல்லச் சூரியன் தனது கதிர்களை வீசத் தொடங்குகின்றான். இவர்கள் அனைவரும் மிகவும் மகிழ்ச்சியாக ஒன்று கூடினார்கள். அனைவரின் மனமும் இரவு முழுவதும் தேடித்துடவி எடுத்த வேலைத் தகவல்கள் மிகவும் பிரயோசனமாகவும் சுலபமாக அடிக்கக் கூடியதுமாக இருக்கு என்று மனதுக்குள்ள நினைத்தவாறு கதா எழுந்தான். எழுந்தவன், கண்ணால் காட்டின் அனைத்துப் புறமும் ஆராய்ந்து பார்க்கின்றான். அவனின் மனம் இது எமக்கு ஆபத்தான பல எதிரியின் அவதானிப்புப் பகுதியில் நாம் நீண்ட நேரம் தங்கிநிற்கக் கூடாது என்றவாறு தனது துப்பாக்கியை கையில் எடுத்தான். அந்தத் துப்பாக்கியை எடுத்தவுடன் கதாவின் மனதில் ஏதோ இறுக்கம். ஆம் இதே இடத்தில் இரண்டு மாதங்களுக்கு முன் அவன் அந்த நிகழ்வை மறக்க முடியவில்லை.

முன்னர் இந்த ஆளையிறவுத் தளத்தில் வேவு பார்த்துவிட்டு வரும்போது எமது வேவுத் தகவல்களை உறுதி செய்வதற்குத் தங்கி நின்றோம். நின்ற மறுகணம் வேவு அணிப் பொறுப்பாளர் இராகவனின் குரல் இது எதிரியின் ரோந்துப் பிரதேசம் என்றவன் தமது தகவல்களை சரி பார்த்துக் குறிக்கின்றார்கள். தமிழவனின் குரல்:- மச்சான் நாங்கள் அடிக்கின்ற அடி மரண அடியாய்த்தான் இருக்கவேண்டும். அவர் முன்னுக்கு சரியான அலேட். ஆனால் அவதானமாக இருங்கோ ஒருத்தரும் ஆமி கிட்டவந்தாலும் அடிக்க வேண்டாம். அடிச்சா எல்லாம் குளம்பிவிடும் என்றான். அனைவரும் மரங்களோடு மரங்களாக, பற்றையோடு பற்றையாக வும் கையில் குண்டும் வாயில் குப்பியுமாக நிலையெடுத்தனர்.

எதிரி இவர்கள் இருந்த பகுதிக்கு வந்தான். அவனின் திட்டம் பதுங்கித் தாக்குதல் தான் போல வந்தவர் தமது கழுகுக் கண்களால் தேடினார்கள். ஆனால் தமது நிலைகளில் சற்றும் ஆட்டம் அசைவில்லாமல் அமைதியாக இருந்தனர். இவர்கள் தங்கி நிற்கும் பகுதிக் காடுகள் எல்லாம் ஒரே பச்சை நிறமாக இருந்ததால் எதிரியினால் புலிவீர்களை அவதானிக்க முடியவில்லை. ஆனால் எதிரிக்குப் பயம். அதனால் காட்டில் மரங்களுக்கு மரம் தாவும் மந்திகளுக்குக் கூட எதிரி பயந்தான். பின்னுக்கு டம்மி தான் என்றான். அவர்களின் கண்ணில் ஒரு உருவம் ஓடி வருவது தெரிந்தது. அவன் கதா இராகவன் அண்ணா ஆமி வாறான். கதா கூறி முடிக்க முன் அனைவரும் ஆயத்தமானார்கள். இராகவன் கட்டளையிடுகிறான். எல்லாரும் பயத்தினால் தனது கை வந்த திசையை நோக்கிச் சுட்டுத் தள்ளினான். எதிரியின் முகாமில் இருந்தும் ஆட்டிலெறியும் வீசித்தள்ளினார்கள். சிறிது நேரத்தின் பின் எதிரி அப்பகுதியை விட்டு வெளியேறினான். எதிரி சென்றுவிட்டான் என்பதை உறுதி செய்த கதா தனதான குரலில் இராகவன் அண்ணா என்று கூப்பிட்டான். அனைத்து வேவுப் புலிவீர்களும் சூழ்ந்து கொண்டனர். தமிழவன் தன் சாரத்தை நிலத்தில் விரித்து உடனே செச்சா தயார் செய்தார். மற்றவர்கள் வியந்து போனார்கள். எங்கோ ஒரு முனகல் அது வேறுயாருமல்ல இராகவன் அண்ணா வேவுப்புலிகள் விரைவாக செயற்பட்டனர். காயம் அடைந்த இராகவன் அண்ணாவையும், கதாவையும் தூக்கிக் கொண்டு வேவுப்புலிகள் தளம் நோக்கி நடந்தனர். இராகவன் ஏதோ சொல்ல வாய் எடுக்கின்றார். ஆனால் அதிகமான இரத்தம் போனதால் வார்த்தைகள் தொண்டையுடன் நின்றது. இராகவன் மெல்ல மெல்ல இறந்து கொண்டிருப்பதை வேவுப் புலிகள் புரிந்து கொண்டனர். முகாம் வந்தவுடன் இராகவன் அண்ணா வித்துடலாகினார். இவரின் நினைவில் ஆளையிறவு அடிக்கவேண்டும் எத்தனை போராளிகளின் உடலை இந்த முகாம் எடுத்திருக்கும் என நினைத்தவரின் சிந்தனையை அரசொளி திருப்புகின்றான். கதாவும் தனது A.K. துப்பாக்கியை எடுத்துக் கொண்டு ஒரு நடலை இருந்த இடத்தைப் பார்த்துவிட்டு தளம் நோக்கி நடந்தான். தேசம் விடியும் வரை வேவுப்புலிகள் பயணம் தொடரும்...

தமிழீழ பெண் நீதியாளர்

5ம் பக்கத்து தொடர்ச்சி

பிரச்சினைகள் வரக் காரணம் என்னவாக இருக்கும்?

பதில்: இன்றைய எமது சமூகசூழலைப் பொறுத்தவரையில் பல இடப் பெயர்வுகளாலும், மக்கள் மிக நெருக்கமாக வாழும் சூழ்நிலையிலும், அளவுகமாக வேலையில்லாப் பிரச்சினை நிலவுவதும் பல பிரச்சினை எழக்காரணமாக அமைகின்றன. அது மட்டுமன்றி பெண்கள் முன்னெச்சரிக்கையுடன் செயற்படத்தவறுவதும், எதிர்காலத்தைப்பற்றி முன் கூட்டியே சிந்திக்காமையும் ஒரு காரணியாக அமைகின்றது. அதோடு போதிய கல்வியறிவின்மை, முக்கியமாகப் பெண்கள் தொடர்பான குற்றங்களின் போதியளவு விளக்க மின்மையும் அனேக பெண்கள் எதையும் இலகுவில் நம்பிவிடும் நிலைமையுமே காரணம் எனக் கூறலாம்.

கே. பாதிக்கப்பட்ட பெண்கள் அனைவரும் நீதிகோரி நடவடிக்கை எடுப்பார்களா?

பதில்: பாதிக்கப்பட்ட எந்தவொரு பெண்ணும் தனக்கு இழைக்கப்பட்ட அநீதியைக் கருத்தில் கொண்டு எந்த வேளையிலும் நீதி கோரி சட்டத்தின் முன் தனது பிரச்சினைக்குரிய வழக்கினைத் தொடுக்க சட்டம் பூரண உரிமை வழங்கியுள்ளது. இவற்றுள் வயது வந்த பெண்கள் மீதான குற்றச் செயல்களாக இருக்குமிடத்து அப்பெண் தானே நேரடியாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளலாம். இருந்த போதிலும் எமது சமூகத்தைப் பொறுத்தவரையில் பல பெண்கள் நீதி கோரி நடவடிக்கை எடுப்பதோடு அனேகமான பெண்கள் தம் எதிர்காலம் பாதிக்கப்படும் என எண்ணி சமூகத்திற்கு பயந்து தமது பாதிப்பை வெளிப்படுத்தாது மறைக்கின்றனர். பெண்கள் தம் பிரச்சினைகளை மூடி மறைத்து இறுதி வரை அந்த உண்மைகளை ஊமைகளாக உறங்கவைத்துவிட்ட நிகழ்வுகளும் நிறையவே உண்டு.

மேலும் சிறுமியர் மீது இழைக்கப்படும் குற்றச் செயல்களைப் பொறுத்தவரை அவற்றிற்கான சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டியவர்கள் அச் சிறுமியர்களது பெற்றோர் பாதுகாவலரே. அந்த வகையில் பல பெற்றோர்கள் அதற்கான சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும், பாதிக்கப்பட்ட பல சிறுமியர்களின் பெற்றோர், பாதுகாவலர்கள் நடவடிக்கை எடுக்காமலும் இருக்கத்தான் செய்கின்றார்கள். நடவடிக்கை எடுக்காமைக்கான காரணமாக அவர்கள் கூறுவதெல்லாம் தமது பெண் பிள்ளையின் எதிர்காலம் பாதிப்புறுமென்பதே.

அது மட்டுமின்றி, இன்று மன்றுக்கு வரும் பாலியல் பலாத்காரம் தொடர்பான வழக்குகளில் மன்றில் நடைமுறையில் உள்ள போதுகூட அவ் வழக்குகளை மீளப் பெறக் கோருகின்றனர். ஏனோ இக் குற்றத்தின் பாதிப்புக்கள் மீளப்பெற முடியாதவை, சமூகத்தையும் பெண்களையும் பாதிக்கும் என்பதை உணரமறுக்கின்றனர்.

ஒட்டு மொத்தமாக நோக்கும் போது அனேகமாகப் பெண்கள் மீது இழைக்கப்படும் குற்றச் செயல்களுக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படாது மறைக்கப்படுகின்றன என்பது தான் உண்மை.

கே. பெண்கள் மீதான குற்றச் செயல்கள் பாதிக்கப்பட்டும்கூட அனேக பெண்கள் சட்ட நடவடிக்கை எடுப்பதில்லையெனக் கூறுகின்றீர்கள். அப்படியான பெண்களுக்கு நீங்கள் என்ன கூற விரும்புகின்றீர்கள்?

பதில்: பாதிக்கப்பட்ட பெண்கள் தாங்களாக பாதிப்பிற்கான பரிகாரம் தேடிக் கொள்ள வேண்டும். குறிப்பாக இப் பெண்கள் தமது நலனையும் மேன்மை சமூக நலனையும் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும். குற்றம் இழைத்தவன் தண்டனை பெறவேண்டும். பாதிக்கப்பட்டவர் அதற்கான பரிகாரத்தையும் பெறவேண்டும். அதற்காகவே சட்டம் ஒவ்வொரு குற்றச் செயல்களையும் தனித் தனி பிரிவுகளாக்கி அதற்கான வரைவிலக்கணத்தையும் கூறி அதற்குரிய தண்டனை இழப்பீடு என்பவற்றையும் வரையறை செய்துள்ளது.

எனவே, பாதிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்காமல் இருப்பவர்களுக்கு ஒன்று மட்டும் உறுதியாக கூறமுடியும். பெண்கள் மீதான மேலும் பல குற்றச் செயல்களும், குற்றவாளிகளும் சமூகத்தில் உருவாக நீங்களே முக்கிய காரணிகளாக அமைகின்றீர்கள். இனிமேலாவது உங்கள் சமூகத்தில் வாழும், வாழப்போகும் பெண்கள் பாதிக்கப்படாமலும் அன்றி பாதிக்கப்படுமிடத்து கூட அவர்கள் பாதிப்பை நிவர்த்தி செய்யக்கூடிய வகையில் அவர்களுக்கு கல்வியை எடுத்துக்காட்டாக ஒரு முன்னோடியாக அமைய வேண்டியவர்கள் நீங்களே.

எனவே சட்டத்திற்கு மறைத்து எந்த உண்மைக்கும் சவக்குழி தோண்டாதீர்கள். அச் சவக்குழி மேலும் பல குற்றவாளிகளையும், குற்றங்களையும் உற்பத்தி செய்யும். ஆகவே ஆதாரங்களை அழிக்காதீர்கள். அதனை வைத்து உண்மையான குற்றவாளிக்கு தண்டனை பெற்றுக் கொடுக்க வழி செய்யுங்கள். அதனால் நீங்களும் சமூகத்தைத் திருத்த பங்களிப்புச் செய்தவர்களாகுவீர்கள். அது மட்டுமன்றி, சட்டப் பரிகாரம் மூலம் உங்களிற்கு ஏற்பட்ட இழப்பை முழுமையாக அழித்துவிட முடியாது போனாலும் அதனை நிவர்த்தியாவது செய்து கொள்ளலாம். அத்தோடு எமது சட்டத்தில் வரையறை செய்துள்ள ஒவ்வொரு குற்றத்திற்கும் உரிய தண்டனை வழங்குவதன் முக்கிய நோக்கமே 'மேலும் ஒரு குற்றவாளி உருவாகாது தடுப்பதுடன் இனிமேலும் இதுபோன்ற குற்றங்கள் நடைபெறாது தடுக்கவுமே ஆகும்.' ஆகவே பெண்கள் தம்மீதான குற்றச் செயல்களையும் உண்மைகளையும் மூடி மறைப்பதினால் அதனைக் காரணமாக வைத்துக் கொண்டு மேலும் பல குற்றச் செயல்கள் நடைபெறுகின்றன. எனவே இக் குற்றச் செயல்களையும் பாதிப்புக்களையும் மறைத்து வைக்காது சட்டத்தின் மூலம் துணிந்து உங்கள் உரிமைகளை நீதிமன்றங்கள் மூலம் நிலைநாட்ட முன் வாருங்கள். அதன் மூலம் நாளை சமூகத்தில் பெண்களும் நல்லமுறையில் வாழ வழி செய்யுங்கள்.

சுதந்திரம் கேட்டால் சோறில்லையா?

- தமிழீழமெங்கும் மக்கள் எழுச்சி -

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கள அரசு தான் திட்டமிட்டு அமுல்படுத்தும் உணவு மருத்துவத் தடைகளினை மறைப்பதற்காக நுட்பமான பரப்புரை உத்திகளை அமுல்படுத்துகின்றது. இன்றைய உணவு மருத்துவ பற்றாக்குறைக்கு புலிகளே காரணம் என கொழும்பில் இராணுவ அமைச்சும் அரச தகவல் சாதனங்களும் தீவிரமாக பரப்புரை செய்து வருகின்றன. சிங்களப் படைகளின் வன்னி ஆக்கிரமிப்பு முயற்சிகளுக்கான தளபதி மேஜர் ஜெனரல் பலகெல, தமிழ் மக்களின் நலன்களுக்காக ஒரு பாதுகாப்பு வலயத்தை மாங்குளத்தில் நிறுவ தான் தயார் எனவும், அதற்காக 5 கி.மீ. தூரத்திற்கு புலிகள் பின் நோக்கிச் செல்லவேண்டும் எனவும் பத்திரிகைகளுக்கு அறிவித்துள்ளார். 5 கி.மீ. பின்நோக்கி புலிகள் சென்றால் மட்டுமே வன்னி மக்களுக்கு உணவு மற்றும் மருத்துவ விநியோகம் இடம் பெறும் என்ற இராணுவச் செய்தியை சிறிலங்காவின் பிரதான இராணுவத் தளபதியான பலகெல கொடுத்துள்ளார்.

ஜெயசிக்குறுய் சமரில் ஒவ்வொரு அடி நிலத்திற்கும் ஒவ்வொரு சிங்களப் படையினனை பலி எடுத்த வன்னி மண்ணினை, உணவைக் காட்டி பிடிக்கும் போர் உத்தி இது. தமது போர் உத்தியை கவனமாக தேர்வு செய்து மக்களின் பட்டினியுடன் சேர்த்து பரப்புரை செய்வதன் நோக்கம் உலக சமூகத்தின் தீவிர அவதானத்திலிருந்து தப்புவதும் தமிழ்மக்களினை சரணடைய வைப்பதுமாகும்.

கொழும்பில் உள்ள தகவல் தொடர்பு சாதனங்கள் உணவு நிலவரத்தை போர்முனையில் இடம் பெறும் மற்றுமொரு சாதாரண விடயமாக காட்டுவதுடன் புலிகள் 5 கி.மீ. பின்நோக்கி நகர்ந்து மக்களிற்கு உணவு கொடுக்க மறுப்பதாக உலகிற்கு கூற முற்படுகின்றன. திட்டமிடப்பட்ட முறையில் சிங்கள அரசின் பொதுமக்கள் பாதுகாப்பு வலயம் தொடர்பான கருத்து கொழும்பிலிருந்து உலக தகவல் சாதனங்களுக்கு செய்தி கொடுக்கும் சிங்கள செய்தி முகவர்களால் பரப்பப்பட்டது.

தமிழ்மக்கள் இந்த கபட தந்திரத்தை நன்கு அறிந்தவர்கள். இராணுவத்தினை இனப்படுகொலைகளுக்கு வழிகாட்டிக்கொண்டே கறுப்பு ஜூலைக்கு கண்ணீர் விடும் சந்திரிகாவின் கபடத்தை உணர்ந்தவர்கள். 5 கி.மீ. பின்நோக்கி புலிகள் நகர்வது சிங்கள ஆக்கிரமிப்பை 5 கி.மீ. நீடிக்கும் நடவடிக்கை என்பதைப் புரிந்து கொள்ளும் அரசியல் இராணுவத் தெளிவை தமிழ் மக்கள் கொண்டிருக்கின்றனர்.

சிங்கள அரசின் தடை நடவடிக்கைக்கு எதிரான தமிழர்களின் உணர்வுக் கொந்தளிப்பு வன்னியில் தொடர் போராட்டங்களைத் தூண்டிவிட்டுள்ளது. வன்னியில் உள்ள சர்வதேச நிறுவனங்களான ஐ.நா. அகதிகள் ஆணைக்குழு மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் என்பன முன், மக்கள் போராட்டங்களை நடாத்திவருகின்றனர். மல்லாவியில் அமைந்துள்ள இந் நிறுவனங்களின் பணிமனை மக்களின் சட்டபூர்வமான உரிமைக்குரல்களின் கொந்தளிப்பை எதிர்கொண்டு வருகின்றது. அரச அதிபர் பணிமனைகளை மக்கள் முற்றுகையிட்டு வருகின்றனர். வன்னிக்கு ஏற்பட்டுள்ள கொடூரத்தைக் கண்டித்து தென்தமிழீழத்தில் பல்லாயிரம் மக்கள் திரண்டு மாபெரும் பேரணி ஒன்றை நடாத்தி உள்ளனர். சுதந்திரம் கேட்டால் சோறில்லை என்கிறாயா? என பேரணியில் மக்கள் எழுப்பிய குரல் ஜெனரல் பலகெலவின் புத்திசாலித்தனமான உத்திகளை மக்களின் விழிப்பு முறியடிப்பதை எடுத்துக் காட்டியது.

வவுனியாவிலும் யாழ். குடாவிலும் மக்களும் மாணவர்களும் நடாத்திய துணிகரமான, வன்னிக்கான போர் தமிழர்களின் தெளிவான அரசியல் நிலைப்பாட்டையும் போரெழுச்சியையும் வெளிக்காட்டுகின்றது. ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பிரதேசத்தில் துப்பாக்கிகளின் அச்சுறுத்தலில் வாழும் மக்களின் எழுச்சி உலகிற்கு சொல்லப்பட்ட செய்தியாகும். யாழ் பாடசாலை மாணவர்கள் சிங்களப் படைகளினால் நடுத்து நிறுத்தப்பட்டு விரட்டப்பட்டமை மக்களின் எழுச்சிகளை சகிக்க சிங்கள இனவெறி [illegible] என்பதைச் சொல்கின்றது.

சர்வதேச நிறுவனங்கள் இன்று உணவு மருத்துவத் தடைகளுக்கு எதிரான மக்களின் நெருக்கடிக்கும் எழுச்சிக்கும் பதிலளிக்க வேண்டிய காலகட்டத்தில் உள்ளனர். தொடரும் நோயாளிகளின் சாவுகள் தமிழர்களின் தார்மீக நியாயத்தை ஏற்காது காலம் தாழ்த்தும் சிங்கள அரசுக்கும் தமிழர்களுக்கும் இடையேயான தகவல் பரிமாற்றத்தைப் புரியும் சர்வதேச நிறுவனங்கள் உண்மை நிலவரத்தை உலகிற்கு சொல்லுமாறு மக்களினால் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

சிங்களத்திற்கும் தமிழீழத்திற்கும் இடையேயான உறவை முற்றாகத் துண்டித்து தமிழர்கள் தமது தேசிய சுயநிர்ணய உரிமையினைப் பிரயோகிப்பதற்கு ஏற்புடைய அரசியல் சட்ட சூழ்நிலைகள் முன்னிலும் பலமாக இன்று எழுந்துள்ளது. மக்களின் மீது போரைத்தொடுத்து உணவையும் மருத்துவ விநியோகத்தையும் அதற்கான ஆயுதமாகப் பாவிப்பதற்கு எதிரான போரெழுச்சி விடுதலைப் போரின் மற்றுமொரு பரிணாமமாகும். மக்களை பட்டினி போட்டுக் கொல்லும் ஆயிரக்க போராட்டமொன்றின் முன் உதாரணத்தை இங்கு சுத்திகர அமுல்படுத்த முனைகின்றார். எனினும் தமிழர்களின் போர் இன்று விரிவு பெற்றது. பலமான விடுதலை இயக்கத்தினது வழிநடாத்தலுடன் மக்களின் உணர்வு பூர்வமான பங்குபற்றலுடன் நடப்பது. உலகளாவிய தமிழ்த் தேசியத்தின் எழுச்சியும் விழிப்பும் தமிழீழத் தேசிய விடுதலைப் போருக்கு பின் பலமாக உண்டு.

சிங்கள அரசும் இராணுவமும் மக்களின் எழுச்சியை நசுக்கியெடுக்கும் பட்டினித் தடை நடவடிக்கைகள் போரை வெற்றிக்குத் தள்ளும் மற்றுமொரு உத்துதல் ஆகும். மட்டக்களப்பில் ஒலித்த குரலான "சுதந்திரம் கேட்டால் சோறில்லையா" என்ற கேள்வி தமிழர்களின் அரசியல் உரிமைகளை பிரதிபலிக்கும் கேள்விகளாகும்.

— நாகன் —

தென்தமிழீழத்தின் கேள்வி

மட்டக்களப்பு மேற்கு பிரதேசத்தில் 22.07.99 அன்று இடம்பெற்ற வன்னிக்கு ஆதரவான பேரணியில் ஒலித்த மக்களின் எழுச்சிக் குரல்கள்.

"பேசுவது சமாதானம், புரிவது யுத்தம்"

"உணவும் மருந்தும் போராயுதமா?"

"சுதந்திரம் கேட்டால் சோறில்லையா?"

"வாழைக்காயே வாழைக்காயே தமிழ் மக்களை வாழைக்காயே"

"சர்வதேசமே வன்னிச் சிறுவர்களின் அழுகுரலை பார்"

"பாதக அரசே பாதை திற"

மக்கள் நெருக்குதல்கள்

விலிருந்தாவி அரச அதிபர் வவுனியா அரசாங்க அதிபருக்கு அனுப்பிய செய்தி.

சிறுவர்களுக்கும் குழந்தைகளுக்கு [illegible] பால்மா, சீனி (வெள்ளம்) இல்லை. இப்பிரதேசத்த மக்களுக்கான விநியோகத்தை செய்யமுடியவில்லை. ஏனெனில் பருப்பு, சீனி, பால் மாவான இல்லை. மக்களிடையே பட்டினி அமைதியின்மையும் [illegible] அதிகரிப்பதினால் மருத்துவப் பொருட்களுக்கு தொடர் தட்டுப்பாடு நிலவுகின்றது. மோசமாகப் பாதிக்கப்பட்ட நோயாளிகளை வவுனியாவுக்கு எடுத்து செல்ல போக்குவரத்து இல்லை. மக்கள் என்னை நெருக்குகிறார்கள். தயவுசெய்து பாதையை திறக்க துரித ஏற்பாடு செய்யுங்கள்.

தரையிலிருந்து கடலுக்கு செல்லும் போர் முன்னுரிமை

தமிழீழ விடுதலைப் புலிகளின் தொடர்ச்சியான இராணுவ பரிணாமம் சிறீலங்காவின் இராணுவ கோட்பாடுகளை மீள மீள மாற்றங்களுக்கு உள்ளாக்குகின்றது. ஆரம்ப காலகட்டங்களில் பொலிஸ் பலத்துடனும் இலகு ரக இராணுவ துருப்பினரின் உதவியுடனும் புலிகளை வென்றுவிடலாம் எனக் கருதிச் செயற்பட்ட சிங்களப் படைகள் கால ஓட்டத்தில் தீவிர மாற்றத்தை நாடியது.

படைப்பலம் பெருப்பிக்கப்பட்டது. 1986-ம் ஆண்டு 30000 தரைப்படையும், 3960 கடற்படையினரும், 3700 விமானப்படையினரும், 21000 பொலிஸாரும், 5000 விசேட மற்றும் துணைப்படைகளைக் கொண்டதாக சிங்களப்படை விரிந்தது. கனரகப் படைகளின் ஆயுதத் தளவாடப் பலம் அதிகரிக்கப்பட்டது. ஆயினும் புலிகளின் போராற்றல் வளர்ச்சி கண்டு சிங்கள இராணுவ இயந்திரத்தின் பிடியில் இருந்து பிரதேசங்களை மீட்டுக் காக்கும் வல்லமை பெற்றதாக மாறியபோது தமது போர் இயந்திரத்தை சிங்களம் விக்கமடைய வைத்தது. 1990களின் பிற்பாடு இராணுவத்தின் ஆட்பல எண்ணிக்கை துரிதகதியில் இரட்டிப்படைந்தது. 1993ஆம் ஆண்டு 90000 தரைப்படையினர் போரில் ஈடுபடுத்தப்பட்டனர். 10000 கடற்படையினரும் சமமான அளவு விமானப்படையினரும் போரிட்டனர். விமானப்படை போரில் பெரும் பங்காற்றத் தொடங்கியது. கடற்படையின் சுடுகல எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. தென்தமிழீழத்தை ஆக்கிரமித்து இராணுவக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தவாறு வட தமிழீழத்தை நெருக்கும் உத்திகள் கையாளப்பட்டன.

சந்திரிகாவின் ஆட்சிக்காலம் போர்ப் பலத்தை தீவிரமாக அதிகரித்து அதன் மூலம் புலிகளை அழித்துவிடலாம் என்ற இராணுவக் கோட்பாட்டை பிரதிபலித்தது. இராணுவ நுணன அமைச்சர் ரதுவத்தை புலிகளினால் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களை பெரும் படைக்குவிப்பின் மூலம் கைப்பற்றுவதன் மூலம் போரை வெல்லலாம் எனக் கருதினார். 1996-ம் ஆண்டில் 1,35,000 தரைப்படையும் 12000 கடற்படையும் 12000 விமானப்படையும் செயற்பட்டது. 80000 பொலிஸார் செயற்பட்டனர். 8000 அதிரடிப்படையினர் போரில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இராணுவத்தின் செலவீன அதிகரிப்பு இப் போர் நோக்கத்தைப் புலப்படுத்தியது. டாங்கிகள், பீரங்கிகள் போன்ற கனரக ஆயுதங்களே போரின் பிரதான ஆயுதங்களாகத் திகழ ஆரம்பித்தன. யாழ்குடா மீதான தாக்குதல்கள் டாங்கிகளின் பலத்தை கொண்டதாக அமைந்தது என பகிரங்கமாக சிங்களத் தரப்பால் கூறப்பட்டது. மக்கள் குடியிருப்புகள் நிரம்பிய பகுதிகளில் டாங்கிகளுடன் சமர்புரிந்த சிங்களப்படைகள் புலிகளுக்கு எதிரான சரியான இராணுவச் சூத்திரத்தைக் கண்டுபிடித்துவிட்டதாக சிங்களம் கருதியது. புலிகளின் இராணுவ வளர்ச்சியின் இயல்பான போக்கினை சடுதியாக அதிகரிக்கப்பட்டு புதிதாக வடிவமைக்கப்பட்ட இராணுவ தந்திரங்கள் தோற்கடித்துவிட்டதாக சிங்களம் எண்ணியது. பரந்தன் பிரதேசத்தை பிடித்த சமரிலும் மன்னாருக்கான சமரும் தரைப்படையின் அதிகபடிய கனரக ஆயுதங்களின் பலத்தை மையமாகக் கொண்டதாக அமைந்தது. கடற்படையும், வான்படையும் துணைப் படைகள் போன்ற பாத்திரத்தையே வகித்தது.

முல்லைத்தீவு இராணுவ முகாம் மீதான புலிகளின் தாக்குதல் பெரும் அதிர்வைக் கொடுத்தாலும் போர் தொடர்பாக தாம் கடைப்பிடித்த கொள்கையை சிங்களம் கைவிடவில்லை.

ஜெயசிக்குறுய் சமர் இந் நம்பிக்கையின் அடிப்படையில் நடாத்தப்பட்டது. காட்டுச் சமர்களுக்கு பயிற்றுவிக்கப்பட்ட படைகளும் சிறப்புப்படைகளும் டாங்கிகள் என்பனவற்றின் துணை கொண்டு வன்னியை நீதியாக்க முற்பட்டன. சமர் கடுமையடைந்தபோது பெரும் படைக்குவிப்பை சிங்களம் மேற்கொண்டது. அவர்கள் பலமிகு நடப்பான போர் வியூகங்களில் முயன்றனர். இராணுவச் செலவீனம் அதிகரிக்கப்பட்டு தரைப் படைக்கான சுடுகலன்களும் டாங்கிகளும் குவிக்கப்பட்டன. ஆயினும் தாம் சரியானதெனக் கண்டுபிடித்த கோட்பாட்டின் தோல்வியைத் தளபதிகள் கண்டு கொண்டனர்.

இத் தோல்விக்கான அடிப்படைக் காரணங்கள் புலிகளின் போர் ஆற்றல் திட்டமிடல் மற்றும் அமுல்படுத்தும் பலம் பற்றிய தளபதிகளினதும் அரசினதும் பிழையான கணிப்பீடாகும்.

யாழ் குடாநாட்டுச் சமரின் பிற்பாடு வன்னியில் திட்டமிடப்பட்ட படையமைப்பை தேசியத் தலைவர் உருவாக்கினார் என்பதே தமிழர்களின் வெற்றிக்கான காரணம் என வன்னிச் சமர்களை போர் முனையில் தலைமை ஏற்று நடாத்திய தளபதி கேணல் கருணா கூறினார். டாங்கிப்படை பற்றிய சிங்களப்படைகளின் பிரமிப்பை உடைத்த விக்டர் கவச எதிர்ப்புப் படை மற்றும் கிட்டு பீரங்கிப் படை என்பன சிங்களம் சரியென நம்பிய இராணுவ போர் வியூகத்தை தோற்கடித்த படையணிகள் என கொழும்பு இராணுவ ஆய்வாளர்களால் வர்ணிக்கப்பட்டது. தமிழர்களின் தேசியத் தலைவர் சிங்களத்தின் புத்துயிர் பெற்ற போர் நடவடிக்கையை ஜெயசிக்குறுய் சமரின் போது தோற்கடித்தார். சிங்கள இராணுவ அரசியல் தலைமைகளிடையே இவ் கோட்பாட்டுத் தோல்வி பற்றிய சர்ச்சைகள் எழுந்தன. ரதுவத்தை, நாணயக்கார, வீரசூரியாக்களிடையே ஏற்பட்ட மோதல் அடிப்படை போர் வியூகத்தின் வெடிப்பை பிரதிபலித்தன. இராணுவக் கட்டமைப்பு மற்றும் கட்டளையிடும் முறைகளுக்குள் மாற்றங்கள் தேவை எனவும் போரில் கடல் மற்றும் விமானப் படைகளை ஒன்றிணைத்து ஈடுபடுத்த வேண்டும் எனவும் குரல்கள் இணைந்தன. முன்பு சில தடவை முயற்சிக்கப்பட்ட கட்டுப்படைத் தலைமையகம் பற்றிய கருத்து மீண்டும் முன்வைக்கப்பட்டு புதிய வடிவான நவீனமயப்படுத்தப்பட்டதாக அமைவது தொடர்பாக விவாதிக்கப்பட்டது.

சிங்களத்தின் போர்க்கொள்கை மீள ஒருமுறை மாற்றத்திற்கு உட்படுத்தப்படுகின்றது.

இன்று கடற்படையை சிங்களம் தமது முதலாவது பாதுகாப்பு வலயமாகக் கருதுகின்றது என இராணுவ உயர் வட்டாரத்தை ஆதாரம் காட்டி 'சண்டே லீடர்ஸ்' ஏடு எழுதுகின்றது. தம்மிடம் போதிய கடற்பலம் இருந்திருப்பின் தமிழர்களின் விநியோகப் பாதையை துண்டித்திருக்காது என ஜனாதிபதி சந்திரிகா பத்திரிகைகளுக்கான பேட்டியில் கூறியுள்ளார். கடல் 150 கிலோமீற்றர் பெரியதுமான கடற் கலன்களை வைத்துள்ள சிறீலங்கா தனது ஆழ் கடல் போராற்றலை வலுப்படுத்த முனைகின்றது.

புலிகளின் ஆழ்கடல் விநியோகப் பாதையை குறி வைத்தே இவ் ஆழ்கடல்ப் பலம் பற்றிய கருத்துக்கள் இடம் பெறுவதாக கொழும்பு ஏடான 'தி ஐலண்ட்' கூறுகின்றது. தற்போது சிறீலங்கா கடற்படையின் பாவனையில் உள்ள 17மிமீ. கனரக துப்பாக்கியானது புலிகளுடனான கடற்போருக்கு ஏற்புடையதல்ல எனவும், 56மிமீ. சுடுகலன்களே தற்போது தேவைப்படுவதாகவும் கூறப்படுகின்றது. இவ் 56மிமீ. சுடுகலன்கள் மூலம் புலிகளின் தரை நிலைகளையும் தாக்கலாம் என சிங்கள அரசு கருதுகின்றது. இன்று புலிகளின் வடமேற்கு அல்லது வடகிழக்கு கரையோர நிலைகளைத் தாக்க முடியாமைக்குக் காரணம் கடற்படையின் 17மிமீ. சுடுகலன்களை புலிகளின் பீரங்கிகள் தோற்கடித்துவிடும் என்பதே என 'தி ஐலண்ட்' கூறுகின்றது. மேலும் தற்போது கடற்படை கொள்வனவு செய்ய முயலும் இரு ரஷ்ய போர்க்கப்பல்கள் பல தேவைகளுக்கும் பாவிக்கக்கூடிய கப்பல்கள் எனவும் வெறும் சண்டைக்காக மட்டுமல்ல கடற்படையின் பல்வேறு போர் நடவடிக்கைகளையும் பூர்த்தி செய்யும் கப்பல்களே இவை எனவும் வர்ணிக்கப்படுகின்றது.

எனினும் சிங்களக் கடற்படை தனது தோக்கை மாற்றி புலிகளுடன் ஆழம் குறைந்த கடலில் சமர்புரியக் கூடிய ரோந்துப் படகுகளை ரஷ்யாவில் பார்வையிட்டதாக 'சண்டே லீடர்ஸ்' ஏடு கூறுகின்றது. நவீன ஏவுகணைகள் பூட்டப்பட்ட ரோந்துப் படகுகளை உயர் கடற்படைக் குழு பரிசீலித்துப்பார்த்ததாக அறியப்படுகின்றது. கடற்படை இங்கிலாந்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட கலன் படகுகள் தற்போது கடற்புலிகளுடனான சமரிற்கு ஏற்றவை என்பதால் வெறுமனே கிடப்பதால் கடற்படை தனது தேவைகளை ஆராய்ந்து பெற உள்ளதாக கடற்படைத் தளபதிகள் கூறுகின்றனர்.

தற்போது கடலே சிங்களப் படைகளின் பிரதான போர் வலயமாக அறியக்கூடியதாக நிலையை எடுத்துள்ளதால் கடற்சமர் மூலம் போரை வெல்லலாம் என சிங்களம் கருதுகின்றது.

இன்று ஏற்படுகின்ற இம் முன்னுரிமை மாற்றமானது போர்த் தேசங்களுக்கிடையே போர் என்ற மரபு வடிவை எடுக்கின்றது. இதனை ஏலவே கணிப்பிட்ட புலிகள், கடல் புலிகளுக்கு முன்னுரிமை கொடுத்து அதற்கான அத்திவாரத்தை இட்டுள்ளனர். அதிகரிக்கப்படும் சிங்கள கடல் நடவடிக்கை கடலில் பெரும் சமர்களுக்கான சூழ்நிலைகளை உருவாக்கியுள்ளது. கடற்சமரில் வெற்றிகள் தரைச் சமர்களின் வெற்றிகளுக்கு உதவியாக அமையும் என்பதால் கடற்புலிகள் கடற்பரப்பில் பெரும் சமர்களை நடாத்துவர் என்பதை சிங்களமும் அறியும்.

தியாக தீபங்கள்

லெப். சீலன் லெப். செல்லக்கிளி வீரவேங்கை ஆனந் நாழ கந்தையா சந்தீஸ்வரன் சிவானந்தராசா

விழிகளில் சுதந்திரக்கனல் மூட்டிய தியாக சீலர்கள்

சென்ற இதழ் தொடர்ச்சி

முதன் முதலாக அன்றுதான் கையிலெடுத்த எஸ்.எம்.ஜி. செல்லக்கிளியின் கைகளில் வேகமாக இயங்குகிறது. சில, நிமிடங்கள் வேட்டுக்கள் தீர்க்கப்படுகின்றன.

புலிகளை வேட்டையாடவென வந்த, இரகியப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை பொலிஸ் இன்ஸ்பெக்டர் பேரம்பலம், சார்ஜன்ட் பாலசிங்கம், கான்ஸ்டபிள் சிறிவர்த்தனா என ஒவ்வொருவராகச் சுட்டு வீழ்த்தப்பட்டனர்.

இறுதியாக பொலிசார் கொண்டு வந்த ஆயுதங்களாலேயே அவர்கள் சுடப்பட்டதுடன் அவர்கள் வந்த காரையே எடுத்துக் கொண்டு விடுதலைப் புலிகள் ஆயுதங்களுடன் தப்பிச் சென்றனர். மூன்று நாட்களின் பின்னர்தான் பஸ்தியாம்பிள்ளை கொலைவிசாரணை முடிவு பற்றிச்செய்தி வெளியே தெரிய வந்தது. செல்லக்கிளி தலைமையிலான இந்தத் தாக்குதல் நிகழ்ச்சியானது தமிழ்ப் போராளிகள் மத்தியில் ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தியது.

1983ம் ஆண்டு ஜூலை மாதம் 23ம் நாள், மிகப்பெரிய இராணுவ முகாமான பலாலி இராணுவ முகாமிலிருந்து யாழ்ப்பாணம் நகருக்குச் செல்லும் வீதியில் நிருதெல்வேலி என்ற இடத்தில் சோந்து வந்துகொண்டிருந்த இராணுவ வண்டிகள் இரண்டின் மீது செல்லக்கிளி தலைமையிலான பதின் நான்கு விடுதலைப் புலிகளைக் கொண்ட கொரில்லா அணி தனது தாக்குதலை நடாத்தியது. 13 இராணுவத்தினரை வீழ்த்தி ஏராளமான ஆயுதங்களையும் எடுத்த உற்சாகத்தில் நினைத்த விடுதலைப் புலிகள் செல்லக்கிளியின் மறைவுச் செய்தியை அறிந்ததும் அதிர்ச்சியடைந்து சோகத்தில் ஆழ்ந்தனர். அவரது இறுதிக் காலமானது தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஓர் திருப்புமுனை. ஆம்! சரித்திரம் படைத்த செல்லக்கிளி சரித்திரமாகிய அந்த நாளானது தமிழீழ விடுதலைப் பாதையில் அகிம்சைப் போராட்டமானது ஆயுதவேரோடு பிடுங்கி எறியப்பட்டு ஆயுதப் போராட்ட சகாப்தம் உருவான நாளாகும்.

ஆனந்

1982 ஜூன் மாத ஆரம்பத்தில் ஆனந் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்பு கொண்டான். இவனாறு அவன் தன்னை சுடுபடுத்திக் கொள்வதற்கு முன் அந்தக் காலத்தில் இருந்த ஏனைய போராட்டக் குழுக்களை சந்தித்து அவர்களது நடவடிக்கைகளைத் தீர ஆராய்ந்து உணர்ந்த பின்னரே தன்னை விடுதலைப் புலிகளின் புரட்சிகர ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கையோடும் உறுதியோடும் கால் பதித்தான் அந்த இளைஞன்.

விடுதலையை நாம் அடைந்தே தீருவோம் என்ற செம்மாந்த மக்கள் மனநிலை ஆழவேர்பதித்த பல விடுதலைப் புலி வீரர்களது செயற்பாட்டில் ஆனந்தும் ஒருவனாக நிகழ்ந்தான். ஜே. ஆர் ஜெயவர்த்தனவை பலத்த ஏமாற்றுக்குள்ளாக்கிய பெரும் தாக்குதலில் ஆனந் பங்குகொண்டிருந்தான். புலிகளை அடக்கி விட்டோம் என்று ஜே.ஆர். கொக்கரித்த போது விடுதலை போராட்டத்தினை அடக்கிவிட முடியாது என்ற செய்தியை 1982 மே மாதம் நெல்வேயடியில் அரச படையினருக்கு எதிராக விடுதலைப் புலிகள் தொடுத்த வெற்றிகரமான தாக்குதல் தெளிவாக விளக்கியது. ஆனால் சிங்கள ஆட்சியாளர்கள் தங்கள் கதிரைகளை தக்கவைத்துக் கொள்வதற்காகவே காலம் காலமாக தேர்தல் வாகனம் ஏறுவதும் ஓட்டுப் பெறுவதும் என செக்கு மாட்டுத் தனமாய் சுழன்று சிங்கள மக்களை ஏமாற்றி வருகின்றார்கள்.

சிறீலங்கா சிங்கள அரச படைகளுக்கு எதிராக விடுதலைப் புலிகள் நடாத்திய இந்த தாக்குதலை தமிழீழ மக்கள் மத்தியில் ஏற்பட்ட நம்பிக்கை அலையில் நல்லதொரு வெளிப்பாடாக ஆனந் அமைந்தான். ஆனந் விளையாட்டு வீரனாகவும் உதைபந்தாட்டம் கிரிக்கட், தற்காப்புக் கலையான கராத்தே வீரனாக, வாகனத்தை அநாயாசமாகச் செலுத்தும் நிபுணனாகக் கொண்ட ஆனந் விளங்கிய ஆனந் இலக்குத் தவறாத குறிவைப்பாளனாகத் திகழ்ந்தான் ஆனந் பலம் மிகுந்த அடக்குமுறை இராணுவத்திற்கு எதிராக குறைந்த அளவு ஆயுதங்களுடன் தொடுக்கப்படுகின்ற கெரில்லாத் தாக்குதலின்போது இத்தகைய திறன் வாய்ந்த கெரில்லா வீரர்கள் தனி முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக திகழ்கின்றனர்.

இயக்க இரகசியத்தை காப்பதற்காக சிலனை அடுத்து தன்னையும் சுட்டுவிடுமாறு சக வீரனைப் பணித்த ஆனந்தின் இலட்சியப் பற்று எம்மை எல்லாம் மெய்சிலிர்க்க வைக்கின்றது.

சந்தீஸ்வரன்

எமது விடுதலை போராட்ட ஆரம்ப காலத்தில் தாக்குதல்களுக்கு, முகாம்களுக்கு பொருட்களை எடுத்துச் செல்வதற்கு, ஆயுதங்களைக் காவிச்செல்வதற்கு, புதிய இளம் போராளிகளை பயிற்சிக் களத்திற்கு கொண்டு செல்வதற்கு என்று எண்ணற்ற தேவைகளுக்கு வாகனங்கள் தேவையாக இருந்த போது கொடுத்து உதவுவது என்பது மிக மிகச் சாதாரணமான விடயமாக இருக்கவில்லை. பலத்த ஆபத்துக்கள் நிறைந்திருந்த காலம் அது.

அந்தக் காலத்தில் வாகனத் தாராக இருந்த சந்தீஸ்வரன் இயக்கத்திற்கு தேவையான வாகனங்களை வாங்கிக் கொடுத்து உதவி வந்தார். புலிகளுக்கு வாகனங்கள் வாங்கிக் கொடுத்து உதவினார் என்ற செய்தி சிறீலங்கா இரகசியப் பொலிசாருக்கு தெரிய வந்துவிட்டது இதனால் எந்நேரமும் இவரது நடவடிக்கைகளை பொலிசார் தமுக்கமாக கண்காணிக்கத் தொடங்கி விட்டிருந்தார்கள். தேச விடுதலையின் மீதான பற்று உணர்வு அவருள் இம்மியளவேனும் குறையவில்லை. அவர் தன் பணி தொடர்ந்தார்.

உமையாள்புரத்தில் நிகழ்ந்த தாக்குதல் நடவடிக்கையில் பயன்படுத்தப்பட்ட வாகனத்தை விடுதலைப் புலிகளுக்கு சந்தீஸ்வரனே வாங்கி கொடுத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டார் பயங்கரவாதக் குற்றச்செயலாகக் கருதப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டார். அதனால் மேலும் அவருள் தேசிய இயக்கத்தினை வளர்க்கவேண்டும் என்ற பேராவலும் இலட்சியப்பற்றும் வளர்ந்ததே அன்றி ஒடுங்கிப்போய் விடவில்லை. ஆனால் சிங்களக் கழுகுக் கண்களின் பார்வையிலிருந்து தப்பிவிட முடியவில்லை. வெலிக்கடைச் சிறையில் அடைக்கப்பட்டார். சிறைக் கம்பிகளுள் கட்டுண்டு கிடந்து பல இரவுகள் அழுதார்.

தனக்காக அல்ல தன் தாய்த் தேசத்திற்காக, தன் தேச மக்களுக்காக இரண்டு ஆண்டுகள் சிறையில் கிடந்த சந்தீஸ்வரன் சிங்கள இனவாதக் குண்டர்கள் மூலம் தூண்டிவிடப்பட்டு வெலிக்கடைச் சிறைச்சாலைத் தாக்குதலின்போது நிராயுதபாணியாக இருந்த சந்தீஸ்வரன் சிங்கள குண்டர்களினால் தாக்கொணாச் சித்திரவதைக்குள்ளாகி வீரமரணமடைந்தார்.

கடலுள் சின்ன சின்ன அலையை எழுப்பிய இந்தவை வீரர்களின் நினைவு எப்போதும் நிலைத்திருக்க வேண்டும். அவர்கள் நினைவழிந்தால் நாம் மனிதம் அற்றவர்களாகி விடுவோம்.

அபாயமும், துன்பமும், நெருக்கடியும் நிறைந்த அந்தக் காலத்திலேயே உயிர் போயினும் விடுதலைக்கு உதவுவேன் என்ற இதயத் துடிப்பையே அந்த ஆக்கிரமிப்பாளர்கள் கொன்றிடத் துடித்தார்கள்.

நாழ கந்தையா (யத்தூர் மான)

அடைக்கலம் தந்த வீடுகளே
போய்வருகின்றோம் நன்றி!

நெஞ்சை அடைக்கும் துயர் வந்து
செல்கின்றோம் நன்றி

கெரிலாப் போராளிகள் தம்மைக் காத்த வீட்டிற்கு நன்றி சொல்லிப் பாடுவதான அந்தப்பாடல் அன்றைய நிலையின் வதார்த்தத்தை நம்முள் நிரவாமல் விடாமலில்லை. அப்போதெல்லாம் இயக்க உறுப்பினர்கள் நலம்மறைவாக இருந்து செயலாற்றிய காலம். அக்காலத்தில் வீட்டில் அடைக்கலம் கொடுத்தவர்களுள் புத்தூர் மாமாவும் ஒருவர். தேடப்படும் இயக்க உறுப்பினர்களை தங்கவைப்பதென்பது துணிச்சலான காரியம். புலிகளுக்கு அடைக்கலம் கொடுப்பவர்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும். அத்துடன் ஒரு ஆண்டுகள் சிறைத்தண்டனையும் கிடைக்கும் என சிங்கள அரச சட்டம் இயற்றியிருந்த காலம். சிங்கள அரசின் பயமுறுத்தல்களையும் உதாசீனம் செய்து விட்டு இயக்க உறுப்பினர்களுக்கு அடைக்கலம் கொடுத்தது மட்டுமல்ல தான் வைத்திருந்த காரையும் இயக்கத்தின் தேவைகளுக்காக மனமுவந்தளித்தான். பின்னாளில் இயக்கத்தில் பல பொறுப்புக்களை வகித்து சாதனைகள் பல புரிந்த இயக்க முன்னோடி வீரர்களுக்கு தன் மோட்டார் வண்டியைக் கொண்டே வண்டி ஓட்டக் கற்றுக் கொடுத்து அவர்களை சிறந்த சாரதிகளாக்கியவர் புத்தூர்மாமா. பொதுநலத்தொண்டராகவும் விளங்கிய இவர் சமூகமுன்னேற்றத்திற்காக முழுமையாக அடுபட்டார். மக்கள் மத்தியில் நன்மதிப்பைபெற்ற இவர் ஊர்க் கிராம மக்கள் மத்தியில் ஏற்படும் பிணக்குகள், சண்டை சச்சரவுகளையும் நடுநிலை நின்று மக்களின் ஆதரவுடனும் ஒத்துழைப்புடனும் தீர்த்து வந்தார்.

புத்தூரில் அற்புதலயா கலாமன்றம் என்ற பெயரில் ஒரு கலாமன்றத்தை அமைத்து ஏராளமான நாட்டுக்கூத்து, சரித்திர நாடகங்கள் போன்றவற்றை மேடை ஏற்றுவதில் முன்னின்று உழைத்தார் அவர்.

இயக்கத்தின் தாக்குதல் நடவடிக்கைக்கு வாகனம் வாங்கிக் கொடுத்து உதவினார் என்ற குற்றச் சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு வெலிக்கடை சிறையில் அடைக்கப்பட்ட இவர் இரண்டு ஆண்டுகளுக்கு பின் சிங்கள அரசின் கொடிய காவறையின் கீழ் சித்திரவதைக்குள்ளாகி வீரமரணம் அடைந்தார்.

தாயை ஒத்த அன்போடு போராளிகளுக்கு அடைக்கலம் கொடுத்துக் காத்த அவரின் பிரிவு என்றும் போராளிகளின் நெஞ்சை அடைக்கும் துயர்களில் ஒன்றாகவே இருக்கின்றது.

நவரத்தினராசா

இரு கொலைவழக்கு மாட்டிக் குறுகிய கிளிவெட்டியைச் சேர்ந்த இளைஞரான சொலமுதராசா விடுதலைப் புலிகளின் ஆரம்ப காலத்தில் தளபதியாக இருந்த வீரமரணமடைந்த மேஜர் கிளியின் பள்ளித் தோழனாவான் படிக்கும் காலத்திலேயே விடுதலைப் புலிகள் இயக்கத்துக்காகப் பல உதவிகளைச் செய்துவந்த சொலமுதராசா, விடுதலைப் புலிகள் நடத்திய உலைவாள்புரம் தாக்குதலின்போது மேஜர் கிளிக்கு உதவினான் என்ற குற்றச்சாட்டின் பேரில் நுவரலியா வைத்து கைதுசெய்யப்பட்டு வெலிக்கடைச் சிறையில் அடைக்கப்பட்டான்.

3 மாதங்களைச் சிறையில் கழித்த சொலமுதராசா, 23.07.83 அன்று நடைபெற்ற வெலிக்கடைப் படுகொலையின்போது வீரமரணமடைந்தான்.

கசாப்புக்கடைக்காரி பசுவதைக்கெதிராய்...

கறுப்புஜூலையை நினைவுகூரும் சந்திரிகா

கறுப்புயூலையின் கனத்த நினைவுகளை, தமிழ்மக்கள் ஆண்டு தோறும் தமக்கிடையே பகிர்ந்து கொள்ளுகின்றனர். ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்திமூன்றாம் ஆண்டு யூலை மாதம் இருபத்திமூன்றாம் திகதி, ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியாளர்களால் திட்டமிடப்பட்டு ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த இன அழிப்பு. இனவதை நடவடிக்கை சில நாட்களுக்கு கட்டுப்பாடின்றி வெறித்தனமாகத் தொடர்ந்தன. பல ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டனர். வீடுகள் வர்த்தக ஸ்தாபனங்கள் என, கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான தமிழர்களின் சொத்துக்கள் தீமூட்டப்பட்டன, அழிக்கப்பட்டன கொள்ளையடிக்கப்பட்டன. தமிழர்கள் உயிருடன் தீமூட்டப்பட்டனர். அங்கவீனர்கள் ஆக்கப்பட்டனர். பெண்கள் பாலியல் கொடுமைக்கு ஆளானார்கள். பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் தாம் வாழ்ந்த, தொழில் செய்த பகுதிகளில் இருந்து தமிழீழ மண்ணிற்கு அகதிகளாக விரட்டியடிக்கப்பட்டனர்.

இக்கொடுமை கட்டவிழ்த்துவிடப்பட்டு, பதினாறு ஆண்டுகள் கடந்துவிட்டன. பௌத்த சிங்கள பேரினவாதத்தின் தமிழின அடக்குமுறையின் கொடூரத்தையும், தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தின் தார்மீக நியாயத்தையும் உலகம் உணரத்தலைப்படக் காரணமாக இருந்த ஒரு திருப்புமுனை நிகழ்வாகவும் இது அமைந்துவிட்டது.

இந்த வருடம் இதுவிடயத்தில் ஒரு புதுமையான அரசியல் நாடகம் ஒன்றை சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா அரங்கேற்றியிருந்தார். அது, கறுப்புயூலையை சந்திரிகா அரசாங்கமும் அனுட்டித்ததுதான். யதார்த்தத்திற்கு புறம்பாக துருத்திக்கொண்டு நிற்கின்ற பாரிய முரணான அரசியல் வித்தையாக பார்வையாளர்களால் இது கருதப்படுகின்றது. தமிழர்கள் மீது கொண்டுள்ள அக்கறை காரணமாகவோ, இன நல்லிணக்கத்தின் மீது கொண்டுள்ள தீவிர நாட்டம் காரணமாகவோ, அல்லது சமாதானத்தின் பேரிலான ஆர்வத்தின் வெளிப்பாடாகவோ இதை யாரும் கொள்வதற்கில்லை. இதனை வெறும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான பிரச்சாரமாகவே சந்திரிகா அரசு பயன்படுத்திவிருக்கின்றது.

ஒரு நாளும் இல்லாத திருநாளாய், கோவில்கள், தேவாலயங்கள், மசூதிகள், விகாரைகளில் கறுப்புயூலையை நினைவு கூர்ந்து சந்திரிகா அரசு மதவழிபாட்டு நிகழ்வுகளை நடத்தியுள்ளது. அமைச்சர்கள் அரசியல்வாதிகள், ஆதரவாளர்களை இந்நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு சந்திரிகா வற்புறுத்தியும் கேட்டிருந்தார்.

கறுப்புயூலை எப்படி அரங்கேறியது. அதனால் சர்வதேச மட்டத்தில் சிறீலங்கா அரசுக்கு ஏற்பட்ட அவமானங்கள் அகிலத்திகள்.. இதனால் புலிகளிற்கு எப்படி ஆதரவு திரண்டது என்பது குறித்து ஆட்சியாளர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் பத்திரிகைகள் மற்றும் செய்தியூடகங்கள் விலாவாரியாக தகவல்கள் வெளியிட்டன. ஜெயவர்த்தனாவின் ஆட்சியில் அங்கம்வகித்த சில உறுப்பினர்களின் வீடுகளிலேயே வெடிமருந்துகள் திரட்டிச் சேகரிக்கப்பட்டு, தமிழர்களுக்கு எதிரான கொலைவெறியாட்டம் வன்முறைகள் திட்டமிட்டு நடத்தப்பட்டதான அந்த உண்மைகளை, ஆளும்கட்சி ஊது குழல்கள் வெளியிட்டன.

உண்மையில் தமிழர்களின் விடுதலைப் போராட்டம் இவ்வளவு வளர்ச்சியை அடைவதற்கு 83ஆம் ஆண்டு யூலைப் படுகொலைகள் காரணமாகிவிட்டன என்பதை அவை கவலையோடு தெரிவித்தன.

1977க்குப் பின்னரான ஐக்கிய தேசியக் கட்சியின் காலத்து நிகழ்வுகளைத் தூக்கி நிறுத்தி, தனது அடுத்தகட்ட நோக்கம் இலங்கையருக்காக சந்திரிகா பொலித்தலமாக நாடகமாட முற்பட்டாலும், 77ஆம் ஆண்டுக்கு முற்பட்ட, சந்திரிகாவின் தாயார் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சிகாலத்திலும், 1980களில் சந்திரிகாவின் தந்தையார் பண்டாரநாயக்காவின் காலத்திலும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை உரிய பாதையில் இட்டு செப்பனிட்ட, தாக்கமான சம்பவங்கள் பல நிகழ்த்துள்ளன என்பதை வரலாறு பதிவு செய்து வைத்திருக்கின்றது.

தனிச்சிங்களச் சட்டம் கொண்டுவந்ததில் இருந்து, அவசரகாலச்சட்டத்தை அறிமுகப்படுத்தியதுவரை பண்டாரநாயக்கா இன ஒடுக்குமுறைக்காக, பௌத்த சிங்

> கறுப்புயூலையை நினைவுகூரும் சந்திரிகா, தனது தாய் தந்தையர் மேற்கொண்ட இனஅழிப்பை இனஒடுக்குமுறையை நினைவுகூராவிட்டாலும், தனது ஆட்சிக்காலத்தில் பலநூற்றுக்கணக்கான தமிழர்கள் தனது படையினராலேயே கொன்றுபுதைக்கப்பட்டதை, நவாலி தேவாலயம் குண்டுவீசித் தாக்கப்பட்டதை, வடமாட்சியில் பள்ளிச்சிறுவர்கள் கொன்று சிதைக்கப்பட்டதை நினைவு கூர்ந்து பூசைகள் நடத்துவாரா?

சுப்பு

ளப் பேரினவாதத்தின் சார்பில் திரம்பவும் பாடுபட்டிருகின்றார்.

தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள் இவரது ஆட்சிக்காலத்தில், ஐம்பத்தியாறு, ஐம்பத்தெட்டுகளில் ஆரம்பித்துவைக்கப்பட்டன.

80இல் ஆட்சிக்குவந்த சிறிமாவோ பண்டாரநாயக்காவே தமிழர் பகுதிகளுக்கு முதல் முதலாக இராணுவத்தை அனுப்பி வைத்த பெருமையைப் பெறுகின்றார். இராணுவத்தைக்கொண்டு, தமிழர்களின் நியாயமான அமைதிப் போராட்டங்களை அவர், முறியடிக்க வன்முறைகளைத் தாராளமாகப் பயன்படுத்தினார். 71ஆம் ஆண்டு தமிழ்மாணவர்களின் கல்விக்கு உலை வைக்கும் தரப்படுத்தலை அமுலுக்கு கொண்டுவந்ததும் சிறிமாவோ பண்டாரநாயக்காவே. 74ஆம் ஆண்டு, உலகத்தமிழறிஞர்கள், சான்றோர் கல்வியாளர்கள் யாழ்ப்பாணத்தில் ஒன்றுகூடி நடத்திய நான்காவது உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டை பொலிஸ் குண்டர்களை ஏவி, குழப்பியடித்து ஒன்பது தமிழர்கள் துடிக்கத்துடிக்கக் கொன்ற, அகற்றமுடியாத வரலாற்று வடுவை தமிழர்களின் நெஞ்சங்களில் தோற்றுவித்தவர் சிறிமாவோ பண்டாரநாயக்காவே.

இவற்றையெல்லாம் வசதியாக மறைத்து விட்டு, அல்லது மறந்துவிட்டு, ஏதோ 83 யூலையில் நடந்த இனஅழிப்பு நடவடிக்கைதான், சிறீலங்காவிற்கு உலகமட்டத்தில் அவமானத்தை ஏற்படுத்திவிட்டதாகவும், புலிகளின் போராட்டத்திற்கு வழிவகுத்விட்டதாகவும் பொலிப்பிரச்சாரங்களை சந்திரிகா மேற்கொள்வது ஒருவேளை சிங்கள மக்கள் மத்தியில் எடுபடுமோ என்னவோ தெரியவில்லை... ஆனால் கறுப்பு யூலைக்காக மதவழிபாடுகள் நடத்துவது போன்ற நகைப்புக்கிடமான செயற்பாடுகளில் சந்திரிகா இறங்குவதை தமிழ்மக்கள் தராபரம் சரி உலகநாடுகளும் சரி கேலியாகவும் சந்தேகக்கண்கொண்டும் பார்க்கப் பக்குவப்பட்டுவிட்டன என்பதை சந்திரிகா புரிந்துகொள்வாரா.

முன்பெல்லாம் தமிழின அழிப்பு ஆட்சியாளர்களால் திட்டமிடப்பட்டு, சிங்கக் குண்டர்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட அரசியல்வாதிகள் மறைந்து பின்னிருந்து இதனைச் செயற்படுத்தினர். ஆனால் இன்றோ தமிழின அழிப்பு ஆட்சியாளர்களால் திட்டமிடப்பட்டு, அதன்இன அழிப்புக் கொள்கையை செயற்படுத்தும் பிரதான கருவியான இராணுவத்தின் மூலமாக, பகிரங்கமாக அரங்கேற்றப்படுகின்றது. அதற்கான சட்ட உருவாக்கங்களும் இராணுவத்திரச் செயற்படுகளும், இன அழிப்பை நியாயப்படுத்தும் வளம்பெற்ற குமாப் எங்கும் விபரிக்கப்படுகின்றன. தமிழரின் பிணங்கள் எங்கும் விதைக்கப்பட்டிருகின்றன.

பட்சாலை மாணவி கிருசாந்தி குமாரசுவாமி தனது படப்பாடம் பாடசாலை வெறித்தனத்துக்கு உள்ளாகி கொன்று புதைக்கப்பட்டமையை, தனது தேசத்தின் இருண்ட நாளாக சந்திரிகா பிரகடனப்படுத்துவாரா?

சந்திரிகா இந்தக் கொடுமைகளுக்கெல்லாம் சம்மதமாகவோ சம்பந்தமாகவோ என்பதை, தமிழர்கள் மிக நன்றாகவே புரிந்துவைத்திருக்கின்றனர். பௌத்த சிங்கள பேரினவாதிகளுக்கும் இதில் சந்தேகமில்லை. அதிலும் அவரது பாடசாலை உள்ள சிங்களர்கள் இதனை நன்றாகவே புரிந்துவைத்திருக்கின்றனர்.

அல்லாதுபோனால்... கிருசாந்தி குமாரசுவாமியின், வழக்குவிசாரணை... மரண தண்டனை... சிறை என்றெல்லாம் செய்திகள் பரபரப்படிருக்கும் நிலையில், மன்னார் பள்ளிமுனையில் இம்மாதம் ஒரு இளம்பெண், சிங்கள இராணுவத்தினரால் பாலியல் வெறித்தனத்துக்கு உள்ளாக்கப்பட்டு, கட்டுக்கொன்று வீசப்பட்ட நிகழ்வு நடந்திருக்கச் சாத்தியமில்லை. அதிலும் பகிரங்கமாக.

பாங்களிப்பு

அப்பொழுது அந்தக் கல்வி அமைப்பின் பொறுப்பில் நாங்கள் சிலர், எங்களோடு கிழக்குப் பிராந்தியத்திலிருந்து வந்த இடம்பெயர்ந்த மக்களின் பிள்ளைகளுக்கு பின்னேரங்களில் கல்வி கற்பித்தோம். இதில் மூவர் மட்டுமே ஆண்கள் மற்றவர்கள் எல்லோரும் பெண்மணிகள். இவர்களில் வசந்தா என்ற அம்மாவும் ஒருவர். ஒல்லியான தோற்றம் மூன்று பிள்ளைகள் – இருவர் ஆண்கள். இளையவள் பெண். தந்தையை சிங்கள ஊர்காவற்படை ரவுடி ஒருவன் பிள்ளையார் கோயில் பூசையாகிக் கொண்டிருந்த போதே அதன் முகப்பில்வைத்துச் சுட்டுக் கொன்றான். இது திருமலை செல்வநாயகபுரத்துப் படுகொலையில் ஒன்று.

ஊரிலே மூன்று பிள்ளைகளும் படித்துக் கொண்டிருந்தவர்கள். தந்தை துறைமுகத்தில் கங்காணி தாய் ஒன்பதாம் வகுப்பு வரை படித்துவிட்டு வீட்டோடு இருந்துவிட்டாள். இந்தச் சமயத்தில் தான் இடம் பெயர்வு நிகழ்ந்தது.

வன்னியில் அகதிகள் குடியேறி வாழ்ந்த முகாமில் வசந்தாவுக்கும் இடம் கிடைத்தது. நிவாரணத்தின் உதவியுடன் வாழ்ந்து கொண்டிருந்தபோது கல்விக்கழகத்தில் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்கும் ஆசிரியையாகத் தெரிவு செய்யப்பட்டாள்.

வடக்கில் வீசிய சாமானியக்காற்று புயல்வேகம் கொண்டது. பல தசாப்தங்களாக வேரோடிய விருட்சம் போல் தமிழர் மண்ணில் நிலைத்துவிட்ட சில சிங்கள இராணுவ முகாம்கள், விடுதலை வீரர்களால் வேரோடும் வேரடிமண்ணோடும் பிடுங்கி வீசப்பட்டன. உறவுகள், ஒப்பந்தங்கள் கிழிந்து நிணக்குகள் இறக்கங்கண்டன.

தமிழர் தலைகளிலும், பள்ளிக்கூடம், கோயில் போன்றவற்றின் மீது வீசப்பட்ட ஐம்பது கிலோ குண்டுகள், இரு நூற்றைம்பதாக எடைகூடி இடிமின்னலென முழக்கம் கண்டன.

வனப்புமிக்க கிராமங்கள் பொசுக்கப்பட்டன. சிறப்புமிகு நகரங்கள் கடுகாட்டு மேடுகளாகின. அப்பாவி மக்கள் எறும்புகள் போன்று நசுக்கப்பட்டனர். இத்தனையும், பௌத்தமத போசகரான சிறீலங்கா ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் நிகழ்ந்து கொண்டிருந்தன.

வசந்தா ரீச்சரின் மூத்தவன் பள்ளிக்கூடம் சென்றவன் வீடு திரும்பவில்லை. சிலநாட்களாக அவன் எதையோ பலமாகச் சிந்தித்தவாறு திரிந்தது தாய்க்குத் தெரிந்திருந்தது.

முகாம் குழந்தைகள் பள்ளிக்கூடம் செல்ல மறுத்தனர். பெற்றோர்களும் அவர்கள் விட்டகல்வதை விரும்பவில்லை – கண்மூடித்தனமான குண்டு வீச்சுக்கள் வசந்தாவுக்கு மகனின் பிரிவு வேதனையாக இருந்தாலும் விபரீதமாகத் தெரியவில்லை. கணவனுக்கு ஏற்பட்ட கோரம் அவளுக்கு கண்முன்னே தெரிந்தது. சுதந்திரவாழ்வு தேவைப்பட்டால் சுமக்கும் சுமையும் பலமாக இருக்கும் என்பது அவளுக்கும் தெரியும். நமது பிள்ளைகள் துப்பாக்கி தூக்காவிட்டால் கொலைகாரர்கள் தராளமாக ஆயுத பாணிகளாகத் திரிவார்கள் என்பதனால் மகன் எடுத்த முடிவுக்கு தன்னுள் அங்கீகாரம் வழங்கினாள்.

மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் மூத்தவன் மூர்த்தி வரிச்சீருடையோடு வீடு வந்து சென்றான். தந்தையைப் போலவே எடுப்பான தோற்றத்தோடு இருந்தது தாய்க்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது.

வெளியே நிலமை மாறிக்கொண்டு வந்தது. மக்களின் தலையில் கல்லைப் போட, உயர்த்திய கல்லை தன்கால்களில் போட்டுக் கொண்டு நொண்டியாகிக் கொண்டிருந்தது சிங்களப்படை. ஆத்திரமும் ஆவேசமும்கொண்ட அவள் மக்களை பட்டினி போட உணவு நிவாரணத்தை வெட்டித் தொலைத்தாள்.

★ ★ ★

வசந்தா ரீச்சரின் குடிசையில் வசந்தத்தின் உயிர்ப்பு அருகி மறைந்தது. இரண்டாவது மகனும் அண்ணனின் வழியில் போய்விட்டான். அதனை அவளால் சகிக்கமுடியவில்லை. அவன் மலை போல் நம்பியிருந்ததெல்லாம் அந்தப் பையனைத்தான். பல குடும்பங்களில் நான்கைந்து பேர் விடுதலைப் போரில் சங்கமித்து சரித்திரம் படைத்தார்கள். அது அவளுக்கு நன்கு தெரியும். ஆனால் அவனைப் பொறுத்த வரை இரண்டாவது மகனின் போர்ப்பங்களிப்பு சமக்க முடியாத தொன்றாகவே இருந்தது. எனினும் அவள் சமாளித்தாள். பருப்பமாக சிரசில் ஏறி அமர்ந்தது.

நிவாரணம் என்று நிழல் தந்த விருட்சம் வேரோடு சாய்ந்து விடவே வறுமை என்ற வெம்மியின் அகோரம் கடுமையாக இருந்தது. கல்வி நிலையங்கள் ஏற்கனவே மூடப்பட்டு விட்டன.

தூண்டுவார் அற்ற விளக்குகள் போல் பிள்ளைகளின் கல்வி நிலை எண்ணெய் வற்றிய விளக்காயிற்று. பிள்ளைகள் களிப்போடு மரநிழல்களில் காலத்தைப் போக்கினர். கரிசனையான பெற்றோர்கள் பிள்ளைகளை பெரியபள்ளிக்கூடம் அனுப்பினர் வசந்தா தனது மகனை விடாது கல்லூரிக்கு அனுப்பினாள்.

ஏற்கனவே கணவரின் மறைவினால் ஆடிப்போன வசந்தாவின் தேகநிலை இப்போ உருகி உலர்ந்து கொண்டிருந்தது.

போராட்டத்தை போராளிகள் கலந்தார்கள். அதன் வேதனையை பொதுமக்கள் கலந்தனர். வேதனை தாங்காத சுதந்திரம் விடுதலையாகுமா! வேதனையில்லாமல் வெற்றியைத் தந்த சுதந்திரத்தின் தாக்கம் தான் அது வாங்கிக் கொண்டவர்களின் முதுகெலும்பு தகர்கிறது.

பிள்ளை மல்லிகா பள்ளிக்கூட யூனிபோர்ம் சட்டைகள் இல்லாது முணங்கிக் கொண்டு கல்லூரிக்குச் சென்றாள். கொல்கிக்கும் பேனாவுக்கும் வேறாக உழைக்க வேண்டியிருந்தது. இந்த வகையிலும் மணியத்தார் வீட்டை வசந்தாவால் மறக்க முடியாது. பிள்ளைகள் பாவித்து ஒதுக்கி வைப்பதை மணியத்தார் மனைவி கொடுத்துதவினாள்.

சற்றுத் தொலைவில், அதே சாலையில் தான் மணியத்தார் வீடும் இருந்தது. சற்றுப் பெரியவீடு இன்னும் மூன்று நான்கு வீட்டுக் காணிகளும் அவர்களுக்குச் சொந்தமாக இருந்தன.

மணியம் பத்து ஆண்டுகளுக்கு மேல் கனடாவில் தொழில் இங்கே குடும்பம் வசதியாக வாழ்கின்றது. நான்கு பெண் பிள்ளைகள் மூத்தவர்கள் இரண்டு ஆண்கள். தெய்வம் தந்த செல்வம் போல் யாவரும் கல்லூரியில் பயில்கின்றார்கள், சேமமாய் வாழ்ந்தனர். அங்கு தான் வசந்தா வீட்டுவேலைகளுக்காக இடம் பிடித்திருந்தாள். அந்த வீட்டு அம்மாளுக்கு அவள் மீது நல்ல நம்பிக்கை, அன்பு.

காலையில் சென்றதும் வசந்தாவுக்கு ஒரு பால்காய்ச்சி காத்திருக்கும். வேலைகளுக்கான உத்து சக்தியாகவும் அது இருந்

க.சா.அரியநாயகம்

தது அவளுக்கு என்றாலும், அகதிக் கோலம் அவளைக் கேட்டுவிட்டது. கைகளைத் தூக்கி உலக்கையைப் போடும் போது கைப்ழ் டுக்குள் டக் டக் என்று கேட்பது அவளுக்கு மட்டும் தான் கேட்கும் உலர்ந்து ஒட்டிவிட்டது தேகம்.

இரண்டு மணிபோல் வேலைகளனை முடித்துக் கொண்டு வீடு திரும்பும்போது அந்த அம்மா ஏதாவது ஒரு பார்சலை வசந்தாவின் கையில் கொடுத்துவிடுவாள். இரக்கமுள்ளவள் சிலர் வழங்க விரும்புவதும், அவற்றை ஏகபோகித் வாங்கிச்செல்லவும் நிறைந்த சமூதாயத்தானே இது. கடவுள் இல்லாது போனாலும் தேவலை கைப்பொருள் உள்ளவர்தான் தேவைபோல் இருந்தது வசந்தாவுக்கு. நல்லவேளை தர்மம் பற்றி நம் முன்னோர்கள் உபதேசித்து வைத்தது.

இரண்டு மணிக்கு வீடு சென்று திண்ணையில் அமர்ந்து விட்டால் மாலை ஏழு மணிவரையில் வசந்தா அங்கேயே இருப்பாள். மகன் பார்த்திருந்துவிட்டு வெண்ணீர் வைத்துத் தருகிறேன் என்று வற்புறுத்துவான்.

தூங்குவதற்குப் பாயில் சரிந்தால் நித்திரை வருவது தெரியாது. அத்தனை அசதி சாமம் மட்டுந்தான் அவள் எழும்புக் கூட்டைப்போர்த்திக் கிடக்கும். கண் மூடப்போகும் போது பிள்ளைகள் பற்றிக் கவலைதான். மணியத்தார் வீட்டுக் பெத்தினால் போல் அத்தனை பிள்ளைகளும் இருந்தார்கள். ஏன் இந்த நாட்டைப் பற்றிய நினைவு அந்தப் பிள்ளைகளுக்கு வருவதில்லையா? ஏன் அவர்களின் உடலில் ஓடுவது வெறும் தண்ணீரா? அந்தப் பெண்கள் தமிழீழம் கிடைத்தால் நல்லபடியாக வீடுகளை மண்வாரு புதிய மேல் தரில் புணரமைப்பது என்று சிந்திக்கிறார்கள். நாங்களோ சாழ்போர் முடிந்தால் எமது பிள்ளைகள் மீண்டும் வீடு வருவார்கள், வீடு கலகலக்கப் போகிறது என்று கனவு காண்கின்றோம். எத்தனை வேறுபாடு! அவள் மனதில் எண்ணங்கள் சிலிர்த்தன.

ரீச்சர் கண்களைக் கசக்கி விட்டாள். நித்திரை இமைகளை வருடியது. அமைதியின் வெளிப்படாக ஒரு நீண்ட பெருமூச்சு எண் பிள்ளைகள் நாளை உதயமாகப் போகும் இனம் பரிதியின் பொற்கதிர்கள். அவர்கள் புதிய உலகச் சிற்பிகள் அதன் பங்காளிகள் அதுதான் வேறுபாடு.

கண்ணீர்ப் பாதை

கப்டன் தட்சாயினி

இயற்கை எழில்கொஞ்சும் பிரதேசம்தான் மல்லாவி. வானோங்கி வளர்ந்த கானக மரங்கள் நீர்ப்பாசனத் தேவை கருதி அமைக்கப்பட்ட நீர் நிறைந்திருக்குளங்கள் பொட்டி போட்டு விளைச்சல்தரும் தென் வயல்கள் எல்லாமே கொள்ளை அழகுதான். அந்த அழகுபொருந்திய மல்லாவியில்தான் கப்டன் தட்சாயினி பிறந்தாள். இவளது இயற்பெயர் கலைவதனி ஐயாத்துரை இவள் படிப்பில் மிகவும் கெட்டிக்காரி மிக நன்றாகப் படித்து வருவதால் மிக உயர்ந்த ஒரு தொழிலில் அமர்வாள் குடும்பத்திற்கு பெரும் உதவியாக இருக்கும் என கலைவதனியின் பெற்றோர் எதிர்பார்த்தனர். அவளும் பெருமிதப்படன் கல்வி கற்றுவந்தாள். தமிழ்மக்களின் கல்வியைச் சிதைப்பதற்காகவே புதுப்புதுச் சட்டங்களை உருவாக்கி தரப்படுத்தல் என்ற கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்தி தமிழ் மாணவரின் எதிர்காலத்தை சூனியமாக்கிய சிங்கள அரசாங்கமா தமிழ்ப் பிள்ளைகளின் கல்வியில் அக்கறைகாட்டப்போகிறது.

எதிர்காலத்தில் கல்வியில் மேம்பாடு காணவேண்டும் என்ற கலைவதனியின் சிந்தனையை விரைவாக மாறிவரும் நாட்டு நிலைமை திசைதிருப்பியது. எங்கும் இராணுவ நடவடிக்கை என்ற பெயரால் பொது மக்கள் படைபடைக் கக் கொல்லப்பட்டார்கள். பாடசாலை என்று பாராமல் பள்ளிச் சிறார்கள் குண்டு வீச்சால் பிய்த்து எறியப்பட்டார்கள். வாழ்க்கை பூராவும் தேடிய சொத்துக்கள் கண்மூடித்திறப்பதற்குள் நிர்மூலமாக்கப்பட்டன.

இந்நிலை நிகழ்வுகள் கலைவதனியின் மனதைப் பெரிதும் பாதித்தது தொடர்ந்து படிக்க சிங்களஅரசு விடப்போகிறதா, என சிந்தித்தாள் எதிரியை முறியடித்துப்போட்டு கல்வியைத் தொடருதல் சரியெனப்பட்டது 10-ம் ஆண்டுடன் கல்வியை நிறுத்திக் கொண்டு இனத்தின் விடுதலைக்காகப் போராடப் புறப்பட்டாள். 1990-ம் ஆண்டு காலப்பகுதியில் மட்டு அம்பாறைக்காட்டில் முதல் முதலாக பெண்போராளிகள் பயிற்சி பெற்றனர். அந்த அணியில் கலைவதனியும் இணைந்து கொண்டாள் பயிற்சி முடிந்து வெளிவரும்போது ஆயுதத்தைக் கையாளும் திறமைபெற்ற போராளியாக தட்சாயினி என்ற பெயருடன் வந்தாள். இவள் சக போராளிகளுடன் மிகவும் இனிமையாக கலகலப்பாக பழகுவாள்.

இவள் மீது எல்லோரும் அளவற்ற அன்பு வைத்திருந்தார்கள், தட்சா என்று அன்புடன் அழைத்தார்கள். 1991-ல் இவள் யாழ்ப்பாணம் சென்று அங்கு இயக்க செயற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டாள் மக்களுடன் மிக அந்நியோன்யமாக பழகி அவர்களின் அன்புக்குப் பாத்திரமானாள். சிறந்த ஒரு போராளியாக களங்கள் பல கண்டாள். பலமுறை அணிநடாத்திச் சென்று எதிரிக்கு பெரும் சேதத்தை ஏற்படுத்தினாள். அச்சுவேலிப்பகுதியில் உள்ள பத்தமேனியில் இராணுவத்தாக்குதலின் போது இவள் காயப்பட்டாள்.

காயம் ஆறும் வரை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று பின்னர் சில நாட்கள் தங்கியிருந்து ஓய்வுபெற்றாள். பூரணஓய்வுக்குப் பிறகு பொறுப்பாளர் வாகனச்சாரதியாக நியமிக்கப்பட்டாள். எதிலும் திறமையைக் காட்டி முன்னேறும் தட்சாயினி வாகனம் செலுத்துவதிலும் தன் திறமையைக் காட்டி ஒரு திறமையான சாரதி என்ற பெயர் வாங்கினாள். களம் கண்டு எதிரியைக் கொன்று குவிக்கவேண்டும் என்ற உத்வேகத்துடன் இயக்கத்தில் இணைந்த தட்சாயினிக்கு களம் காணாமல் ஒதுங்கி இருப்பது வேதனையைத் தந்தது. நான் சண்டைக்குப் போகப் போறன் என்று தளபதியிடம் தயவாகக்கேட்டு தளபதியின் சம்மதத்தைப் பெற்றாள். ஆயினும் அவள் சண்டைக்கு அனுப்பப்படவில்லை வேறு வேலைகளில் அமர்த்தப்பட்டாள்.

பல நாட்கள் ஆகியும் இன்னும் களத்திற்கு அனுப்பப்படாதது கண்டு மனதுக்குள் அழுது கொண்டாள். ஒரு நாள் தட்சாயினி விரும்பிய போர்க்களம் அவளை அழைத்தது. அது சூரியக்கதிர்-2 தாக்குதல் நடவடிக்கையாகும். அப்போது தென்மராட்சியில் நின்று சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். எதிரி ஏவிய எறிகணை வெடித்துச் சிதறியபோது ஒருதுண்டு இவள் காலை பதம் பார்த்தது காலில் இரத்தம் பெருகியபோதும் சிரித்துக்கொண்டு பயிற்சி விடுக்கொண்டிருந்தாள். அவள் அடிக்கடி சொல்லுவாள் நான் வீரச்சாவடைஞ்சா ரோஜாப்பூவாலை மாலை கட்டி என்ர பெடிக்கு போடுங்கோ என்ன என்று இருந்தாப்போல் ஒரு நாள் சொன்னாள்.

அவள் சொல்லி அடுத்த நாள் அவள் போர்க்களம் புகுந்தாள் களத்தில் புயலெனவே சீறிப்பாய்ந்து எதிரிகளை சாடினாள் ஓய்வு ஒழிச்சல் இன்றி களத்தில் நின்று அவள் ஆயுதத்தை இயக்கினாள். களத்தில் போர் இரவு பகலாய் தொடர்ந்திருந்த வேளை அதிகாலை அந்தச் செய்தி வந்தது. ஆம் கலைவதனி என்ற தட்சாயினி வீரச்சாவடைந்து விட்டாள் என்ற செய்தி. சதா போர்க்களம் கண்டு போர்புரிய வேண்டும் என்று நினைத்தவள் கப்டன் தட்சாயினியாக போர்க்களத்திலேயே தன் இறுதி மூச்சை விட்டுக்கொண்டாள். அவள் விட்டுச்சென்ற பாதை முடிந்து விடவில்லை கிளைவிட்டு பல வழிகளிலும் விரிந்து நிற்கின்றன. அதில் ஆயிரம் ஆயிரம் கதிர் வீரர்கள் விறு நடைபோடுகின்றனர் வெகுவிரைவில் நாம் எம் மாவீரர்களின் கனவை நனவாக்க சுதந்திர தமிழீழம் காண்போம்.

எழுதியவர்
போராளி - ஜூலி

யுத்தமே சந்திரிகாவின்...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெறும் இடங்களில் எறிகணை, விமானத்தாக்குதல்கள் மற்றும் இராணுவத்தினரின் தீமூட்டல்கள் என்பனவற்றால் கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதியான சொத்துக்கள் அழிக்கப்படுகின்றன. 1983-ம் ஆண்டு தொடக்கம் 1997-ம் ஆண்டு வரை பாதுகாப்புச் செலவிற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவழிக்கப்பட்டது 24000 கோடி ரூபா (குறைநிரப்பு பிரேரணைகள் மூலம் பெற்றுக் கொண்டது உட்படவில்லை) வாக இருக்கும் போது இந்தக் காலப் பகுதியில் யுத்தத்தினால் ஏற்பட்ட இழப்பு 2,34,000 கோடி ரூபா என சர்வதேச ஆய்வு நிறுவனம் ஒன்று தெரிவித்திருந்தது. யுத்தச் செலவைவிட சமாதானத்துக்கு யுத்த இழப்பு ஏற்படுகிறது. இவ்வாறாக நாட்டின் பெருமளவு சொத்துக்களை யுத்தம் விழுங்கிக் கொண்டிருக்கிறது. இதனால் சிறீலங்காவைவிட வறுமைப்பட்ட நிலையில் இருந்த மலேசியா, இந்தோனேசியா போன்ற நாடுகள் சிறீலங்கா ஆட்சியாளர்கள் யுத்தக் கொள்கையைக் கடைப்பிடித்ததினால் இன்று அந்த நாடுகள் சிறீலங்காவை முந்திக் கொண்டுவிட்டன. நாட்டின் இவ்வாறான நிலையினால் நாட்டின் பொருள் உற்பத்தி குறைவடைந்து பொருட்களின் விலை அதிகரிக்கப்படுகின்றது. மழுக்கத்தில் வேலையில்லாப் பிரச்சினை அதிகரித்து பணவீக்கம் அதிகரிக்கின்றது. இது மக்களை மேலும் வறுமை நிலைக்குத் தள்ளியுள்ளது. இந்த நிலையில்தான் சந்திரிகா அம்மையாரின் தொடர்ந்து செல்லும் யுத்தக் கொள்கையினால் பொருளாதாரம் பற்றாதாமல் நோக்கிச் செல்வது விரைவு படுத்தப்பட்டுள்ளது.

இதை சர்வதேச நாணய நிதியம் கண்டனம் செய்திருந்தது. 'அரச சேவை, ஓய்வூதியம் என்பவற்றில் சீர்திருத்தம் கொண்டு வரப்பட்டு செலவீனத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். உள்நாட்டு முதலீட்டுத்துறை வீழ்ச்சி கண்டுள்ளதுடன் பணவீக்கம் 14 சதவீதம் அதிகரித்துள்ளது. வங்கித்துறை பலவீனமடைந்துள்ளது. வெளிநாட்டுச் சொத்துக்கள் குறைவடைந்துள்ளன. அபிவிருத்திக்கான செலவீனம் அதிகரிக்கப்பட வேண்டும் என்பது கடந்த நான்கு ஆண்டுகளாக வலியுறுத்தப்பட்டு வருகிறது. சமச்சீரற்ற பொருளாதாரப் பகிர்வு காணப்படுகிறது. அரசாங்கத்தின் பின்னடைவு நிலையை 1999-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டம் புலப்படுத்துகிறது. பணவீக்கத்தை சந்திரிகா அரசாங்கத்தினால் கட்டுப்படுத்த முடியவில்லை' என சர்வதேச நாணய நிதியத்தின் கொழும்பு வதிவிடப் பிரதிநிதி சுதிப்தா ஸிங்கலா பொருளாதாரத்தைப் பொறுத்து மொத்தத்தில் மாவிய சுழலாக இல்லை' எனக் கருதுவதானது சந்திரிகா அரசாங்கத்தின் பொருளாதார அலட்சியத்தை வெளிப்படுத்துகிறது.

இந்த நிலையிலாவது ஜனாதிபதி சந்திரிகா அரசாங்கம் யுத்தத்தை நிறுத்தி பொருளாதாரத்தை அபிவிருத்தி நோக்கி இடுப்பு செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளாது அரச சொத்துக்களை விழுங்கு யுத்தத்தை தொடர்ந்து நடத்தவே விரும்புகிறது. 1997-ம் ஆண்டு பாதுகாப்புச் செலவீனத்தை ஈடுசெய்ய மிகப் பெரிய திறுவனமான 'ஹெல்கொம்' நிறுவனம் அபகரிப்புக்கு விற்கப்பட்டதாக சிறீலங்காவின் பாராளுமன்ற உறுப்பினர் பட்டி விக்கிரமசிங்கா கூறியிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இந்த பேரம்பேசல் 1998-ம் ஆண்டு பாதுகாப்புச் செலவை ஈடுசெய்ய மல்லாமல் திறுவனத்தில் 40 விழுக்காடு நிலையை 'லங்கா' நிறுவனத்திற்கு 100 கோடி ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டது.

இறுதியாகவே, வருடா வருடம் வெளிநாடுகளிடம் கடன் பெற்றும் யுத்தத்திற்குச் செலவிடுகின்றது இது சந்திரிகா அரசாங்கம் யுத்தத்தில் கொண்டுள்ள தீவிரத்தையும் தனது நம்பிக்கையையுமே வெளிப்படுத்துகின்றது இருப்பினும் இதன் தீங்கான விளைவுகள் மீளமுடியாத பொருளாதாரச் சிக்கலில் விழத்தூண்டி தவிக்கவுமுடியாத ஒன்றாகவே இருக்கும். இவ்வேளை சந்திரிகா அரசு யுத்தத்தில் வெற்றியுமில்லை, சமாதானமும் இல்லை என்ற நிலையில் மட்டுமல்ல, சிறீலங்காவின் பொருண்மிய கட்டமைப்பையே சிதைத்துவிடக்கூடிய முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டியிருக்கும்.

தாயகம் நோக்கிய பயணம்

முதலாம் பாகம்

அத்தியாயம் முப்பத்தொன்று

தொடர்ச்சி...

நாங்கள் பிள்ளைகளை பலிக்கடாக்கள் ஆக்குகிறோம் என வைற்ஹோல் முதலைக்கண்ணீர் வடிப்பதைக் கண்டு நான் வியப்படைகிறேன். எக்ஸோடசில் இருக்கும் ஒவ்வொரு பிள்ளையும் கய விருப்பத்தின் பேரில் வந்தவர்கள் எக்ஸோடசில் இருக்கும் ஒவ்வொரு பிள்ளையும், ஹிட்லரிசத்தினால் அனாதையாக்கப்பட்டவர்கள். அநியமாக ஒவ்வொரு பிள்ளையும் ஜெர்மனிய அல்லது பிரிட்டிஷ் தடுப்பு முகாங்களில் ஆறு வருடங்களுக்கு மேல் கழித்தவர்கள்.

வைற்ஹோல் இந்தப் பிள்ளைகளின் நலன்பற்றி இவ்வளவு கரிசனைப்பட்டால், நான் அவர்களைக் கராஒலொஸ் முகாம்களை, பத்திரிகையாளர்கள் பார்வையிடத் திறந்து விடும்படி சவால் விடுகிறேன். அவைகள் கிட்டத்தட்ட, சித்திரவதை — தடுப்பு முகாம்களைப் போன்றவையே. முள்ளுக் கம்பிகளுக்குப் பின்னால் இயந்திரத் துப்பாக்கி முனைகளில், உணவு, நீர் பற்றாக்குறை வைத்திய கவனிப்பின்மை நிலைகளில் மக்கள் வைக்கப் பட்டிருக்கிறார்கள். இந்த மக்களுக்கு எதிராகக் குற்றச்சாட்டு எதுவும் இல்லை. ஆயினும் பலவந்தமாக கராஒலொஸ்ஸில் தடுத்து வைக்கப்பட்டு இருக்கிறார்கள்.

பலஸ்தீனப் பிரச்சினையில், நியாயமில்லாத தீர்வொன்றுக்குத் தங்களை நாங்கள் வெருட்டி உட்படுத்த முயலுவதாகக் குற்றம் சாட்டுகிறார்கள். 60 இலட்சம் யூதர்களில் எஞ்சியிருக்கும் இரண்டரை இலட்சம் யூதர்கள் ஐரோப்பாவில் இருக்கிறார்கள்.

பிரிட்டிஷார் பலஸ்தீனத்துக்குள் அனுமதிக்கும் தொகை ஒரு மாதத்துக்கு ஆக எழுநூறு போர்கள்தான். இதுதானா அவர்களுடைய நியாயமான தீர்வு?

இறுதியாக, பலஸ்தீனத்தில் பிரிட்டிஷாருக்கு உள்ள உரிமை பற்றி வாதிக்க விரும்புகிறேன். ஹிட்லரிடம் இருந்து தப்பிப் பிழைத்தவர்களை விடக் கூடுதலாகப் பலஸ்தீனத்தில் அவர்களுக்கு உரிமை இருக்கிறதா? உங்களுக்கு ஒன்றை வாசித்துக் காட்ட அனுமதியுங்கள். என்று கூறிவிட்டு, ஃக்கான் அறையின் மேசையின் மேலிருந்து ஒரு பைபிளை எடுத்து, எசக்கியேல் ஆகமத்தை (Ezekier) நிறுத்து பின்வரும் பகுதியை வாசித்தார்.

"இறைவனான கடவுள் பின்வருமாறு கூறினார். அவர்கள் சிதறி இருந்த மக்களிடையே இருந்து, யூதர்களைச் சேர்த்தெடுத்து நாடுகளின் கண்களில் அவர்களுக்கு கௌரவத்தை சம்பாதித்துக் கொடுத்தபின் நான் என் ஊழியனான யாக்கோப்புக்குக் கொடுத்த மண்ணில் அவர்கள் வாசம் செய்வார்கள். இங்குதான் உங்களுடைய முதாதையர் வாழ்ந்தார் அவர்களும் அவர்களின் பிள்ளைகளும், பிள்ளைகளின் பிள்ளைகளும் அங்கேயே வாழுவார்கள்."

அரி பென்கானான் பைபிளைக் கீழே வைத்தார். வைற்ஹோலிலிருக்கும் கனவான்கள் தங்களின் உரிமைக் கோரிக்கைகளைப் பற்றி மீளாய்வு செய்வது நல்லது. மூவாயிரம் வருடங்களுக்கு முன், ஒரு உன்னதமான மனிதன், இன்னொரு அடக்கு முறையாளனுக்கு கூறிய அதே வார்த்தைகளை சொல்ல விரும்புகின்றேன்:

"எனது மக்களைப் போகவிடு" (Let my people go)

எனது மக்களைப் போகவிடு அறிக்கையை அனுப்பிய அடுத்த நாள், பிரிட்டிஷ் ட்ரக்குகளை எடுத்துப் பாவித்தது உட்பட கிடியோன் கிட்டத்தின் உள்விபரங்களை அறிக்கையாக்கி வெளியிட்டான். பிரிட்டிஷ் கௌரவம் அதலபாதாளத்துக்குச் சென்றது. மார்க்கின் உபதேசப்படி மற்றப் பத்திரிகையாளரையும், அரி எக்ஸோடசில் ஏறிவர அனுமதித்தான். தொடர்ந்து அவர்கள் கராஒலொசுக்குள் தங்களை அனுமதிக்கும்படி கோரிக்கை எழுப்பத் தொடங்கினர்.

செனில் பிராட்ஷா விமர்சனத்தை எதிர் பார்த்திருந்தவர்தான் ஆனால் இந்த விஷயம் கிளம்பும் ஆரவாரத்தைச் நிறிதும் எதிர்பார்க்கவில்லை. கூட்டத்தைத் தொடர்ந்து கூட்டம் நடந்தது. இந்த நிமிடத்தில், உலகின் கண்கள் கைரேனியாத் துறைமுகத்திலேயே பதிந்திருந்தது. இப்பொது எக்ஸோடசை செல்லவிட்டால் விடயம் பாரதூரமாகிவிடும்.

ஜெனரல் சேர் ரெவர் பிறவுண் மிகுந்த ரகசியமாக சைப்பிரஸ் வந்து நிலையைக் கையேற்று ஏதாவது செய்ய முடியுமா என முயற்சித்துப்பார்த்தார்.

அவருடைய விமானம், அதிகாலை வேளையில் மிகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகளிடையே நிக்கோசியா விமானத் தளத்தில் வந்து இறங்கியது. மேஜர் அலிஸ்ரர் அவரை அங்கு சந்தித்தார். அவர்கள் இருவரும் விரைவாக, இராணுவ அதிகாரிகளின் கார் ஒன்றில் ஏறிக்கொள்ள அது அவர்களைச் சுமந்துகொண்டு பாமாகுஸ்ரா த்லைமையகத்தை நோக்கிவிரைந்தது.

"நான் கதவ்லண்டிடம் இருந்து கையேற்கு முன் உன்னுடன் கதைக்க விரும்புகிறேன். அலிஸ்ரர். உன்னுடைய கடிதம் எனக்குக் கிடைத்தது. நீ கதந்திரமாகக் கதைக்கலாம்."

"சேர், வேலைக்கனைப்பு கதவ்லண்ட் வீழ்த்திவிட்டது அந்த மனிதருக்கு என்னவோ நிகழ்ந்திருக்கிறது. ஒரு பயங்கரக் கனவுக்குப் பிறகு ஒரு பயங்கர கனவாக அவர் காண்பதாக காப்டன் வெல் எனக்குச் சொன்னார். அவர் முழு இரவும் விடியும் வரை நடந்து நினைதோடு, பைபிளை பெரும் பகுதியை பைபிளை வாசிப்பதில் செலவழிக்கிறார்."

"வெட்கக்கேடு" ரெவர் பிறவுண் சொன்னார். "புரூஸ் கதவ்லண்ட் ஒரு அருமையான போர் வீரனாகிறதான். இந்தக் காருக்குள் சொல்லப்பட்டது எதுவும் வெளியே தெரிய வராது என நம்புகிறேன்." என்றார் தொடர்ந்து.

"சரி சேர்" அலிஸ்ரர் பதிலிறுத்தார். கைரேனியா - சைப்பிரஸ் (ஏயி) பிரத்தியேகம்

பாலைவனப் புலி ஜெனரல் சேர் ரெவர் பிறவுண் நேற்று இரவு இரகசியமாக நிக்கேசியாவில் வந்திறங்கினார். சேர் பிரவுண்லிலியன் ஆடைகளை அணிந்திருந்ததோடு, அவரது பயணமும் இரகசிய நடவடிக்கைகளில் மூழ்கியிருந்தது. சம்பவம் நடக்கும் இடத்தில், ரெவர் பிறவுனின் தோற்றம், எக்ஸோடஸ் பற்றிய வைற்ஹோலின் கவலையை ஊர்ஜிதப்படுத்துகிறது. அது தலைமை மாற்றத்தைக் குறிக்காவிட்டாலும், கொள்கை மாற்றத்தைக் குறிக்கலாம்.

மார்க் எக்ஸோடசுக்குப் போய் கிரேன செலுத்தும் அறைக்கு அனுப்பும்படி கேட்டான். அவன் நெருக்கடி. மிகுந்திருந்த நடத்தில், வழி

லியோன் யூரிஸ்

தேடிக்கொண்டு செல்லும்போது மிகக் கலவையாக இருந்தான். பின்னைகள் வதங்கிய (Gaunt) தோற்றத்தோடு இருந்தனர். உடலைக் கழுவுவதற்கு நீர் பற்றாக் குறையால், அவர்களில் துர்மணம் கமழ்ந்து கொண்டிருந்தது.

அரி, செலுத்தும் அறையில் எப்போதும் போலவே கலங்காது இருந்தான் மார்க். அவனிடம் சில சிகரெட்டுகளையும், சில பிராண்டிப் போத்தல்களையும் கொடுத்தான். "அங்கே எப்படிப் போகிறது?" அரி கேட்டான்.

"ரெவர் பிறவுண் வந்து சேர்ந்தால் கொள்கை ஏதுவும் மாறவில்லை. இந்தக் கதை இன்னமும் ஆரம்ப நிலையிலேயே எல்லாக் கூட்டத்திலும் இருக்கிறது. நான் எதிர்பார்த்ததை விடப் பெரிதாகிவிட்டது அரி, இங்கே பார் இது எனக்கும் உனக்கும் வேண்டிய விதத்தில் நிகழ்ந்தாகிவிட்டது நீ செய்யத் தொடங்கியதைச் செய்து முடித்து விட்டாய். நீ பிரிட்டிஷாரின் கண்களைக்குத்திக் குருடாக்கி விட்டாய். எனக்குக் கிடைத்த தகவலின் படி பிரிட்டிஷார் பின்வாங்கப் போவதில்லை."

"என்ன சொல்ல விரும்புகிறாய்?"

"இந்த விஷயத்தை நீ, மனிதாபிமான முறையில் செயல்படும் விதத்தில் கப்பலைக் கட்டும்தளத்துக்குக் கொண்டு போவதன் மூலம், சிறைப் வைத்தது போல் ஆக்கலாம். பிரிட்டிஷார் இவர்களைக் கராஒலொஸ் கக்கு நடத்திக் கொண்டு செல்வதை வைத்து மிகப்பெரியளவு பிரச்சாரம் செய்யலாம். அது மக்கள் மனதைக் கிழித்தெறிந்து விடும்."

"இப்படிச் சொல்லச் சொல்லி நிறி சொல்லி அனுப்பினாயா?"

"நீ அப்படிச் சொல்லாதே. கீழே அந்தக் குழந்தைகளைப் பார். அவர்கள் தளரத் தொடங்கி விட்டார்கள்"

"அவர்களுக்கு இப்படி நிகழலாம் என்று அவர்களுக்குத் தெரியும்"

"இன்னொரு விஷயம் அரி, நாங்கள் இப்போ செய்திகளின் முக்கியமான இடத்தைப் பெற்றுக்கொண்டோம். நாளை பிராங் சினட்ரா (Frank Sinatra - பிரபல அமெரிக்கப்பாடகர்) என்காவது ஒரு மதுபானச்சாலையில் யாராவது ஒருவனுக்கு இடது கை முஷ்டியால் குத்திவிட்டால், நாம் முதலாம் பக்கத்திலிருந்து வீசப்பட்டு விடுவோம்."

இப்போ கிரேன செலுத்தும் அறையின் உள்ளே வந்து மெள்ளமாக "ஹலோ மிஸ்ரர் மார்க்கா" என்றான்.

"ஹலோ என் அன்பே, இதோ நிறிவிடம் இருந்து ஒரு கடிதமும் ஒரு பார்சலும் கொண்டு வந்திருக்கின்றேன்"

அவன் நிறியின் கடிதத்தைப் பெற்றுக்கொண்டு, நிறிக்கு ஒரு கடிதத்தை மார்க்கிடம் கொடுத்தான் பார்சலை மற்றைய பார்சல்களுடன் எடுக்காமல் விட்டது போலவே வாங்காமல் விட்டுவிட்டான்.

"நிச்சயமாக, அவன் பார்சலை வாங்கவில்லை என்று எப்படிக் நிறிக்குச் சொல்லுகிறான் இந்தப் பிள்ளை நலமாக இல்லை. அவனுடைய கண்களைச் சுற்றி கருவளையங்களைக் கண்டாயா? இன்னும் சில நாட்களில் மிகுந்த சிரமப்படப் போகிறாய்"

"நாங்கள் பொது மக்கள் அபிப்பிராயத்தை தப்பவைத்துக் கொள்வதைப் பற்றிப் பேசுகிறோம். ஒன்றை மட்டும் தெரிந்து கொள் பார்க்கா. நாங்கள் கராஒலொசுக்குத் திரும்பிப் போகப்போவதில்லை. பதினொன்றை எதிர்பார்த்து இரண்டரை இலட்சம் யூதர்கள் ஐரோப்பாவில் காத்திருக்கிறார்கள். அந்தப் பதினைத் தாக்கப்படுவதால் நாங்கள் மட்டுமல்ல நாளை தொடங்கி உண்மையிலிருப்போராட்டம் ஒன்றை ஆரம்பிக்கப் போகிறோம். உணர்விழக்கும் எல்லாரும் பிரிட்டிஷார் பார்க்கக் கடிதங்களை மேல் தளத்தில் இடித்து விடப் போகிறோம்."

"என்னை என்ன வேறுவென்றால் நாம் கப்பலுக்கு வெளியே பார்க்கா, அதைத் தொடர்ந்து கட்டமொன்றை படமாகி இடக்கவும். நான் விரும்புவேன் என்று நினைக்கிறாயா? எனக்கு இரவுக்கு மேலாடையோ தொலைவு கொடு எனக்கு அந்த டாக்டர் கிளையும், நாசகாரிகளையும் தாக்கவோ தொலைவு கொடு எங்களுக்கு இருப்பதெல்லாம் எங்கள் மனத்துணிவும், நாங்கள் நம்புகின்றவையும் தான் இரண்டாயிரம் வருடங்களாக, எங்களை தொடுக்கி வந்திருக்கிறார்கள். இந்த ஒரு போரில் மட்டுமாவது நாங்கள் வெல்லப்போகிறோம்."

தொடரும்...

இரு வாரத்துக்கு ஒருமுறை கடிதம் மூலம் சந்திப்போம்!

அன்புச் சகோதரமே!

வன்னிக்கு உணவு செல்லும் உயிலங்குளம் வழியான பாதையினை ரண கோஷ இராணுவ நடவடிக்கைக்காக சிறீலங்கா மே மாதம் 26ஆம் திகதி மூடியதை அடுத்து வன்னிப் பகுதியில் பட்டினிச்சாவு நிலைமை தலைதூக்கலாம் என்ற அச்சம் வேகமாகி வருகிறது. இதற்கிடை போக்குவரத்தினை சிறீலங்கா தடுத்துள்ள நிலையில் அவசர சிகிச்சைகளுக்காக வன்னியில் இருந்து மற்றைய வைத்தியசாலைகளுக்கு நோயாளிகளை இடம் மாற்ற முடியாத அவல நிலை அதிகரித்துள்ளது. இந்த சிறீலங்காவின் மிருகத்தனமான சிங்கள பௌத்த இனவெறியினால் எட்டு நோயாளிகள் வேறு வைத்தியசாலைகளுக்கு அவசர சிகிச்சைக்காக கொண்டு செல்ல முடியாத நிலையில் மரணத்தை தழுவியுள்ளனர். தமிழ் மக்களின் உயிரை ஒரு பொருட்டாக மதிக்காத சிறீலங்கா அரசாங்கத்தில் இவ் அப்பாவி தமிழர்களின் உயிரிழப்பு எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தாது என்பது நாமறிந்த ஒன்று. ஆயினும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் தங்கள் சகோதரர்கள் உணவு மருத்துவ வசதிகளின்றி உயிர் பதைக்கும் காட்சி கண்டு சிறீலங்காவின் தமிழீழ மக்கள் உயிர்வதைப்புக்கு எதிராக ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடாத்தியுள்ளனர். முன் கூட்டியே சிறீலங்கா பாதுகாப்புபடைகளுக்கு காரணம் தெரிவித்து அனுமதி பெற்று ஆரம்பமான இந்த யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் இந்த ஊர்வலத்தைக்கூட பரமேஸ்வராக் கல்லூரி சந்தியில் வைத்து சிறீலங்காப்படையினர் தடுத்து நிறுத்தி விட்டதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆயினும் வவுனியாவிலும் மட்டக்களப்பு தென்னிலங்கைப் பல்கலைகழகத்திலும் தமிழீழ மக்கள் தங்கள் வன்னிச் சகோதரங்களின் துன்பம் கண்டு ஆர்ப்பாட்டங்களை நடாத்தியுள்ளமை சிறீலங்கா இராணுவத்தின் ஆயுதப்படைகளின் உயிர் அச்சுறுத்தல்களுக்கும் அஞ்சாது தமிழீழ மக்கள் சிறீலங்காவின் உணவினை ஆயுதமாக்கும் கேவலமான செயலுக்கு எதிராக அணிதிரண்டெழுவதை உலகிற்கு தெளிவாக்கியுள்ளது. முல்லைத்தீவு கிளிநொச்சியிலுள்ள சிறீலங்கா அரசாங்க அதிபர் அலுவலகங்கள் ஐக்கிய நாடுகள் அகதிகள் ஆணையாளர் அலுவலகம் கெயர் நிறுவன அலுவலகம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றுக்கு முன்னால் பாதிக்கப்பட்ட வன்னி மக்கள் உண்ணா நோன்புடன் கூடிய மறியல் போராட்டங்களை நடாத்தி உலகு தங்களை சிறீலங்கா பட்டினி போட்டு நோயினால் கொல்லும் கொடுமையினை பார்த்துக் கொண்டு மௌனமாக இருப்பதற்கு அதிருப்தி தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில் எங்கள் சகோதரங்களுக்காக குரல் எழுப்ப சர்வதேசங்களிலும் உள்ள புலம்பெயர் தமிழர்கள் ஆகிய நாம் கடமைப்பட்டுள்ளோம்.

நாம் சிறீலங்கா சர்வதேச சட்டங்களுக்கு எதிரான வகையில் உணவினை ஆயுதமாகப்பயன்படுத்தி வரும் கொடிய செயலினை உலகிற்கு நன்கு தெளிவாக்க வேண்டும். உணவு ஆயுதமாக்கப்படுகிறது என்பதற்கு சமீபத்தில் உணவு விநியோகத்திற்காக மாங்குளம் ஊடாக வன்னிக்கு செல்லும் A9 பாதையை திறக்க சர்வதேச செஞ்சிலுவை சங்கம் எடுத்த முயற்சிகளை சிறீலங்கா அரசாங்கம் முறியடித்தமை தெளிவாக்கியுள்ளது. தமிழ் மக்களின் நலன் கருதி தமிழீழ விடுதலைப் புலிகள் இந்தப்பாதையை திறக்க கொள்கையளவில் இணக்கம் தெரிவித்ததும் சிறீலங்கா உணவை ஆயுதமாக்கும் தனது திட்டத்தை வெளிப்படையாக்கியது. இந்த A9 பாதையிலிருந்து ஐந்து மைல்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் பின்வாங்கி இப்பகுதியை இராணுவ சூனியப் பிரதேசமாக்க வேண்டுமென்பதே சிறீலங்காவின் பாதை திறப்புக்கான நிபந்தனையாக முன் வைக்கப்பட்டது. இது சிறீலங்கா உணவை ஆயுதமாகப் பயன்படுத்தி

தனது இராணுவ நலனை நிறைவேற்றும் இராணுவ தந்திரோபாயமாக விளங்குகிறது. வவுனியாவுக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான A9 பாதையை திறந்து தனது இராணுவத்தினர்க்கான விநியோகங்களை சீரமைக்க சிறீலங்கா ஆரம்பித்த ஒழுசிக்குறுப் இராணுவ நடவடிக்கையை தமிழீழ விடுதலைப் புலிகள் முறியடித்ததை அடுத்து சிறீலங்காப் படைகள் மாங்குளம் காடுகளுள் சிக்கி நின்று வேறு வேறு வழிகளில் தங்கள் இராணுவ இலக்குகளை அடையப் பகீரதப்பிரயத்தனங்கள் செய்து வருவது இன்றைய யதார்த்த நிலை. இந்நிலையில் A9 பாதையில் இருந்து 5 மைல்கள் தள்ளிபோகும்படியும் யுத்த சூன்ய பிரதேசத்தை இப்பாதைகளை கற்றி உருவாக்கும் படியும் சிறீலங்கா அரசாங்கம் கேட்பது தனது இராணுவ இலக்கை உணவை ஆயுதமாகப் பயன்படுத்தி அடையும் இராணுவ தந்திரோபாயமே. இந்நிலையில் சிறீலங்கா எமது மக்களை வன்னியில் வைத்து பட்டினிச்சாவுக்கு உள்ளாக்க முயற்சிக்கும் செயற்பாடு சிறீலங்காவுக்கு தமிழ் மக்களுக்கு பாதுகாப்பையோ அமைதியையோ வழங்கும் நோக்கோ, போக்கோ கிடையாது என்பதை தெட்டத் தெளிவாக்கியுள்ளது. எனவே ஐக்கிய நாடுகள் சபையின் விதிகளின்படி சிறீலங்கா அரசாங்கம் தமிழர்களை பொறுத்தமட்டில் ஆற்றல் அற்ற அரசாங்கமாகி விட்டது. ஆகவே சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் நேரடியாக அதித மனிதாபத் தேவைகளுடன் உள்ள தமிழீழ மக்களுக்கு மனிதாய உதவிகளை உதவவேண்டும். சிறீலங்காவின் இறைமையை மீறி தமிழீழ மக்களுக்கு நேரடியாக மனிதாய உதவிகளை செய்வதில் ஐக்கிய நாடுகள் சபையும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களும் காட்டி வரும் அலட்சியம் அவை இன அழிப்புக்கு துணைபோகும் குற்றச் செயலாக பார்க்கப்பட வேண்டிய நேரம் இது. ஆகவே இந்நேரத்தில் புலம்பெயர் தமிழீழ மக்களாகிய நாம்தான் சர்வதேச உலகிற்கு இதனை பலமாகச் சுட்டிக்காட்ட வேண்டும். குறிப்பாக துன்பப்படும் தமிழீழ மக்களின் துன்பங்களை எடுத்து விளக்கும் உரிமை தமிழீழ மக்களின் கயறிணை உரிமைப் போராட்டத்தை முன்னெடுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு கொடுக்கப்பட்டு தமிழீழ விடுதலைப் புலிகள் சர்வதேச அமைப்புக்களில் தங்கள் மக்களின் பிரச்சினையை துன்பத்தை எடுத்து விளக்க அவர்களுக்கு தேசிய விடுதலை இயக்கம் என்கிற அங்கீகாரம் கொடுக்கப்பட வேண்டும். இதனை திரும்பவும் திரும்பவும் வலியுறுத்துவதன் மூலமே நாம் எமது மக்களின் துன்பத்தினை மாற்றியமைப்பதற்கான வழிகள் தோன்ற வைக்கலாம். வில்வமடு என்றதுமே 'வெளிக்கிடடி வில்வமடுவுக்கு' நகைச்சுவை நாடகம் சிலருக்கு நினைவுக்கு வரும். அந்த வில்வமடு பிரதேசத்தின் பச்சைப்பசேல் என்ற தெல் வயல்கள் பலருக்கு நினைவுக்கு வரும். ஆனால் அந்தப் பிரதேசத்தின் மீது சிறீலங்காப் படைகள் கடந்த வாரத்தில் கொட்டிய வான்குண்டுகள் அந்தப்பிரதேசத்தில் ரெப்பாளா பாடசாலையில் படிக்கும் 3 வயது பிஞ்சுப்பாலகன் செல்வராசா உதயகுமாரினை துண்டுகளாக்கி கொன்றழித்த கொடுமையினை எங்களில் எத்தனை பேர் உலகிற்கு இடித்துக் கூறுகின்றோம். அந்தப் பிஞ்சுப்பாலகன் தமிழனாகப்பிறந்த ஒரே குற்றத்திற்காக இக்கொலையாகியிருக்கிறதே இதை எப்படி உலகு மௌனமாகப் பார்த்திருக்கலாம். இப்படி எத்தனையோ எத்தனையோ மனிதகுல வரலாற்றின் அவமானங்கள் சந்திக்கவால் சந்திரங்களாக்கப்பட்டும் இன்னும் ஏன் உலகு மௌனமாக இருக்கிறது. இதனை நீயும் நானும் எப்படி மாற்றியமைக்கலாம். சிந்திப்போம். செயல்படுவோம். துயர் துடைக்க நிதியளிப்போம். எங்கள் மக்கள் உணவின்றி மருந்தின்றி வாட எங்கள் குழந்தைகள் சிங்கள இனவெறியர்களின் குண்டுமழைகளில் மாள நாம் மௌனமாக இருக்கும் நிலையை மாற்றுவோம். உலகு உண்மைகளை உணரும் நிலைக்கள்ளாடிகளாக நாம் மாறுவோம்.

அன்பின் ஆசிரியர்
(29.07.1999)

புதிய வெளியீடு
ஒரு தலைவனின் வரவு
தமிழீழ விடுதலைப் புலிகள் தகவல்தொடர்பு செயலகம்

தேடலே வாழ்க்கையாய்...

குடிசை என்றுகூடக் குறிப்பிட முடியாத அந்த வதிவிடங்களைச் சுற்றித்தான் அவர்களின் வாழ்க்கைக் கனவு கரைகிறது.

வாழ்வின் ஒவ்வொரு அணுவிலும் கலந்துள்ள அறிவியலைப்பற்றி அக்கறை கொள்ளவேண்டிய அவசியம் அவர்களுக்கு இல்லை. இயற்கையின் வயிற்றுப் பிராண்டலுக்கு சிறிது ஈயமுடியுமாரி என்ற தேடலே வாழ்க்கையாய்ப் போன ஆதி மானிடரின் நிலையில் இன்றவர்கள்.

நாலு முலைகளையும் இழுத்துக்கட்டிய வெள்ளை விரிப்பின் கீழ் மழையில் நனைந்து, வெய்யிலில் காய்ந்து, பனியில் குளிர்ந்த கற்கால வாழ்வு. என்புதோல் போர்த்திய உருவங்களின் வெளிக்கிளம்பிய விழி உருண்டைகளில் முடிவிலியாகிய ஏக்கப்புகை மண்டலம்.
பசியால் அழுது, களைத்து, மயங்கி,

முலைக் கொன்றாய்ச் சுருண்டுவிட்ட மழலைகளின் முகங்களைப் பார்த்தழும் தாயின் வயிற்றில் துணிக்கமுடியாத தீயின் வெப்பியாரம்.

வாழ்ந்த வீட்டையும், வளமான மண்ணையும் விட்டு வெளியேறிப் போன ஒவ்வொரு முகங்களிலும் பிடுங்கிப் போட்ட நாற்றின் வாட்டம்.

மூன்று நாட்களுக்கும் மேலாகக்கூட மூட்டாத அடுப்பின் நெருப்பும், ஏற்றாத உலையின் கொதிப்பும் அவர்களுக்குள்ளே— நிவாரணத்துண்டுக்காய் நீளும் தன் கைகளையே வெறுப்புடன் பார்க்கும் கண்களின் சுரணிப்பில் மானமுறுக்கின் ஆற்றாமை. பல சாவுகளுக்கு கட்டியம் கூறும் செல்லதிர்வுகளும், உயிர் குடிக்கும் இரும்புப் பறவைகளின் கொடூர இரைச்சல்களும், மண்ணின் பசுமை கிழித்து வரும் பீரங்கி வாய்களும் சூழ்ந்த அவர்களின் வாழ்வுலகம் இருட்டுச் துளியம் ஆக்கப்பட்டுவிட்டது.

கண்களின் ஒளிக்கும், வயிற்றின் குளிர்மைக்குமான அவர்களின் காத்திருப்பு நியாயமானது. விடுதலைக்காக உயிர்களை விதைத்த குழிகளின் கனவுகள் எப்போதும் அவர்களைச் சன்னதம் கொள்ளச் செய்யலை.
அந்த ஒளி நாளில் அவர்கள் பசியோடு ஒன்று கூடுவார்கள். சுரமலர்தொடுத்து, விழிநீரில் விளக்கேற்றி 'வெல்வோம்' என்ற வெற்றிச் சபதமிட்டுக் கலைவார்கள்.
ஒரு பிடிசோற்றுக்கு வக்கற்ற வாழ்வெனினும் வீரகுந்திரத்திற்கு விலை கொடுக்கும் திமிர்வு அவர்களின் தோள்களுக்குண்டு. நாளை விடியும் என்ற நம்பிக்கையுடன் அவர்களின் மெலிந்த பாதங்கள் விடுதலைப் பாதையில் அழுந்தி நடக்கின்றன.

- நீர்வேலி -

உயிர்த்த பாடல்

எத்தனை எத்தனை பாடல்கள் முளிந்தன பூமியில்.
ஒவ்வொரு பாடலும்
அதனதன் இயல்பில்
அழகழகாய் உலவின காற்றில்.

தித்திக்கும் பாடலொன்று இருந்ததாம் எங்களுக்கும்
முன்பொரு காலத்தில்.
மரபணுமுலங்கள் பாடியிருந்தனவாம் பலகாலங்கள்
பருவருதுக்களில் மிதந்துவந்த பறவைகளும்
பாடல் மாந்தி
திசையெலாம் காவினவாம் கிறங்கி.

பாலோடு உயிர்தாரித்து
குருதியினுடாய் கலந்த பாடல்
பிறகொரு காலத்தில் குளிர்ந்துபோயிற்று
மெலிந்து மெலிந்து சுருதி கண்டிற்று.
தொண்டை கட்டி
சாரீரம் மொத்தமும் அசுத்தம் பிசிறிற்று.
பின்பு
அதன் அரவமே இல்லாமல்
மௌனத்தில் உறைந்தது பாடல்
எங்களின் பாடல்.

கல்லுகளான காலத்தில்
எங்களுக்கென்றொரு பாடல் இருந்ததாய்
கல்லுகள் சொல்லின
கற்குறிப்புகளுக்குப் பொருள்விரித்து
போற்றிப் புலம்பிப் பொழுதழித்தோம்.
பாடல் பற்றிய கதையே ஒரு பாடலாயிற்று
பிறகென்ன
அதையே பாடியிருந்தோம் உண்மைப் பாடல் மறந்து.

காத்திருந்த கல்லிடற வந்த திருப்பாதமென
காலாதிகாலப் பெருமௌனச் சாபம்
உதைத்தெழுந்த
ஒரு குரலின் ஓங்காரநாதம்
ஓராயிரம் நாண் இழைந்த வலிதாய்
சொடுக்கொலித்தது சாட்டையென
கனிரென்றது செவிப்பறை.
உறைந்த பாடல்
உச்சஸ்தாயியில் உருகிவழிந்தது.
கத்த சாரீரம் நெஞ்சகலித்த
சூடுதெறித்தது குருதியில்
பாடலாய்த் தகர்ந்திறுகி நாவெல்லாம்.

தூரயிரில் உப்பாக் காற்றிழுத்து
தொண்டை நரம்புகள் புடைக்க
சூல்பெருக்கி நிறைந் பாடலின்
உனது பாடலை.

வானிடை அதன் வெளியெனவாகி
நிரெலாம் அதன் சுரமென்றாரி
பூமி நிலைக்கப் பாடு
உயிர்த்த பாடலை.
பாடலற்ற காற்றிழுக்கும் நாசித்துவாரங்கள் எதற்கு?

- எஸ்.உமாஇப்ராஹிம் -

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive